# அறிவை அறியும் அறிவு!



ப்ரக்ஞன்

# அறிவை அறியும் அறிவு!

ஆக்கம்

ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அறிவை அறியும் அறிவு! |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞன் |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2021 |
| பக்கங்கள் | : | 134 |
| தாள் | : | A5 (5.83" X 8.27") |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அகவிழிப்பு |

**Prajnan** **Website:- paraparam.in**

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | மனம் எனும் கருவி | 22 |
| 2. | மனமும், புத்தியும் | 46 |
| 3. | உள்ளுணர்வும், விழிப்புணர்வும் | 68 |
| 4. | அறிவும், அறியாமையும் | 101 |
| 5. | தனி மனமே பிரபஞ்சமனம் | 126 |

# அறிவை அறியும் அறிவு!

## முன்னுரை

மனிதர்களின் ஒவ்வொரு செயல்களுக்கும் பின்னால், அவர்களது ஏற்றி வைக்கப்பட்ட பல்வேறு எண்ணங்களால் ஆன அவர்களது மனம் அவர்களை அதன் போக்கில் இயக்குகின்றது.

அவர்களும் மனம் போன போக்கில் அப்படியே போய்க் கொண்டு இருக்கின்றனர். ஒரு சாக்கடையில் வாழுகின்ற புழுவுக்கு அழுகிய, நாற்றமடிக்கின்ற உணவுகளையே பெரிதாகக் கருதி, அவைகளையே உணவுகளாக உட்கொண்டு, துன்பத்தை, இன்பமாகக் கண்டு, அந்த இருப்பிடத்திலேயே இறுதிவரை அது வாழ்ந்து மடிகின்றது.

அதுவே, அந்த புழுவுக்கு தெளிந்த நீரைப் பற்றிய, தெளிவான அறிவு இருந்திருந்தால், அது நிச்சயமாக சாக்கடையிலேயே வாழ்ந்து மடிந்திருக்காது. நல்ல நீரோடையில் வாழ்ந்து, நல்ல காய்கறிகளை உணவாக உட்கொண்டு, உன்னதமான வாழ்க்கையை தனது வாழ் நாள் முழுவதும் வாழ்ந்து இன்பத்துடன் மடிந்திருக்கும்.

இந்த இருவேறுபட்ட இன்ப, துன்பங்களுக்குக் காரணம் அறியாமை என்றால் அது மிகையாகாது.

அந்த அறியாமையின் காரணமாக, மனிதர்களும் அந்த அற்ப புழுவைப் போன்றே, தாங்கள் வாழும் துன்பம் நிறைந்த வாழ்க்கையை இன்பம் எனக் கருதி ஏற்றுக் கொள்கின்றனர். மரணத்தின் இறுதிவரை இவர்கள் உண்மையான இன்பத்தை அறியவும் மறுக்கின்றனர்.

அதனால்தான், அவர்கள் தாங்கள் செய்கின்ற செயல்களை எல்லாம், தங்கள் நன்மைக்காக எனக் கருதிக் கொண்டு செய்து, இறுதியில் அதன் வாயிலாகவே பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர்.

ஏன்? இவர்கள் இன்பத்திற்கும், துன்பத்திற்கும் இடையே சிக்கிக்கொண்டு தத்தளிக்கின்றனர் என்றால், இவர்கள் மனதின் ஆதிக்கத்தில் இருந்துக் கொண்டு செய்கின்ற செயல்களினால் துன்பத்தையும், அறிவின் ஆதிக்கத்தில் இருந்துக் கொண்டு செய்கின்ற செயல்களினால், இன்பத்தையும் என இருவேறு அனுபவங்களை அடைகின்றனர்.

இதிலே எவர் ஒருவர் தன் மனதை புத்தியால் விசாரித்து, அறிவை அறிந்து கொள்கின்றாரோ, அவரே அந்த மனதில் இருந்து விடுபட்டு, மகத்தான அந்த அறிவாகவே மாறி, மலர்ந்து விடுகின்றார். இவரைத்தான் “**ஞானி**” என்கின்றோம்.

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே.**

இவ்வாறு தன்னை அறிந்த தத்துவ ஞானிகள் மட்டுமே, தங்களை அந்த அறிவாகவே அறிந்து, அந்த அறிவினாலேயே அவர்களது முன்னை வினையின் முடிச்சை அவிழ்க்கின்றனர், பின்னை வினையைப் பிசைந்து பிணைகின்றனர் என்று தனது திருமந்திரத்தில் திருமூலரும் அறிவை அறியச் சொல்கின்றார்.

அந்த ஞானிகள் அடைந்த அனுபவ உண்மை என்பது, தனக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேகமான ஆறாவது அறிவைக் கொண்டு நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து, அதன் வாயிலாக இந்த உலகிற்கு அவர்கள் உணர்த்த விரும்பியது '**அறிவால் அறிவை அறி**' என்பதையே ஆகும்.

ஆனால், மனிதர்களாகப் பிறந்த அனைவருமே தங்களுக்கு கொடுக்கப்பட்ட ஆறாவது அறிவால் அனைத்தையும் பகுத்தறிந்து அந்த அறிவை அறிகின்றனரா? என்றால், இல்லை என்றே கூறலாம். அதற்குக் காரணம் அந்த "**ஒரே அறிவு**" பிரதி பிம்பிக்கின்ற உபாதிகளைப் பொருத்தே அந்த, அந்த உடலில் வெளிப்படுகின்ற நிலையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றது.

அதாவது பிரகாசமான ஒரே சூரியன் எப்படி பிரதி பிம்பிக்கின்ற உபாதிகளான நீர் நிலைகளைப் பொருத்து, சாக்கடை நீரில் சூரியப் பிரகாசம் சற்று மங்கியதாகவும், அதுவே தெளிந்த நீரில் சூரியப் பிரகாசம் மிகுந்ததாகவும் காணப்படுவதை நாம் நம் நடை முறையில் காண்கின்றோம் அல்லவா?...

அதுப்போன்றே, இருக்கின்ற அந்த ஒரே அறிவு தன்னை பிரதி பிம்பித்துக் கொள்கின்ற உபாதிகளைப் (உடல்களைப்)

பொருத்து, செடி, கொடிகள், மரங்கள் போன்ற தாவரங்களில் ஒரு **அறிவாகவும்**, புழு, பூச்சி இனங்களில் **இரண்டு அறிவுகளாகவும்**, நீர் வாழ்வனவற்றில் **மூன்று அறிவுகளாகவும்,** பறவைகள், விலங்குகள் போன்றவைகளில் **நான்கு, மற்றும் ஐந்து அறிவுகளாகவும்**, மனிதர்களில் **ஆறு அறிவுகளாகவும்** பிரகாசிக்கின்றது.

இந்த அறிவுப் பிரகாசம் என்பது, கற்கின்ற கல்வியினால் உண்டாவதாகக் கருதுவது, நம்மிடையே ஏற்றி வைக்கப்பட்ட அறியாமை என்றே கூறலாம். அதாவது, வெளியே நாம் கற்கின்ற விசய, சுகங்களில் இருந்து '**அறிவு**' உண்டாவதாகக் கூறுவது அறியாமை என்றே அறியப்பட வேண்டும்.

**அகர முதல எழுத்தெல்லாம்**
**ஆதிபகவன் முதற்றே உலகு.**

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தன் முதல் குறளில் இறைவனை பற்றி மிகத் தெளிவாக கூறிவிட்டார். "**அகரம்**" [அ] என்ற உயிர் எழுத்தில் தொடங்கி, அதிலிருந்து [ன்] என்ற மெய் எழுத்தின் முடிவு வரை உள்ள அனைத்து எழுத்துகளும் அந்த அகரத்தை (அறிவை) ஆதாரமாகக் கொண்டே உருவாக்கப் பட்டுள்ளது.

அதாவது, "**அகரம்**" [அ] என்ற எழுத்து இல்லாமல், மற்ற எந்த எழுத்துக்களும் உருவாகாதோ, அவ்வாறே, '**அறிவு**' என்ற ஒன்று இல்லாமல், எதையும் அறிய முடியாது.

ஆகையால் "**அகரம்**" என்கின்ற அறிவே இறைவன் எனப்படுகின்றது. அதுவே **அறிவு, அன்பு, ஆதிபகவன், வெட்டவெளி, பிரம்மம், பரமாத்மா** என்று பலவாறாக அழைக்கப்படுகின்றது.

அந்த ஒரே அறிவால், நாம் அறியப்படுகின்ற இந்த உலகம் தோன்றியுள்ளது என்பதைத்தான் மிக எளிதாக தனது குறட்பாவில் திருவள்ளுவர் எடுத்துக்கூறுகின்றார்.

இந்த உலகம் எப்படி இயங்குகிறது?
எதனை அடிப்படையாக வைத்து இயங்குகிறது?

பால்வெளி மண்டலங்கள், அண்டத்தில் இயங்கும் இயக்கங்களும், எண்ணற்ற கிரகங்களும், எண்ணிலடங்கா அதன் சக்திகளும் யாரால் உருவாக்கப்பட்டது?

அந்த இயக்கத்திற்கு ஆதாரமானது எது?

இதுப்போன்ற ஏராளமான கேள்விகள் மனதில் உதிக்கும் பொழுதுதான், அதைப்பற்றிய விசாரம் மேற்கொள்ளப்பட்டு, புத்தியால் நன்மை, தீமைகள் விசாரிக்கப்பட்டு, இறுதியில் அறிவாக அது வெளிப்படத் தொடங்குகின்றது.

ஆகவே, "**அறிவு**" என்ற ஒன்று இருந்தால் மட்டுமே, அனைத்தையும் நாம் அறியவும் முடியும்.

எனவே, இந்த மொத்த பிரபஞ்சத்தின் இயக்கமும் நியதி மாறாமல் ஒரு ஒழுங்குடன் இயங்கவும் முடியும் என்றால், அது அந்த '**ஒரே அறிவு**' இருப்பதினால்தான் என்பதை அறியவும் வேண்டும்.

இவ்வாறு, இந்த மொத்த பிரபஞ்சமும் ஒரு ஒழுங்கில் இயங்குவதை '**ரிதம்**' என்கின்றனர் அந்த அறிவை அறிந்த அறிஞர் பெருமக்கள்.

இவர்கள் அந்த இறைவனை (அறிவை) பற்றி நன்கு அறிந்தவர்கள் என்பதினால், இவர்களை **ஞானிகள், மகான்கள், சித்தர்கள், யோகிகள், சாதுக்கள், ரிஷிகள், முனிவர்கள்** என்று பலவாறாகப் போற்றி புகழ்கின்றோம்.

இவர்களே இறை தத்துவத்தை (அறிவை) இந்த மனித சமுதாயத்திற்கு எடுத்து உணர்த்தியவர்கள்.

இவர்கள் உணர்த்திய உண்மை அறிவை அறியாமல், அறியாமையினால் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களையே நாம் "**அறிவு**" என்று கூறிக் கொண்டு இருக்கின்றோம்.

அந்த அறிவை அறியாமல் அனேக ஆசைகளயும் ஆழமாக இந்த மனதில் வளர்த்துக் கொள்கின்றோம். அந்த மனம் போன போக்கில் போய்க்கொண்டும் இருக்கின்றோம்.

இவ்வாறு, மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங் களையே '**அறிவு**' என்று கருதிக் கொண்டு, அறியாமையிலேயே இன்றுவரை இருக்கின்றோம்.

"**அறிவை அறிவால் அறிவதே அறிவு**" என்பதை அறிந்துக் கொள்வதற்காக மட்டுமே, மற்ற எந்த உடல்களுக்கும் கிடைக்காத பிரத்யேகமான '**பகுத்தறிவு**' இந்த மனித உடலுக்கு கிடைத்துள்ளது.

இப்போது இந்த நூலைப் படிப்பதே, பிரத்யேகமான அந்த அறிவின் துணைக் கொண்டுதான் என்பதை அறிந்துக் கொள்ளவும் வேண்டும்.

இந்த உலகத்தையும், உலகத்தின் செயல்பாட்டையும், இந்த மொத்த பிரபஞ்சத்தின் மர்மங்களையும் அறிந்து கொள்வது என்பது, அந்த அறிவு இருப்பதினால்தான் என்பதையும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

எத்தனையோ ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் இருக்கின்ற நாம், நம் சொரூபத்தை அறிகின்ற அந்த அறிவை, கொடுக்கப்பட்ட புத்தி சக்தியால், விசாரித்து அறியும் பொழுது மட்டுமே, அந்த அறிவே அனைத்துமாகவும் இருக்கின்றது என்ற உண்மை அறிவை அறியவும் முடிகின்றது.

ஆக அதுவே எல்லாவற்றையும் அறிகின்றது என்பதை அறிந்த அறிஞர் பெருமக்கள் அதையே '**அறிவை அறியும் அறிவு**' என்றனர்.

இந்த அறிவை அடிப்படையாகக் கொண்டுதான், ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் தொகுப்பாகிய, மனதின் மேம்பட்ட புத்தி சக்தியை மிகச் சரியாகக் கையாண்டு, அதன் வாயிலாக நன்மை, தீமைகளை பகுத்தறிந்து, நம் சனாதன தர்மம் (பண்டைய ரிஷிகள்) நமக்கு வகுத்துக் கொடுத்த "**அறம், பொருள், இன்பம்**, **வீடு**" என்ற வாழ்வியல் நெறிமுறைகளை நாம் நன்றாக வாழ்ந்துக் காட்டவும் முடிகின்றது.

**அறிவு என்றால் என்ன?** என்பதை எல்லாம் கற்றறிந்த மேதைகளிடம் கேட்டால் “**தனக்கு என்ன தெரியும், என்ன தெரியாது**” என்பதை பகுத்தறிவதுதான் ‘**அறிவு**’ என்கின்றனர். அதாவது, கற்றவர்கள் கல்வி மூலம் பெறுவதெல்லாம் **அறிவு** என்கின்றனர்.

இதையே கல்வி கற்காதவர்களிடம் சென்று கேட்டால், “**அனுபவமே அறிவு**” என்கின்றனர்.

அறிவியல் அறிஞர்களோ நவீன கண்டுபிடிப்புகளையே ‘**அறிவு**’ என்கின்றனர்.

இவ்வாறு அறிவுக்கு அனேக அர்த்தங்கள் கற்பிக்கப் பட்டுள்ளன. இன்னும் சிலரோ, இயற்கையைப் பற்றிய ஞானமே ‘**அறிவு**’ என்கின்றனர்.

இவ்வாறு அறிவு பற்றி அனேகரும், அனேக விதமான விளக்கங்கள் கொடுத்திருப்பினும் **பட்டறிவு, படிப்பறிவு, தொழில் சார்ந்த அறிவு, துறைசார்ந்த அறிவு, பொது அறிவு** என பல்வேறு விதமான அறிவுகள் நடைமுறையில் வெளிப்படுவதை நாமும் காண்கின்றோம்.

அவ்வாறே, ஆன்மீகவாதிகளோ அறிவை **பேரறிவு, சிற்றறிவு,** என இரு வேறு அறிவுகளாக விளக்கமளிக்கின்றனர்.

ஆகவே, இருக்கின்ற அந்த ஒரே அறிவு, பேரறிவு, சிற்றறிவு என்று பிரித்துக் கூறப்படுவது எல்லாமே ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களினால்தான் எனலாம்.

அதாவது, முழுமையான பேரறிவில் இருந்து, சற்று குறைவான சிற்றறிவு என ஒன்று வெளிப்படுமானால், அதை எவ்வாறு முழுமை (பூரணம்) என்று கூற முடியும்?

இதேப்போன்று, அறிவைப் பெறுவதற்கான வழி முறைகளை, அவர்கள் ஒவ்வொருவரும், அவரவர்களின் புரிதலுக்கு ஏற்பவே விளக்கம் அளிக்கின்றனர்.

எனவே, இருக்கின்ற ஒரே '**அறிவு**' பற்றியும், அதை அறியும் வழிமுறைகள் பற்றியும் மட்டுமே இந்த நூல் எளிதாக எடுத்துக் கூறுகின்றது.

ஆனால், இந்த நூலைக் கற்பதற்குக் கூட, பலருக்கும் கடினமாக இருப்பதற்குக் காரணம், நம்மால் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களினால் ஆன ஏற்றத்தாழ்வுகள் என்ற இருமைகள் இருப்பதினால்தான் '**மனம்**' இவற்றை அறிய மறுக்கின்றது.

ஆகவே, மனதின் அடுத்த பரிமாணமான '**புத்தி**' சக்தியைக் கொண்டு, தன்னை அறிந்து, தன் சொரூபமான அறிவாகவே எவர் வாழ்கின்றார்களோ, அவர்களே தர்மம் வகுத்துக் கொடுத்த இறுதி நிலையான '**வீடுபேறு**' என்கின்ற விடுதலையை அடைகின்றார்கள்.

இவர்கள் எதிலிருந்து விடுதலை அடைகின்றார்கள்? என்ற எண்ணம் எழுமானால், அது நம்மிடையே ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் தொகுப்பாகிய '**மனம்**' என்பதிலிருந்துதான் விடுதலை அடைகின்றனர், என்கின்றனர் அறிவை அறிந்த அறிஞர் பெருமக்கள்.

அப்படியானால், மனம் இன்றி, ஒருவர் எப்படி வாழ்வது? மனம் இல்லாவிடில் எப்படிக் காரியம் ஆற்றுவது? மனம் அற்ற நிலையில் நடைப்பிணம் போன்று வாழ வேண்டுமா? போன்ற சந்தேகங்கள் எழுமானால், அவர்கள் கூற வருகின்ற '**அறிவு**' என்பது, ஏற்றி வைக்கப்பட்ட விசயங்கள் அல்ல. அது ஏற்கனவே நம்மிடம் நம் சொரூபமாகவே பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற மெய்யறிவு (சிதாகாசம்) என்கின்றனர்.

இந்த உடலில் (உபாதியில்) கிடைத்துள்ள அறிவைக் கொண்டுதான் '**உண்மை**' எதுவென உணர்ந்து, அந்த அறிவாகவே நாம் இருக்கின்றோம் என்பதையும் உணர முடிகின்றது.

நம்முடைய சனாதன தர்மத்தின் வழி நின்ற, அன்றைய ரிஷிகள் அந்த அறிவாகவே இருந்து, இறுதிவரை இந்த தேகத்தில் இன்பத்துடன் வாழ்ந்துக் கொண்டே, இந்த பூமியில் இருந்துக் கொண்டு, மற்ற கிரகங்களைப் பற்றியும், அத்துடன் பிரபஞ்ச இரகசியங்களையும் உலகிற்கு கொடுக்க முடிந்தது.

அதைத்தான் இன்றைய நவீன விஞ்ஞானம், நவீன கருவி களைக் கொண்டு, ஆராய்ந்து, அதன் உண்மையைக் கண்டறிந்து நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றது.

ஆகவே, '**அறிவு**' என்பது மற்றவர்களால் ஏற்றி வைக்கப் படுகின்ற வெளி விசயங்கள் அல்ல என்றும், அது நம்முள்ளே தானாகவே மலர்ந்து, வெளிபடுகின்ற நம் '**உண்மை உணர்வு**' என்றும் அறிய வேண்டும்.

ஆனால், இன்றைய ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களாக இருக்கின்ற இந்தக் கல்வித்திட்டம் நம்மை அடிமைகளாக ஆக்கிய ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்டு, அன்று முதல் இன்று வரை சிறிதளவும் மாறாமல், அப்படியே அவர்கள் அறிவித்த ஞாயிற்றுக் கிழமை (ஆங்கிலேயர்கள் சர்ச்சுக்கு சென்று வழிபாடு செய்ய ஏதுவாக) விடுமுறை முதற்கொண்டு, அனைத்துமே அன்று முதல், இன்று வரை அப்படியே நடைமுறையில் உள்ளது.

இதில் ஆட்சியாளர்கள்தான் பலவாறாக மாறினார்களே தவிர, மக்கள் மனதில் எந்த மாற்றங்களையும் அவர்கள் ஏற்படுத்தவில்லை. அதனால், அவர்கள் ஏற்றி வைத்துக் கொண்ட அறிவில், எந்த நல்ல மாற்றங்களையும் நாம் இன்று வரை காண முடியாமல் உள்ளது. அதற்குக் காரணம், **அவர்களும் இதே கல்வி முறையில் கற்றவர்கள்** என்பதினால் கூட இருக்கலாம்.

அதனால்தான் என்னவோ, இந்தக் கல்விமுறையில் கற்கும் நாமும், இன்றளவும் மற்றவர்களுக்கு அடிமைகளாகவே இருந்துக் கொண்டு இருக்கின்றோம். அந்த வகையிலே, மாணவர்களாக ஆசியர்களிடத்திலும், தொழிலாளியாக முதலாளிகளிடத்திலும், வாடிக்கையாளர்களாக வணிகங்களிடத்திலும், பிள்ளைகளாக பெற்றோர்களிடத்திலும், மனைவியாக கணவனிடத்திலும், ஏன்? பக்தனாக பகவானிடத்திலும் கூட, நாம் அடிமைகளாகவே ஆக்கப்பட்டுள்ளோம்.

பொதுவாக, ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் தொகுப்பாகிய இந்த "**மனம்**" எல்லாவற்றையும் விரும்புகின்றது. அதனால், அத்தனைக்கும் ஆசைப்படுகின்றது.

அத்துடன் ஆசைப்பட்டதை அடையவும் முயற்சிக்கின்றது. இதன் காரணமாக, ஒன்றை மறந்து விடுகின்றது. அது அத்தனை ஆசைகளுக்கும் காரணமான மனதை, புத்தியைக் கொண்டு விசாரிக்க மறந்து விடுகின்றது.

இந்த மறதியினால், பல்வேறு இன்னல்களுக்கு இந்த மனம் ஆளாகின்றது. ஆகவே, இந்த மனதின் அடுத்த பரிமாணமான புத்தி, விழிப்புணர்வுடன் மனதை கவனித்தவாறே இருந்து விட்டால், இனி அந்த மனம் புத்தியின் கட்டுப் பாட்டுக்குள் வந்து, அந்த அறிவை அறிந்து ஆனந்தம் அடைகின்றது.

அந்த புத்தியைக் கொண்டு, அறிவை அறிவபவனை நாம் "**ஞானி**" என்று அழைப்பதுப் போன்று, அதே புத்தியினைக் கொண்டு, அறிவை அறிகின்ற வழிமுறையைத்தான் '**ஆன்மீகம்**' என்றும் அழைக்கப்பட்டது. ஆன்மீகம் என்றாலே, '**ஆன்மா**' என்ற அறிவைப் பற்றி அறிவதே ஆகும்.

அந்த அறிவை அறிய மட்டும்தான் மனிதனுக்கு மட்டும் பிரத்யேகமான '**பகுத்தறிவு**' கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, ஆன்மீகம் என்ற வார்த்தைக்கு உண்மையான பொருள் என்னவெனில், அந்த ஆன்மாவை (அறிவை) அறிவது மட்டும்தான்.

அதைப் பிரித்துப் பொருள் கூற வேண்டுமாயின், **ஆன்மா + ஈகம்** எனலாம். (**ஈகம்** என்றால் **ஈதல்** என்ற மற்றொரு பொருளில்

'**கொடுத்தல்**' அல்லது '**அர்பணித்தல்**' என்றும் பொருள் கொள்ளலாம்)

அதாவது, தன்னுடைய சொரூபமாகவே அனைத்தும் இருக்கின்றது என்பதை அறிந்து, '**அறிபவன், அறியப்படும் பொருள், அறிவு**' ஆகிய இந்த மூன்றும் **(திரிபுடி)** ஒன்றே எனப் புரிந்து, '**தன்னையே தன்னிடம் அர்பணித்தல்**' என்பதே "**ஆன்மீகம்**" எனப்படுகின்றது.

அதாவது, அந்த ஆன்மாவுக்கு வேறாக இங்கு ஒன்றுமே இல்லை என்பதை, அறிவால் அறிவது மட்டும்தான் '**ஆன்மீகம்**' எனப்படுகின்றது.

அதாவது, அந்த ஆன்மாவை (அறிவை) அறிந்து, அதனை அப்படியே ஏற்றுக்கொண்டு, ஏற்கனவே ஏற்றி வைக்கப் பட்ட ஏராளமான எண்ணங்களை (மனதை), அந்த அறிவிடம் ஒப்படைப்பது ஒன்றையே, இங்கு "**தியாகம்**" என்றும் கூறப்படுகின்றது.

இதை அறிந்துக் கொள்வதையே '**ஆன்ம ஞானம்**' என்றும் கூறப்படுகின்றது.

அதாவது, அர்பணிப்பு மனத்துடன் அனைத்தையும் அந்த அறிவிடம் (ஆன்மாவிடம்) அப்படியே ஒப்படைத்துவிட்டு, அனைத்தையும் அந்த அறிவின் வெளிப்பாடு என்பதை ஏற்றுக் கொண்டு, ஏற்றி வைக்கப்பட்ட **மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்**

என்ற அந்தக்கரணத்தை அப்படியே அந்த அறிவுடன் இணைப்பது ஒன்றையே இங்கு "**சீவ, பிரம்ம ஐக்கியம்**" என்றும் அழைக்கப்படுகின்றது.

அத்தகைய "**அறிவு**" ஒன்று மட்டுமே அறிபவனாகவும், அறியப்படுகின்ற பொருளாகவும் உள்ளது.

இந்த "**அறிவு**" என்பது, ஒரே அறிவாக இருப்பினும், அது '**ஒரு அறிவு**' தாவரங்கள் முதல் '**ஆறு அறிவு**' மனிதன் வரை ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் தொகுப்பாகிய மனதினால், பிரதி பிம்பிக்கின்றது.

'**அந்த மனதை அறிவால் அறிந்துக் கொண்டு, விழிப்புணர்வுடன் நாம் இருந்து வந்தால் மட்டுமே, நாம் அனைத்தையும் அறியும் அறிவை அறிந்தவர்களாக ஆகின்றோம்**' அதன்பிறகு பிரதிபிம்பிக்கின்ற மனமும், அந்த அறிவுடன் அடங்கி, ஆனந்தம் வெளிப்படுவதையும், அந்த அறிவு (ஆன்மா) பிரகாசிப்பதையும் அனுபவமாக உணர்கின்றோம்.

இந்த உண்மையை என்று நாம் அறிகின்றோமோ? அன்றுதான் நாம் "**ஆறறிவு படைத்த**", '**பகுத்தறியத் தெரிந்த**', பகுத்தறிவு உடைய மனிதன் என்று தன்னை அழைத்துக் கொள்ளவும் முடியும். அவனையே அறிவை அறிந்த "**ஆன்ம ஞானி**" என்று போற்றப்படவும் முடியும். அவரே தன்னை அறிந்த '**தத்துவ ஞானி**' என்பதுவும் புரியும்.

ஆகவே, தன்னை யார் என்று விசாரித்து அறிகின்ற அறிவு, மனிதர்களாகிய நமக்கு மட்டுமே சாத்தியம். அதுவே, இதே பூமியில் பிறந்த மற்ற உடல்களுக்கு (சீவர்களுக்கு) இது சாத்தியமில்லை.

எனவே, '**அறிவு**' என்பது மற்ற சீவர்களைக் காட்டிலும், மனிதர்களாகிய நம்மிடம் மட்டுமே சற்று மேம்பட்டு நன்மை, தீமைகளை பகுத்தறியக் கூடிய, '**புத்தி**' சக்தியாகவும் உள்ளது.

இதைத்தான், நம்முடைய முன்னோர்கள் '**மனம், புத்தி, சித்தம், அகங்காரம்**' என்று நான்காகப் பிரித்து, மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட பல்வேறு வெளி விசயங்களைக் கொண்ட எண்ணங்களின் தொகுப்பாகிய "**மனம்**" ஒன்றே தன்னை வெளிப் படுத்திக் கொள்ளும் குணங்களைப் பொருத்து, "**புத்தி**" சக்தியாகப் பிரகாசிக்கின்றது.

அதாவது, ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் மன சலனங்களை அறிந்து, புத்தியால் மனதை விசாரித்து, தேவையற்ற எண்ணங்களை மனதின் இருந்து நீக்கி, விழிப்புற்ற புத்தியால், அறிவை அறிய வேண்டும். அதற்கு மனதின் குணம் மாறியாக வேண்டும்.

அதாவது, மனம் சத்துவ குணத்தில் இருந்துக் கொண்டு, புத்தியின் வாயிலாக விழிப்புற்று, அந்த அறிவை அறிந்து, எப்பொழுதும் எழுகின்ற மனோ சக்தியை, மகத்தான புத்தி சக்தியால் கட்டுப்படுத்தி, மனதை கவனித்துக் கொண்டு இருப்பதையே, "**விழிப்புணர்வு**" என்றும் அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு, தன்னுடைய ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் தொகுப்பாகிய மனதை, எவர் ஒருவர் தன் புத்தி சக்தியால் விசாரித்து நன்மை, தீமைகளை அறிந்து விழிப்பு உணர்வுடன் இருந்துக் கொண்டு, அனைத்தையும் அறிவதற்கு ஆதாரமான "**அறிவு**" ஒன்றே அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது என்பதை அறிந்து, தீதும், நன்றும் பிறர் தருவதினால் வருவதில்லை, தன் மனமே அதற்கு காரணம் என்று அறிந்து, அந்த மனதினால் **சும்மா** இருக்கின்றாரோ, அவரே பற்றற்ற பவித்ரமான "**ஞானி**" என்று அழைக்கப்படுகின்றார்.

ஆகவே, மனம் என்பது அந்த அறிவை அறியக்கூடிய தேவதையாக மாறுவதும், அறியாமையின் பிடியில் சிக்கி சின்னா பின்னம் ஆகக்கூடிய பிசாசாக மாறுவதும் என்பது, அவரவர்கள் ஏற்றி வைத்துக் கொண்டுள்ள எண்ணங்களைச் சார்ந்தது.

ஆகவே, அந்த மனதைப் பழக்கும் விதத்தில் தான் எல்லாம் இருக்கிறது. அந்த வகையிலே, அதை தவறாகப் பழக்கினால் நம்மையே அழிக்கும் **பிசாசு** ஆகின்றது. அதே சமயம், அதை சரியாகப் பழக்கினால் அது வரங்களை அள்ளித் தருகின்ற **தேவதை** ஆகின்றது.

ஆகவே, "**சினம் இறக்க கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும், மனம் இறக்க கல்லாற்கு வாயேன் பராபரமே**!" என்ற தாயுமானவர் பாடல் வரிகளை சற்று ஆழ்ந்து கவனித்து மனதை, அறிவுடன் இணைத்துக் கொண்டு, மனம் அற்ற நிலையில் அறிவுப் பிரகாசத்துடன் வாழ்கின்ற தேவதைகளாகவே '**ஆன்ம ஞானிகள்**' இருக்கின்றனர் என்றால், அது மிகையாகாது.

அவர்களைப் போன்றே இந்த "**அறிவை அறியும் அறிவு**" என்ற நூலைக் கற்று, ஆன்ம ஞானத்துடன், ஏற்றத்தாழ்வுகள் ஏதுமற்ற, இருமைகள் இல்லாத, ஒன்றேயான அந்த ஏக இறைவனை, அறிவாகவே (ஆன்மாகவே) அறிந்து, அவனுக்கு வேறாக எதுவுமே இங்கு இல்லை என்ற அவனது பூரணத் தன்மையை உணர்ந்து, ஒப்புயர்வற்ற உயர் ஞானத்தில் திளைத்து, '**மனிதனும் தெய்வமாகலாம்**' என்பதை, அந்த ஏக அறிவால் எளிதாக அறிய முடிகின்றது.

நன்றி!

**என்றும் அன்புடன்,**

**ப்ரக்ஞன்.**

# 1. மனம் எனும் கருவி

உங்களிடம் ஒரு கணினி (கம்ப்யூட்டர்) என்ற கருவி உள்ளது என்று வைத்துக் கொள்ளுங்களேன். அதை நீங்கள் சரியாகக் கையாளத் தெரிந்தால்தானே, அதன் உபயோகம் முழுவதுமாக உங்களுக்கு இருக்கும். அப்படி இல்லாவிட்டால், இன்னொருவரின் உதவியை அல்லவா! நீங்கள் அவ்வப்பொழுது நாடிக் கொண்டிருக்க வேண்டும். ஆகவே, நீங்கள் அந்தக் கணினி செயல்படுகின்ற விதங்களைப் பற்றியும், அதனை எவ்வாறு இயக்குவது என்பது பற்றியும் தெரிந்து வைத்து கொண்டால், உங்களால் அதை இன்னும் சிறப்பாக செயல்படுத்த முடியும் அல்லவா?...

இந்த உண்மை அப்படியே உங்கள் மனதிற்கும் பொருந்தும்.

பொதுவாக, ஒரு கணினி செயல்பட வேண்டுமாயின் அதற்குத் தேவையான மென்பொருளை (Software), அதனிடம் உள்ள வன் பொருளாகிய (Hardware) **ஹார்ட் டிஸ்க்** என்ற நிரந்தர நினைவகத்தில் ஏற்றி வைத்துக் கொண்டு, எளிதாக அந்தக் கனிணியை இயக்க முடிகின்றது.

அதற்குப் பிறகு அந்த கணினிக்கு ஒரு குறிப்பிட்ட வகை உள்ளீடு (Input) கொடுத்தால், அது ஒரு குறிப்பிட்ட வகை வெளியீடை (Output Data) நமக்கு கொடுக்கும்.




அவ்வாறே, ஒரு கணினி போன்று உங்கள் மனதின் செயல் திறனை, நீங்கள் ஏற்றி வைத்துள்ள எண்ணங்களுக்கு (input) ஏற்றவாறு, ஒரு குறிப்பிட்ட வகை வெளியீடை (output) நாம் நடைமுறையில் காண முடிகின்றது.

வன்பொருளாகிய கணினியை இயக்க, அதற்கு எப்படி ஏற்றிவைக்கப்பட்ட மென்பொருள் தேவையோ, அவ்வாறே இந்த மனித உடலில் உள்ள மூளை என்ற வன்பொருளை இயக்க, எண்ணங்களால் ஏற்றிவைக்கப்பட்ட “**மனம்**” என்ற மென்பொருள் அவசியமாகின்றது.

இதைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளும் முன்பாக, மனதிற்கும், அறிவிற்கும் என்ன வித்தியாசம்? என்பதையும் அறிந்தாக வேண்டும்.

அதாவது, **மனம்**, மற்றும் **அறிவு** என இவைகள் இரண்டும் இரண்டு துருவங்களாக இருந்துக் கொண்டு, நம்மை இரண்டு பக்கங்களிலும் மாற்றி, மாற்றி இழுப்பதை நாம் நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் அனுதினமும் காண்கின்றோம்.

உதாரணமாக, நீங்கள் தினமும் காலையில் 5 மணிக்கு எழுந்து உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று கருதி, தங்களது வீட்டு கடிகாரத்தில் அலாரம் (Alarm) வைத்துவிட்டு தூங்கச் செல்கின்றீர்கள்.

காலையில் சரியாக 5 மணிக்கு அலாரம் அடித்து, அது தங்களை எழுப்பி விடுகின்றது. ஆனால், உங்கள் மனமோ தூக்கத்திலிருந்து, எழுந்திருக்க மறுக்கின்றது. இன்னும் சற்று நேரம் தூங்கலாம் என்று ஆசைப்படுகின்றது.

இந்த நிலையில் உங்கள் அறிவு உங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றது. தினமும் காலையில் சீக்கிரம் எழுந்தால் மட்டுமே நீ ஆரோக்கியத்தை அடைய முடியும், அத்துடன் நீ அடைய நினைக்கின்ற இலட்சியத்தை அடைவதற்கு உடலும், மனமும் பக்க பலமாகவும் இருக்கும்.

எனவே, **நீ சீக்கிரம் விழித்துக் கொள்!** என்று தங்களை தூக்கத்திலிருந்து கட்டாயம் எழுந்து விடுமாறு வற்புறுத்துகின்றது. ஆனால், மனமோ அதை ஏற்க மறுத்து, இன்னும் சற்று நேரம் தூங்கவே விரும்புகின்றது.

இதில், தாங்கள் அலாரத்தை நிறுத்திவிட்டு, இன்னும் சற்று நேரம் தூங்கினீர்கள் என்றால், நீங்கள் மனதின் பிடியில் சிக்கியுள்ளீர்கள் என்று அறியலாம்.

அதுவே, நீங்கள் அலாரத்தை நிறுத்திவிட்டு படுக்கையில் இருந்து எழுந்து விட்டீர்கள் என்றால், நீங்கள் அறிவாக செயல்படுகின்றீர்கள் என்று அறியலாம்.

ஆகவே, மனமும், அறிவும் நம்மை மாற்றி, மாற்றி இரண்டு பக்கங்களிலும் இழுக்கின்றது என்பதை எளிதாக அறிய முடிகின்றது அல்லவா?

அடுத்து, நீங்கள் கலந்து கொண்ட ஒரு திருமண விழாவில் உங்கள் முன்னால் வைக்கப்பட்ட இனிப்பு பலகாரம் உங்களை கை நீட்டி அழைக்கிறது.

ஆனால், நீங்கள் ஒரு சர்க்கரை நோயாளி (Sugar patient) என்பதினால், விட்டில் இனிப்பு என்பதையே தங்கள் மனைவி தங்களுக்கு காட்டாத போது, அந்த இனிப்பைக் கண்டு ஆசையுடன் இப்போது '**ஒன்று சாப்பிட்டால் மிகவும் நன்றாக இருக்கும்**' என உங்கள் மனம் ஆசைப்படுகின்றது.

ஆனால், உங்கள் அறிவு உடனடியாக உங்களை எச்சரிக்கை செய்கின்றது, '**ஏற்கனவே சர்க்கரையின் அளவு அதிகமாக இரத்ததில் கலந்து உள்ளது. இந்த நிலையில் இனிப்பை சாப்பிட்டு, மேலும் சர்க்கரையின் அளவைக் கூட்டிக் கொள்ள வேண்டுமா?**' என்று கேள்வி கேட்கிறது.

அவ்வாறே, உங்களுக்கு நெருங்கிய சொந்தக்காரர் ஒருவர் உங்களிடம் பணம் உதவி கேட்டு வீட்டிற்கு வந்துள்ளார். நீங்களோ '**பாவம் அவன் மிகவும் நல்லவன். நம்ம வீட்டில் தான் பணம் நிறைய உள்ளதே, அவனுக்கு சிறிது கொடுத்து உதவுவோம்**' என்று மனம் சொல்லி கொண்டிருக்கும்போதே, உங்கள் அறிவு உங்களை எச்சரிக்கின்றது.

'**அங்கே மனைவி முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். இப்போது இவருக்கு பணம் கொடுத்தால் நீ காலி**' என்கின்றது.

அதுப்போன்றே, இரவு கண் விழித்து, அதிக நேரம் இண்டெர்நெட்டில் எதை எதையோ உங்கள் மனம் விரும்பி அனுபவித்துக் கொண்டுள்ளது.

'**இவ்வாறு தினந்தோறும் இரவு நீண்ட நேரம் தூக்கம் கெடுவதினால், உங்கள் உடல் நலம் பாதிக்கப்படப் போகிறது. பார்த்து நடந்துக் கொள்**!' என அறிவு எச்சரிக்கை செய்கின்றது.

இது மனதிற்கும், அறிவிற்கும் இடையில் நடக்கின்ற நம்மை இரண்டு பக்கங்களிலும் மாற்றி, மாற்றி இழுக்கின்ற ஒரு **போராட்டம்** எனப்படுகின்றது.

இவ்வாறு சில நேரங்களில் மனம் நல்லதாகவும், அறிவு கெட்டதாகவும், இன்னும் சில நேரங்களில் அறிவு நல்லதாகவும், மனம் கெட்டதாகவும் என மாறி, மாறி இருப்பதை காண்கின்றோம்.

அப்படியானால், இதில் யார் சொல்வதைக் கேட்பது? யார் சொல்வதை மீறுவது...?

இவ்வாறு மனமும், அறிவும் இரண்டு பக்கங்களிலும் மாற்றி, மாற்றி நம்மை இழுக்கும்போது, இதில் எந்தப் பக்கம் நாம் போவது?

மனம் போன போக்கில் போனால், துன்பம் நேருகின்றது. அதுவே புத்தி (அறிவு) கூறியபடி நடைமுறைப்படுத்தினால் இன்பம் விளைகின்றது.

இதிலே, இந்த புத்தியைத்தான் (அறிவை) அன்றைய நம் முன்னோர்கள் '**மனசாட்சி**' என்று கூறினர்.

அதாவது, ஒரு மனிதன் தவறான பழக்க வழக்கங்களில் சிக்கும் பொழுது, அவன் மனம் அதை விரும்பித்தான், அந்த தவறான காரியத்தை அவனால் செய்ய முடிகின்றது.

அதுவே, அவனது புத்தி, அந்தக் காரியத்தை தவறு என்று அவனுக்கு அறிவித்திருந்தும் அவனால், அந்த தவறான காரியத்தை செய்ய முடிந்து, அதனால் துன்பத்தை அடைய முடிகின்றது என்றால், அதற்குக் காரணம் அவன் மனதின் பிடியில் சிக்கிக் கொண்டுள்ளான் என்கின்றனர் நம் அறிஞர் பெருமக்கள்.

அதுவே, அவன் மனசாட்சி (புத்தி) கூறியபடி, அதை தவறு என்று அறிந்து, செய்யாமல் இருந்திருந்தால், அவன் சட்டத்தின் பிடியில் சிக்காமல், துன்பத்தை அனுபவிக்காமல், ஆனந்தமாக வாழ்ந்திருக்க முடியும் அல்லவா?

ஆகவேதான் நம்முடைய பெரியவர்கள் மிகவும் எளிமையாக தவறு செய்பவனைக் கண்டு, அவர்கள் கூறுகின்ற சாதாரண உபதேசம் "**நீ மனசாட்சி படி நடந்துக் கொள்**!" என்று கூறுகின்றனர்.

இந்த மனசாட்சியைத்தான் **அறிவு, ஆன்மா, இறைவன், பிரம்மம், அன்பு, இருப்பு** என்று பலவாறாக அழைக்கிறோம்.

இருக்கின்ற ஒன்றேயான இந்த அறிவு, பிரதிபிம்பிக்கின்ற உடல்களைப் (உபாதிகளைப்) பொருத்து ஏற்றத்தாழ்வுகளுடன் காணப்படுகின்றதே தவிர, உண்மையில், அது சிறிதும் குறையற்ற முழுமையான (பூரணாமான) அறிவாகவே எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டுள்ளது.

அந்த அறிவு ஒன்று மட்டுமே, எல்லாமாக இருக்கின்றது. அதனால்தான், அதை "**இருப்பு**" (Existence) என்றும் நம் சான்றோர்கள் அழைக்கின்றார்கள்

பொதுவாக, ஒருவருக்கு "**அறிவு**" பிரகாசிக்க வேண்டும் என்றால், **இன்பம் - துன்பம், நல்லது - கெட்டது, சரி! - தவறு!, உயர்ந்தது - தாழ்ந்தது** என்ற இருமைகள் இல்லாத நிலையில் மட்டுமே, அந்த உண்மை "**அறிவு**" வெளிப்படுகின்றது.

அவ்வாறு, அந்த உண்மை அறிவாகிய, ஒரே அறிவை அறிய, நம்மிடையே இருக்கின்ற புத்தியைக் கொண்டு, அங்கும், இங்கும் அலைப்பாய்ந்துக் கொண்டிருக்கின்ற மனதை நாம் கவனிக்கத் தொடங்கினால்போதும், நம் மனம் புத்தியின் கவனத்திற்கு உடனடியாக வந்து, அந்த விழிப்புற்ற புத்தி

சக்தியினால், விவேகத்தை அடைந்து, அது அப்படியே அசைவற்று, அந்த அறிவாகவே நிற்கின்றது.

உதாரணமாக, பெரும்பாலானவர்களுக்கு, அவர்கள் ஏதாவது காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, அவர்களை அறியாமலேயே, அவர்கள் கால்கள் தானாகவே ஆடிக் கொண்டிருக்கும்.

இதை கவனித்த அவர் நண்பர் அவரிடம் கால்களை ஏன் தானாகவே ஆட்டிக் கொண்டிருக்கிறாய்? என்று கேட்கிறார். உடனே, அவரது கவனம் கால்களுக்குச் சென்று, அந்த கால்கள் ஆடுவது நிறுத்தப்படுகின்றது.

அவரது கவனம் எதுவரை அந்த கால்களின் மீது இருக்கின்றதோ, அதுவரை அவர் கால்கள் தானாகவே ஆடாமல் அப்படியே, சும்மா நின்றுக் கொண்டு இருக்கின்றது.

இது அப்படியே, உங்கள் மனதிற்கும் பொருந்தும்.

ஆம்!, எப்பொழுதெல்லாம், உங்களது உள்ளுணர்வாகிய புத்தியினால், மனதைக் கவனிக்க ஆரம்பிக்கின்றீர்களோ, அப்பொழுதே உங்கள் மனம் அப்படியே அசையாமல் நிற்கும்.

இது அறிஞர் பெருமக்களின் அனுபவ உண்மை!. வேண்டுமானால், நீங்களும் முயற்சி செய்துப் பாருங்களேன்!.

இவ்வாறு, அறிவைக் கொண்டு, மனதை கவனிப்பதை விடுத்து, வேறு எந்த விதமான செயல்களின் (யோகம், தியானம், மூச்சுப் பயிற்சி) வாயிலாகவும், இந்த மனதை நிரந்தரமாக அசையாது நிறுத்த முடியாது.

பொதுவாக, அத்தகைய பயிற்சிகளின் வாயிலாக தற்காலிகமாக வேண்டுமானாலும் மனம் அடங்கும். அந்த பயிற்சிகளை கைவிடும் பொழுது, மீண்டும் பழையபடி ஆர்பாட்டத்திற்கு மனம் திரும்பிவிடும்.

ஆனால், மனம் நிரந்தரமாக இந்த புத்தியினால், கவனிக்கப்படுகின்ற பொழுது, மனம் தன் வசம் வைத்துள்ள ஆதிக்கத்தை இழந்து, புத்தியின் கட்டுப்பாட்டில் வந்து, அறிவை அறிந்துக் கொண்டு, அந்த அறிவாகவே மலரும்.

இதுவே, நமது சகஜமான நிலை என்றும் அறிந்துக் கொள்ள வேண்டும்.

சரி!, அந்த அறிவை அறிவது எப்படி?

பொதுவாக, ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் அலைப் பாய்கின்ற இந்த மனதை, புத்தியினால் கவனிக்கத் தொடங்கியதை அறிந்த மனம், இனி அதன் போக்கில் போக முடியாமல் தடுக்கப் படுகின்றது. அத்துடன், அந்த மனம் நம் புத்தியின் கட்டுப்பாட்டிற்குள் வந்து விடுகின்றது.

இதன்காரணமாக, எந்த ஒரு எண்ணம் மனதில் உதித்தாலும், உடனடியாக புத்தி அந்த எண்ணத்தின் சாதக, பாதகங்களை சீர் தூக்கிப் பார்க்கின்றது.

அதன்காரணமாக, அந்த எண்ணத்தை நடைமுறைப் படுத்துவதும், நடைமுறைக்கு கொண்டு வராமல் தடுத்து விடுவதும், புத்தியின் வசம் உள்ளது.

இந்த நிலையில் மனம் தன் சுயத்தை இழக்கின்றது. அது அடுத்த பரிமாணமான புத்தியாகவே பிரகாசிக்கின்றது. இவ்வாறு மனமற்ற நிலையில், விழிப்புற்ற புத்தியினால், அறிவை அனுபவமாக அறிந்து, அந்த அறிவாகவே நாம் இருக்கின்றோம் என்பதை எளிதாக உணரவும் முடிகின்றது.

ஆனால், நாம் மனதை கையாளத் தெரியாமல், கண்டபடி ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களால் சிக்குண்டு, சின்னா, பின்னமாக **'பிசாசு'** போன்று, எதையாவது தேடிக்கொண்டு, எதையாவது செய்துக்கொண்டு, எதையாவது பிடித்துக்கொண்டு, நிலை கொள்ளாமல் அங்கும், இங்கும் அலைந்துக் கொண்டிருக்கின்றோம்.

இதில், மனதிற்கான சிந்தனையும், புத்திக்கான சிந்தனையும் நமக்கு மூளையில் இருந்து வெளிப்படுவதாக இன்றைய நவீன அறிவியல் கூறுவதையும் ஏற்றி வைத்துக் கொண்டு, மூளையை வளமாக்கும் பயிற்சிகள், இயற்கை உணவுகள் என எதையாவது தொடர் பயிற்சிகளாக செய்துக் கொண்டே இருக்கின்றோம். ஆனால், மனமற்ற நிலைக்கு வருவதற்கு மட்டும் நாம் தயாராக இல்லை.

அறிவியல் கூறுவதுப் போன்று, இந்த மனித மூளை மகத்தானதாக இருப்பின், மூளை இருக்கின்ற எல்லோரும் ஒரே மாதிரியாக அல்லவா சிந்திக்கும் ஆற்றல் கொண்டிருக்க வேண்டும்? பிறகு ஏன் ஒவ்வொருவரும் ஏற்றத்தாழ்வுகளுடன் மாறி, மாறி சிந்திக்கின்றார்கள், செயல்படுகின்றார்கள்?

அதாவது, மனித மூளையின் வளர்ச்சியைப் பொருத்தே ஒவ்வொருவரின் செயல்பாடுகளும் இருப்பதாகவும், அதிகம் மூளை வளர்ச்சிப் பெறாத சிறிய குழந்தைகளால், மூளை வளர்ச்சி அடைந்த பெரியவர்களைப் போன்று சிந்தித்து செயல் ஆற்ற முடிவதில்லை என்றும் அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன.

உதாரணமாக, மூளை முழுமையாக வளர்ச்சி அடையாத சிறு குழந்தைகள் சாலையைக் கடக்க முயற்சிக்கும் போது, தீடிரென கையை விடுவித்துக் கொண்டு ஓட முயற்சிக்கின்றார்கள். அதுவே, மூளை வளர்ச்சி அடைந்து, பெரியவர்கள் ஆனதும், அதே சாலையின் இருபுறங்களிலும் நின்று நிதானமாகப் பார்த்து கவனத்துடன் சாலையைக் கடக்கின்றார்கள்.

இது மூளையின் பதிந்துள்ள நன்மை, தீமைகளைப் பற்றிய **'அறிவு'** என்று அறிவியல் கூறுகின்றது. ஆயினும், ஆன்மீகம் அதை மறுக்கின்றது.

அதாவது, அறிவியல் கூறுவதுப் போன்று, மனித மூளைதான் மனதிற்கான சிந்தனைக்கும், புத்தியின் சிந்தனைக்கும் காரணம் என்றால், அந்த மூளை நன்கு வளர்ச்சி அடைந்த பிறகுதான், அதன் சிந்திக்கும் ஆற்றலும், புத்தி கூர்மையும் மேம்படுகின்றது என்று வைத்துக் கொள்ள வேண்டும் என்பதாக இருப்பின், அறிவியல் எங்கோ ஒரு இடத்தில் சற்று சறுக்குகின்றது என்றே கூற வேண்டும்.

அது எப்படியெனில், ஒரு சில குழந்தைகள் சின்னஞ்சிறு வயதிலேயே அனைத்து பொது அறிவு கொண்டவர்களாகவும், திருக்குறளின் அனைத்து குறட்பாக்களையும், வரிசை மாறாமல்,

அப்படியே ஒன்று விடாமல் கூறக்கூடிய அதீத திறமை உள்ளவர் களாக உள்ளதை நாம் நடைமுறையில் காண்கின்றோம்.

அத்துடன், சிறியவர்களில், பெரியவர்களை விட அதிக IQ உடையவர்களாகவும், அதீத திறமைகள் கொண்ட அதி புத்திசாலி குழந்தைகளை நாம் பல்வேறு தொலைக்காட்சி ஒலிப்பரப்பு நிலையங்களின், நேர்க்காணல் நிகழ்ச்சிகளில் காண்கின்றோமே!

அவ்வாறு இருக்கையில், இந்த மனித மூளையின் வளர்ச்சிக்கும், புத்தி கூர்மைக்கும் சம்பந்தம் இருப்பது போன்று நடைமுறையில் காண இயல வில்லையே! ஆகவே, அறிவியல் ஆய்வு கூறுவதுப் போன்று, மனித மூளைக்கும், சிந்தனைக்கும் சம்பந்தம் இல்லை என்பது, நிரூபணம் ஆகின்றது.

இங்கு, ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களையே **மனம்** என்று ஆன்மீகம் கூறுவதினால், அந்த மனதின் சூக்ஷும வெளிப்பாடு, இந்த ஸ்தூல மூளையின் வாயிலாக வெளிப் படுகின்றது என்பதே உண்மை.

எப்படி, ஒரு கணினியில் ஏற்றி வைக்கப்பட்ட கண்ணிற்குத் தெரியாத சூக்ஷும மென்பொருள் (Software), நம்மிடம் உள்ள கண்ணிற்குத் தெரிகின்ற கணினியில் பொருத்தப்பட்டுள்ள வன் பொருளாகிய (hardware - Hard disk) நிரந்தர நினைவகத்தின் வாயிலாக செயல்படுகின்றதோ, அவ்வாறே, மனித மூளையும் செயல்படுகின்றது எனலாம்.

இதில், மென்பொருள் (Software) இல்லாமல், ஒரு வன் பொருள் (hardware - Hard disk) மட்டும் இருந்தால், அந்த கணினி எப்படி பயன்பாட்டிற்கு உதவாதோ, அவ்வாறே, **மனம் - புத்தி**

இன்றி, மனிதன் வெறும் மூளையை மட்டும் வைத்துக் கொண்டு என்ன பயன்? காரணம் இறந்த பிணத்திற்குக் கூட மூளை உள்ளதே! ஆனால், அது ஏன் செயல்பட மறுக்கின்றது?

ஆகவே, கண்ணிற்குத் தெரியாத சூக்ஷும மனம் மட்டுமே, தனக்குத் தேவையான விசயங்களை கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூலத்தில் படைத்துக் கொள்கின்றது. அந்த வகையிலேதான் அந்த, அந்த மனதின் விருப்பத்திற்கு ஏற்றவாறு உடலும், உலகமும் படைக்கப்படுகின்றது.

அதாவது, பல்வேறு பிறவிகளாக ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களுக்கு ஏற்ப தனது உடலையும், உலகத்தையும் அந்த மனம் தீர்மானிக்கின்றது.

இதில் ஒவ்வொருவரின் மனமும் தனித்துவம் வாய்ந்தது. அதாவது, இருக்கின்ற ஒரே அறிவு பிரதிபிம்பிக்கின்ற மனதைச் சார்ந்தே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக வெளிப்படுகின்றது.

அவ்வாறு வெளிப்படுகின்ற மென்பொருளாகிய (Software) எண்ணங்கள் நடைமுறைக்கு வருவதற்கு தேவையான வன் பொருளாக (Hardware) இந்த மனித மூளையை பயன்படுத்திக் கொள்கின்றது.

அந்த வகையிலே, ஊறுகாய் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் தங்களுக்கு எழுந்ததும், உடனடியாக, உங்கள் மூளை ஊறுகாய் பாட்டிலைத் தேடி எடுக்கின்றது. அத்துடன் நாவில் சற்று எச்சிலை வரவழைத்து, அந்த ஊறுகாயை ருஷித்து, இரசித்து சுவைக்கவும் தயாராகின்றது.

இதுப்போன்றே, இந்த மனித மூளையின் வாயிலாக, கட்டளைகளைக் கொடுத்து, இந்த உடலின் மூலமாகவே, அனைத்து செயல்களையும் செய்கின்றது.

ஆக, இந்த மனமே அனைத்து செயல்களுக்கும், படைப்புகளுக்கும் காரணம் என்றால், அது மிகையாகாது. அது எப்படியெனில், நீங்கள் ஒரு வீடு கட்டலாம் என்று மனதில் ஒரு எண்ணத்தை விதைக்கின்றீர்கள்.

உடனடியாக, அந்த வீட்டின் சமையலறை எப்படி இருக்க வேண்டும், பூசையறை எப்படி வடிவமைக்கப்பட வேண்டும், படுக்கை அறை, எப்படிப்பட்ட வசதிகளுடன் கூடியதாக இருக்க வேண்டும் என ஒவ்வொன்றையும் உங்கள் மனதினால் முதலில் கற்பனையாக வடிவமைக்கின்றீர்கள் அல்லவா?

இது உங்கள் கண்ணிற்குத் தெரியாத, உங்களால் மட்டுமே உண்டாக்கப்பட்ட கற்பனையில் உள்ள சூக்ஷுமமான வீடு.

அதை கண்ணிற்குத் தெரிகின்ற நிஜத்தில், உண்மையாக ஸ்தூலத்தில் கொண்டுவர வேண்டுமானால், நீங்கள் உடனடியாக ஒரு கட்டிடப் பொறியாளர் ஒருவரை சந்தித்து, அவரிடம் உங்கள் மனம் கற்பித்து வைத்துள்ள வீட்டின் வரை படத்தை கூறி, அதை அவர் வாயிலாக ஒரு வீட்டை நிஜத்தில் (ஸ்தூலத்தில்) கட்டி முடிக்கின்றீர்கள் அல்லவா?

இந்த கற்பனையான வீடு, உண்மையில் உங்கள் அனுபவத்திற்கு வந்தது எவ்வாறு சாத்தியம் ஆனது?

அதாவது, உங்கள் மனம் ஏற்றி வைத்துக் கொண்டிருந்த அந்த கற்பனையான வீட்டை, உண்மையாகவே நடைமுறையில் கொண்டு வந்து விட்டது. இனி அந்த வீடு உங்கள் அனுபவத்திற்கு நேரில் நடைமுறையில் உள்ளது.

இப்படித்தான் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் வாயிலாக, எல்லாமே நம் நடைமுறைக்கு வருகின்றது.

அந்த வகையிலே, நாம் பிறந்த நாடு, மதம், இனம், மொழி, கலாச்சாரம் என்று எதனை மனதில் ஏற்றி வைத்துக் கொண்டு, பிடித்துக் கொள்கின்றதோ, அதையே சரி! என்றும் தீர்மானித்து மனம் போன போக்கில் போய் கொண்டிருக்கின்றோம்.

அதுவே, தன்(இறைவ)னை அறிய விரும்பும் ஆன்மீக சாதகன் சற்றே திறந்த மனதுடன், இந்த மனதையும், உலகத்தையும், கொடுக்கப்பட்டுள்ள **பகுத்தறிவு** என்ற புத்தி சக்தியால் காண முயற்சித்தால், அவனுக்கு அனைத்தும் தெளிவாகத் தெரியும்.

அது நாம் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களில் சிக்கிக் கொண்டுள்ளோம். அத்துடன் நம்மை நாம் மாற்றிக் கொள்ளாமல், மற்றவர்களை மாற்ற முயற்சிக்கின்றோம். பிறந்த மதம், இனம், மொழி மற்றும் கலாச்சாரம் போன்றவைகளில் சிக்கிக் கொண்டுள்ளோம் போன்ற, அனேக அரிய உண்மைகள் வெளிப்பட ஆரம்பிக்கின்றது.

அத்துடன், அடுத்தவர் விவகாரத்தில் தலையிடுவது தவறு என்றும், அது அவரவர்கள் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களுக்கு ஏற்ப வாழ்கின்றார்கள் என்றும் அறிந்துக் கொள்ளவும் முடிகின்றது.

ஆனால், நாமோ, இராமாயணத்தில் வருகின்ற சூர்பனகை எப்படி இராமபிரானின் வாழ்க்கையில் தலையிட்டு, தன் மூக்கை அறுத்துக் கொண்டு போனாலோ, அவ்வாறே, நாமும் அடுத்தவர் குடும்ப விவகாரங்களில் தலையிட்டு, நம் மூக்கை அறுத்துக் கொள்கின்றோம்.

ஆகவே, முதலில் நம்மிடம் உள்ள எண்ணங்களை, விழிப்புற்ற புத்தி சக்தியால் ஆராயந்து, தவிர்க்க வேண்டிய கெட்ட எண்ணங்களை நடைமுறை செயல்களாக மாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமே, தவிர, மற்றவர்களின் ஆசைகளான அவரவர்களின் எண்ணங்களை, அவர்களால் செயல்படுத்த முடியாமல் தடையாக என்றுமே இருக்காதீர்கள்.

ஏனெனில், அவரவர்கள் முன்வினை பதிவுகளான எண்ணங்களுக்கு ஏற்றபடி, அந்த ஆசை எண்ணங்களை அனுபவத்திற்கு கொண்டு வந்து, அவைகள் நல்லதோ, கெட்டதோ நடைமுறையில், செயலாக மாற்றிக் கொண்டு இருப்பார்கள்.

நாம் நம்மை மாற்றிக் கொள்ளத்தான் இந்த பிறவியை பயன் படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, மற்றவர்களை மாற்றுகின்றேன் என்ற முயற்சியினால், அதையும் செய்ய முடியாமல், இதையும் செய்ய முடியாமல், வீணாக வாழ் நாட்களைக் கழித்து, அடுத்த பிறவிக்கு வழிவகை செய்துக் கொள்ளக் கூடாது.

யாருக்கு தன்(இறைவ)னை அறியும் ஆர்வம், தானாகவே உண்டாகின்றதோ, அவர்கள் மட்டுமே, தங்கள் மனதை விசாரித்து, இதுபோன்ற ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களில் இருந்து விடுபடுவார்கள்.

இங்கு ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள் என்பது நல்ல எண்ணம், மற்றும் கெட்ட எண்ணம் என்ற இரண்டும்தான் கூறப்படுகின்றது. இதில், ஒருவருக்கு நல்லதாகப்படுவது, மற்றவருக்கு கெட்டதாகப்படும். அது அவரவர்களின் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களைச் சார்ந்தது.

ஆம்! அவரவர்களுக்கு அவர்கள் செய்கின்ற செயல்களும், சிந்திக்கின்ற சிந்தனைகளும் நல்லதாகவே படும். அதனால்தான் அவர்களை நம்மால் மாற்ற முடியாது என்று அறிய வேண்டும்.

ஆகவே, நாம் மட்டுமே, நம் எண்ணங்களை, கொடுக்கப்பட்ட பகுத்தறிவால், பகுத்துப் பார்த்து, எது நல்லது?, எது கெட்டது? என்பதை அறிந்து, அதில் முதலில் கெட்ட எண்ணங்களை நம் மனதில் இருந்து, முற்றிலுமாக நீக்கி, நல்ல எண்ணங்களை நடைமுறை வாழ்க்கையில் மெல்ல, மெல்ல கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

ஆனால், உண்மையில் இங்கு நல்லது என்றும், கெட்டது என்றும் எதுவுமே கிடையாது. எல்லாமே அவரவர்கள் மனதைப் பொருத்து, ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களைச் சார்ந்தது.

உதாரணமாக, நமக்கு தேநீர் (டீ) அருந்துவது மிகவும் பிடிக்கும் என்பதினால், தினந்தோறும் தேநீர் அருந்துகின்றோம்.

அதுவே, மற்றொருவருக்கு, மது அருந்துவது மிகவும் பிடிக்கும் என்பதினால், அவரும் தினந்தோறும் மதுவை அருந்துகின்றார்.

இதிலே, ஒவ்வொருவருக்கு ஒன்று பிடித்திருக்கின்றது. அதன் வாயிலாக மகிழ்ச்சி உண்டாகின்றது. அவ்வளவுதான்! இதில், எதுவுமே அளவிற்கு மிஞ்சினால், நஞ்சு என்பதை நாம் அறிய மறுக்கின்றோம்.

அதைத்தான் நம் பெரியவர்கள் “**அளவுக்கு மிஞ்சினால், அமிர்தமும் நஞ்சு**” என்று கூறிவைத்தனர்.

ஆகவே, எதுவும் அளவுடன் இருக்க வேண்டும், ஆனால் நாம் அவ்வாறு இருப்பதில்லை, எல்லாவற்றையும் அளவுக்கு மிஞ்சி அனுபவிக்க நினைக்கின்றோம்.

அதற்காக ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களை எல்லாம் நம் நேரடி அனுபவத்திற்கு கொண்டு வரவும் ஆசைப்படுகின்றோம்.

ஆனால், நாம் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்கள் எல்லாமே, நாம் நினைப்பது போன்று, நம் நேரடி அனுபவத்திற்கு உடனடியாக வருவதில்லையே ஏன்? என்ன காரணம்?

இங்குதான் ஒரு முக்கியமான விசயத்தை நாம் நம் கவனத்தில் கொள்ள வேண்டும். அது என்னவெனில், ஏற்றி வைக்கப்படுகின்ற ஏராளமான எண்ணங்கள் நம்முடைய மேல் மனதில் மட்டுமே நின்று விடுவதால், அது நம்முடைய நடைமுறைக்கு உடனடியாக வருவது கிடையாது.

அதுவே, அந்த எண்ணங்கள் ஆழ்மனதிற்கு கொண்டு செல்லப்படும் பொழுது, அது நிச்சயம் நடைமுறைக்கு வந்து விடுகின்றது. இதுவே, இந்த மனதிடம் இருக்கின்ற மகத்தான சக்தி எனப்படுகின்றது.

அதாவது, மேல் மனதில் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்கள் நம் நடைமுறைக்கு உடனடியாக வருவது, நமக்கு அவ்வளவு நல்லதல்ல என்பதை, அந்த அறிவு அறிந்து வைத்துள்ளது.

அதனால்தான், அதுப்போன்ற எண்ணங்களை அவ்வளவு எளிதாக நம் நடைமுறையில் உடனடியாக கொண்டு வருவதில் கட்டுப்பாடு காணப்படுகின்றது.

உதாரணத்திற்கு, ஒரு கதையைக் காணலாம்.

ஒருவன் அடர்ந்த காட்டில் சென்றுக் கொண்டிருந்தான், அப்பொழுது, அவன் களைப்பின் மிகுதியால் ஒரு மரத்தடியில் சற்று ஓய்வு எடுத்தான். அந்த மரமோ, நினைத்ததைக் கொடுக்கும் கற்பக விருட்சம் ஆகும்.

அவன் அந்த மரத்தின் அடியில் அமர்ந்துக் கொண்டு, மனதினால் இப்பொழுது மிகவும் பசியாக இருக்கின்றது. உண்ண உணவு கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தான்.

அவன் நினைத்த மாத்திரத்தில், உடனடியாக அறுசுவை உணவுகள் அவன் முன்பு தோன்றின. இவனும் பசியாக இருந்ததால், அது எப்படி வந்தது என்று கூட கவனிக்காமல், அவசர, அவசரமாக அந்த உணவுகளை உண்டு பசியாறினான்.

பசி அடங்கிய பின்பு, சற்று நேரம் சொகுசாக தூங்க வேண்டும், ஆகவே, ஒரு கட்டில், மெத்தை, தலையணை எல்லாம் இருந்தால், மிகவும் நன்றாக இருக்கும் என்று நினைத்தான்.

உடனடியாக அவன் கேட்ட கட்டில், மெத்தை, தலையணை என எல்லாமே வந்தது. அவனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அட! நாம் கேட்பதெல்லாம் கிடைக்கின்றதே!

இப்பொழுது, எனக்கு என் கால்கள் அதிக தூரம் இந்த காட்டில் நடந்து வந்த காரணத்தினால் வலி எடுக்கின்றது. ஆகவே, இந்த கால்களை சுகமாக அழுத்திக் கொடுக்க, ஒரு அழகான பெண் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தான்.

உடனடியாக ஒரு அழகான பெண் அவன் முன்பு தோன்றி, அவனது கால்களை இதமாக அழுத்திக் கொடுத்தால்.

இவன் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்று விட்டான்.

ஆஹா! என்ன அற்புதம்! எப்படிப்பட்ட ஆச்சரியம்! என்று ஆனந்தமாக படுத்துக் கொண்டிருந்தவனுக்கு, திடீரென அவன் மனதில் ஒரு பயம் வந்து விட்டது.

இந்த காட்டில் என்னையும், இவளையும் தவிர யாருமே இல்லை. இப்பொழுது ஒரு புலி வந்து என்னை அடித்துக் கொன்று விட்டால் என்ன ஆகும்? என்று நினைத்தான்.

அவன் நினைத்தது போன்றே, அங்கு ஒரு புலி தோன்றி, அவனை அடித்துக் கொன்றது. அத்துடன் அவன் வாழ்வும் முடிந்தது.

இந்தக் கதையைப் போன்று, நாம் நினைப்பது எல்லாமே உடனடியாக நடைமுறைக்கு வந்து விட்டால், அவ்வளவுதான், நம் வாழ்க்கை அவ்வளவு சுவாரஸ்யமாக இருக்காது.

எனவேதான், இந்த மனம் மேல் மனதில் நினைப்பதை நடைமுறைக்கு கொண்டு வராமலும், ஆழ் மனதில் நினைப்பதை நடைமுறைக்கு கொண்டு வருவதாகவும் அமைந்திருக்கின்றது.

இங்கு ஒரே மனதை மேல்மனம் என்றும், ஆழ்மனம் என்றும் ஏன் பிரித்து வைத்துக் கொள்கின்றது என்றால், நம்முடைய பல்வேறு பிறவிகளாக சேகரிக்கப்பட்டுள்ள வாசனைகள் (சம்ஸ்காரங்கள்) எல்லாமே, இந்த ஆழ்மனதின் உள்ளேதான் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாகத்தான் நமக்கு வருகின்ற சில நல்ல, கெட்ட எண்ணங்கள் நம்மிடையே ஆச்சரியத்தை அளிக்கின்றது.

அப்படிப்பட்ட எண்ணங்களால் ஏற்றி வைக்கப்பட்ட இந்த மனதை நாம் எப்படிக் கையாள வேண்டும்?

அதற்கு என்ன செய்ய வேண்டும்?

பொதுவாக, நம்முடைய ஆழ் மனதில் இருந்து வெளிப்படுவதை, அப்படியே நம் நடைமுறை அனுபவத்திற்கு கொண்டு வர முடியும் என்றால், ஏன் எல்லோருக்கும் இது அவ்வளவு எளிதாக சாத்தியமாகவில்லை?

அதுவே, ஒரு சிலருக்கு மட்டும் அது எப்படி சாத்தியம் ஆகின்றது?

இங்குதான் ஒரு விசயத்தை நன்கு பகுத்தறிந்து புரிந்துக் கொள்ள வேண்டும். அதாவது, ஒரு வயல் வெளியில் விதைக்கப்பட்ட விதைகள் எல்லாமே ஒன்று போன்று, ஒரே நாளில் விளைச்சலுக்கு வந்து விடுவதில்லை.

அதற்குக்காரணம், சில விதைகள் சில நாட்கள் தாமதமாகவும், சில விதைகள் சில வாரங்கள், சில மாதங்கள் என காலம் கடந்து விளைச்சலுக்கு வருவதை, நாம் நம் நடைமுறை விவசாயத்தில் காண்கின்றோம்.

இதற்குக் காரணம், விதை விழுந்த இடம், தட்பவெப்ப நிலை, சூரிய வெளிச்சம் மற்றும் விதைகள் வளர்வதற்குத் தேவையான நீர் என எல்லாமே சரியாக இருப்பின், அந்த விதை விரைவாக விளைச்சலுக்கு வந்து விடுகின்றது.

அதுவே, சில விதைகள் விழுந்த இடங்கள் சரியாக இல்லாமல் இருந்தால், அந்த விதை விளைச்சலுக்கு வர சில காலங்கள் தாமதம் ஆகின்றது.

அந்த வகையிலே, விதை விழுந்த இடத்தற்கு அருகே ஒரு மரம் இருந்து, அந்த மரத்தின் நிழல், விதைக்கப்பட்ட அந்த விதையின் மீது விழுந்து, சூரிய ஒளியை அந்த விதை நன்றாக பெற முடியாத போதும், அந்த விதைக்குத் தேவையான நீர் சரியாகப் போகாத போதும், சில விதைகள் விழுந்த இடம் பாறைகளாக உள்ள போதும், அந்த விதைகள் விளைச்சலுக்கு வர சில காலங்கள் தாமதம் ஆகின்றது. அல்லது விளைச்சலுக்கு வர முடியாமல் மற்றவைகளால் தடுக்கப்படுகின்றது.

இதுப்போன்றே, நாம் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களில், எல்லா எண்ணங்களுமே நம் நடைமுறை அனுபவத்திற்கு வருவதில்லை.

அதற்குக் காரணம், அந்த எண்ணம் மனதிற்கு அவ்வளவு பிடித்தமானதாக இருக்காது. மற்றவர்களுக்கு பிடித்துள்ளது என்பதற்காக, இந்த மனமும் அதை ஏற்கக் கூடிய கட்டாயத்தில் இருந்திருக்கும். அத்துடன் அந்த எண்ணம் ஆழ்மனம் வரை சென்று, ஆழமாகப் பதியாமல் இருக்கவும் வாய்ப்புகள் உள்ளது.

உதாரணமாக, எப்படி வீடு கட்ட வேண்டும் என்ற ஒரு ஆக்கப்பூர்வமான எண்ணம் நம் நடைமுறை அனுபவத்திற்கு நேரடியாக வந்ததோ, அவ்வாறே, தேவையற்ற வீபரீத எண்ணங்களும், ஆழ்மனதில் பதிந்து விட்டால், அதுவும் நம் நடைமுறை அனுபவத்திற்கு நேரடியாக வந்து விடுகின்றது.

உதாரணமாக, ஒருவர் ஒரு விபத்துக்காப்பீடு செய்ய விரும்பி, நான் விபத்தில் இறந்தால், என் மனைவிக்கு ஐந்து இலட்சம் ரூபாய் ரொக்கம் கிடைக்கும்படி, ஒரு விபத்துக் காப்பீடு போட்டு விடுகின்றார்.

அவர் இனி சாலையில் பயணிக்கும் பொழுதெல்லாம், எனக்கு விபத்து நடந்துவிடுமோ, நான் விபத்தில் இறந்தால் என் மனவிக்கு ஐந்து இலட்சம் ரொக்கப்பணம் விபத்துக் காப்பீடு தொகையாக கிடைக்குமா? அல்லது கிடைக்காதா? போன்ற எண்ணங்களை அடிக்கடி, அவரது மேல் மனதில் நினைத்துக் கொண்டே இருக்கின்றார் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

அதுவே நாளடைவில் அவரது ஆழ்மனதில் சென்று ஆழமாகப் பதிந்தும் விடுகின்றது. இதனால், இவருக்கு ஒரு நாள் விபத்தில்தான் மரணம் நேரிடுகின்றது.

அதற்குக்காரணம், அவரது அந்த எண்ணம் மெல்ல, மெல்ல அவரை அறியாமலேயே, அவரது ஆழ்மன எண்ணமாக மாறிவிட்டது.

இதுதான் இன்று பலரது வாழ்க்கையில் அனுபவமாக பார்க்க முடிகின்றது. அதிக விபத்துக்குக் காரணம் கவனக் குறைவு என்பதைவிட, விபத்தில் சிக்கியவரின் ஆழ்மன பதிவுகள்தான் காரணம் என்பதை எளிதாக அறிய முடிகின்ற அல்லவா?.

ஆகவே, மனம் என்பது ஒரு மகத்தான சாதனம்.

அதை சரியாகக் கையாளத் தெரிந்தால், அது நமக்கு தேவதையாக மாறி, வரங்களை அள்ளித் தருகின்றது. அதுவே, அதைத் தவறாகக் கையாண்டால், அது பிசாசுவாக மாறி, நமக்கு துயரத்தை தருகின்றது.

# 2. மனமும், புத்தியும்

எல்லோருமே ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் மட்டுமே இயக்கப்படுகின்றோம், இதில் யார், யார் எல்லாம் எண்ணங்களை கவனித்து, புத்தியால் ஆராய்ந்து, அறிய வேண்டிய அறிவை அறிகின்றார்களோ, அவர்களே '**ஆத்ம ஞானிகள்**' எனப்படுகின்றார்கள்.

யார், யாருக்கெல்லாம் எது, எது பிடித்திருக்கின்றதோ, அது, அது அவர்களைப் பொருத்தவரை சரியானது. இதில் மற்றவர்கள் அதற்கு மாறான கருத்துக்களை எடுத்துக் கூறினால், இவர்களால் ஏற்க முடியாது. ஏன் எனில், இவர்கள் அந்த விருப்பமான காரியத்தில் சிக்கிக் கொண்டுள்ளார்கள்.

அந்த வகையிலே, ஆன்மீகம் என்ற ஒரு ஆர்வத்தில் வருகின்ற பெரும்பாலானவர்கள், அதன் உண்மைத் தன்மை அறியாமல், மற்றவர்களால் ஏற்றி வைக்கப்படுகின்ற ஏராளமான பொய்யான சடங்கு, சம்பிரதாயங்களில் சிக்கி கொள்கின்றார்கள். காரணம், இவர்களுக்கு அதன் வாயிலாக ஏதாவது நன்மை நடக்கும் என்ற ஆழமான நம்பிக்கை உள்ளது.

உண்மையிலேயே, இவர்களின் அந்த ஆழமான நம்பிக்கையின் அடிப்படையில்தான், அவர்களுக்கான அந்த நன்மையும் நடைப்பெறுகின்றது.

அதனால், அவர்கள் மேலும், இதுப்போன்று ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான மூட நம்பிக்கை எண்ணங்களை பின் பற்றி, நடைமுறைப்படுத்துகிறார்கள்.

இது எப்படி இருக்கிறது? என்றால், **காக்கா உட்கார்ந்து பனம் பழம் விழுந்தது!** என்பதற்கு ஒப்பாகும்.

ஆம்! அந்த பனம் பழம் பழுத்து கீழே விழத் தயாராக இருந்தது. அந்த நேரத்தில் ஒரு காக்கா அந்த மரத்தின் மீது வந்து அமர்ந்ததினால், அந்த பனம் பழம் கீழே விழுந்தது, இதைப் பார்த்தவர்கள் காக்காவினால்தான் அந்தப் பனம் பழம் கொத்தி தள்ளப்பட்டு கீழே விழுந்ததாக நம்பப்படுகின்றது.

இவர்களைத்தான் மூடர்கள் என்று நம் முன்னோர்கள் அழைத்தனர். இவர்களைப் போன்ற அறியாமையில் உள்ள அனேக ஜெனங்களை, ஆன்மீகம் என்ற போர்வையில் அதி புத்திசாலிகள் நன்றாக ஏமாற்றுகின்றார்கள்.

எவருக்கு விழிப்புற்ற புத்தி சக்தி பிரகாசிக்கின்றதோ, அவர்கள் மட்டுமே, இதுப்போன்ற அனேக சடங்கு, சம்பிரதாயங்களை விடுத்து, மனதை விசாரிக்கும் மார்க்கத்தை மேற்கொள்கின்றார்கள்.

விபரீத புத்தி கொண்டுள்ள, விவேகமற்ற இவர்களைப் போன்றவர்கள், எதையாவது செய்து, எளிய முறையில் எல்லாவற்றையும் சாதித்து விடவேண்டும் என்று ஆசைப் படுகின்றார்கள். ஆனால், அவர்களின் ஆசைகள் நிராசை ஆனது மட்டுமே பலனாக பார்க்க முடிகின்றது.

பார்வையற்ற குருடன், மற்றொரு பார்வையற்ற குருடனுடன் சாலையில் நடக்க முற்பட்டால், இருவருமே ஏதாவது ஒரு குழியில் விழுந்து, எழுந்திருக்க வேண்டியது நிச்சயம் நடக்கும்.

அதுவே, விவேகம் உள்ள ஒரு குருடன், பார்வை உள்ள மற்றொருவனை தனக்கு பாதைக் காட்டுமாறு, வழித்துணைக்கு அழைத்துச் சென்றால், அவனால், நிச்சயமாக அவனது இலக்கை சென்று அடைந்திட முடியும்.

இதனைத்தான் **திருமந்திரம்** மிகத்தெளிவாக விளக்கிக் கூறியும், இன்னும் பெரும்பாலான அறியாமை ஜெனங்கள் **ஆன்மிகம்** என்று எதையாவது ஒரு சடங்கு, பூசை, மிருக பலி கொடுத்தல், மந்திரம், மாந்திரீகம், ஜபம், தியானம், மூச்சு, பேச்சு (குறி சொல்லுதல்) என எதையாவது ஒன்றை பிடித்துக் கொண்டு, அவரவர்கள் மனம் போன போக்கிலேயே போய்க் கொண்டு இருக்கின்றார்கள்.

இதற்குக் காரணம், அவர்களிடம் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் தொகுப்பாகிய "**மனம்**" என்ற மகத்தான சக்தியிடம் மாட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த மனதின் அடுத்த பரிமாணமான "**புத்தி**" என்பதின் வாயிலாக நன்மை, தீமைகளை பகுத்தறிய மறுக்கின்றார்கள்.

அந்த மனமே அனைத்து படைப்புகளுக்கும் ஆதாரம் என்பதினால், இன்றைய நவீன விஞ்ஞானமும், ஏற்கனவே ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் தாக்கத்தில், அந்த மனதில் உள்ளதை, அப்படியே நடைமுறையில், நேரடியாக நம்

அனுபவத்திற்கு நிஜத்தில் கொண்டு வந்து கொடுத்து, அதை நவீன கண்டுபிடிப்புகளாக அறிவிக்கின்றார்கள்.

இன்றைய நவீன கண்டுபிடிப்புகளான மருத்துவத் துறையின் சோதனைக் குழாய் குழந்தை (Test tube Baby) என்பதை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரேயே நம் சித்தர் பெருமக்கள் "**கும்பமுனி**" என்ற அகத்திய முனிவரை தாயின் கர்பப்பையில் உள்ள பனிக்குடத்தில் எவ்வாறு குழந்தை வளர்கின்றதோ, அவ்வாறே ஒரு குடத்தின் மூலம் கருவை வளர்த்து, அதை பெற்றெடுத்த பெருமை நம் பண்டைய ரிஷிகளுக்கு உண்டு.

அதுப்போன்றே, பண்டைய இந்தியாவின் அறிவியல் மேதைகள் என்று அழைக்கப்படுகின்ற **ஆரியபட்டா** என்ற ஞானி பீகார் மா நிலத்தில் உள்ள பாட்னாவில் பிறந்தார்.

இவரே இன்றைய நவீன கணினி செயல்படத் தேவையான பைனரி எண்களில் ஒன்றான (0) பூஜ்ஜியத்தைக் கண்டறிந்தவர். இவர் கணிதம், மற்றும் வானவியல் சாஸ்திரத்தை கண்டறிந்த ஞானிகளில் ஒருவர் ஆவார்.

இவர் எழுதிய நூல், "**ஆரியபட்டீயா**" என்பதாகும். கி.பி.499 ஆம் நூற்றாண்டில் இவரது கண்டு பிடிப்பு நிகழ்ந்தது.

அவரைப் போன்றே, அடுத்து **பாஸ்கராச்சார்யா** (இரண்டாம் பாஸ்கரா) இன்றைய கர்நாடக மாநிலத்திலே, **பிஜப்பூர்** என்ற ஊரில் பிறந்தார்.

இவரது சிறந்த படைப்பான "**சித்தாந்த சிரோன்மணி**" என்ற ஒரு நூல், இன்றைய நவீன விஞ்ஞானிகளையே வியப்படையச் செய்யக் கூடிய கணிதம், பீஜ கணிதம், கிரஹ கணிதம், கோளத்யாயம் மற்றும் லீலாவதி என்ற பெரும் பிரிவுகளை உள்ளடக்கியது ஆகும்.

அடுத்து, நம் தமிழ் நாட்டில் உள்ள ஈரோடு மாவட்டத்தில் பிறந்து, கும்பகோணத்தில் வாழ்ந்த கணித மேதை **ராமானுஜம்** போன்ற அனேக அறிவியல் அறிஞர்கள் இருந்தனர்.

இவர்கள் எந்தவிதமான ஏற்றி வைக்கப்பட்ட அறிவியல் அறிவையும் கல்லூரிகளுக்குச் சென்று கற்கவில்லை.

தங்கள் மனதை புத்தியால் விசாரித்து, அந்த அறிவாக மலர்ந்தனர். இவர்கள் எண்ணங்கள் ஏதுமற்ற நிலையில், அந்த அறிவாகவே இருந்து, இன்றைய எல்லா கண்டுப்பிடிப்புகளுக்கும் வழி வகுத்துக் கொடுத்தனர்.

அது எவ்வாறு எனில், எந்த ஒரு விஞ்ஞானியும் ஒரு பொருளைக் கண்டறிய வேண்டுமானால், அதைப் பற்றிய ஒரு அறிவு, அவரிடம் முதலில் ஒரு எண்ணமாக உண்டாகும்.

அதன் பிறகுதான் அவர் அந்த பொருளை நிஜத்தில் கொண்டுவர முயற்சிக்கின்றார். அத்தகைய, அந்த **அறிவு** அவர்களுக்கு மட்டும் எங்கிருந்து வந்தது?

உண்மையில், அந்த ஒரே அறிவு எல்லாமாக இருக்கின்றது. அந்த ஒரே அறிவு மட்டுமே, அனைத்து உடல்களின் வாயிலாக ஒரு அறிவு தாவரங்கள் முதற்கொண்டு, ஆறு அறிவு மனிஹ்டன் வரை, உடல்களின் (மனங்களின்) தகுதிகளுக்கு ஏற்ப ஏற்றத் தாழ்வுகளுடன் பிரகாசிக்கின்றது.

அதிலே, சிறப்பான உபாதியாகிய இந்த மனித உடல் மட்டுமே, அந்த அறிவு பிரகாசிக்கின்ற மிகச் சிறந்த சாதனம் எனப்படுகின்றது.

எப்படி? இருக்கின்ற ஒரே சூரியன் பிரதிமிம்பிக்கின்ற நீர் நிலைகளின் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப, சாக்கடை நீரில் பிரகாசம் குன்றியும், ஆற்று நீரில் பிரகாசமாகவும் காணப்படுகின்றதோ, அவ்வாறே, இருக்கின்ற ஒரே அறிவு, பிரதிபிம்பிக்கின்ற உடல்களின் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப அதிகம் அழுக்கடைந்த மனதில் பிரகாசம் குன்றியும், தெளிந்த மனதில் சற்று பிரகாசம் கூடுதலாகவும் காணப்படுகின்றது.

யார் ஒருவர், தனக்கு கொடுக்கப்பட்ட ஆறாவது அறிவாகிய **பகுத்தறிவு** என்ற நன்மை, தீமைகளை பிரித்தறியும் விவேகத்துடன், மனதை விசாரித்து, விழிப்புற்ற புத்தி சக்தியாக வெளிப்படுத்துகின்றார்களோ, அவர்களே அந்த அறிவின் தெளிவில் ஆனந்தமாக பிரகாசிக்கின்றார்கள்.

இவர்களால் மட்டுமே, எல்லா கண்டு பிடிப்புகளையும் கண்டறியவும் முடியும். கற்றதின் பயனாக, அந்த அறிவை அறிந்து, அதுவாகவே, “**நான் இருக்கிறேன்**” என்று கூறவும் முடியும்.

இதைத்தான் நமது திருவள்ளுவப்பெருந்தகை, கடவுள் வாழ்த்துப்பகுதியில் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்.

**கற்றதினால், ஆய பயனென்கொல் – வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

எனவே, கற்கின்றேன் என்று கண்டதை, கண்டபடி கற்காமல், கற்றதின் பயனாக அந்த அறிவை அறிந்துக் கொள்ள முடியுமா? என்று பாருங்கள்.

அன்றைய பாரத தேசத்திலும், மற்ற நாடுகளிலும் மட்டும் எப்படி அற்புதமான அறிஞர் பெருமக்கள் தோன்றினர். அவர்களால் மட்டும் எப்படி பல்வேறு அற்புதங்களை படைக்க முடிந்தது.

அவர்களுக்கு மட்டும் அந்த தனித்துவம் வாய்ந்த திறமை எவ்வாறு உண்டானது? இத்தகைய படைப்புத் திறன்களுக்கான பிரத்யேகமான "**அறிவு**" அவர்களுக்கு மட்டும் எவ்வாறு வந்தது?

என்றாவது ஒரு நாளாவது, நாம் இதைப்பற்றி யோசித்துப் பார்த்திருக்கின்றோமா?

இல்லை!, நமக்கு நேரமே இல்லை! அந்தளவுக்கு சுறுசுறுப்பாக தினந்தோறும் பணம் சம்பாதிக்க மட்டுமே ஓடிக் கொண்டிருக்கின்றோம். பணம் இருந்தால், பத்தும் செய்யலாம் என்ற எண்ணத்தை ஏற்றி வைத்துக் கொண்டிருக்கிறோம்.


சரி! நமக்குத்தான் நேரமே கிடைக்கவில்லை. கிடைத்து சிந்திக்கத் தெரிந்தவர்களை கேட்டால், அவர்களும் ஒரே வார்த்தையில், **அதற்கெல்லாம் மூளை வேண்டும்** என்று கூறி, தங்கள் அதீத சிந்தனைக்கு, அற்புதமான சிறப்புரைக் கூறி, தப்பித்துக் கொள்கின்றார்கள்.

அது எப்படி? மற்ற மனிதர்களுக்கு இருப்பதுப் போன்றே தான், அவர்களுக்கும் அதே மூளை, அதே இருதயம், அதே கல்லீரல், மண்ணீரல் என உள் உறுப்புகளும், அத்துடன் இரண்டு கைகள், இரண்டு கால்கள் என உடல் வெளி உறுப்புகளும் உள்ளனவே.

நமக்கு வேறாக அவர்கள் உடல் உறுப்புகளில் எந்த விதமான வித்தியாசங்களையும் நாம் காண முடிவதில்லையே!. இன்னும், எளிதாகக் கூற வேண்டுமானால், பெரும்பாலான அறிஞர் பெருமக்கள், நன்றாக இருக்கும் நம்மைவிட உடல் உறுப்புகளில் ஊனமுற்றவர்களாகவே, இருந்துள்ளதையும் நாம் நம் நடைமுறை வாழ்வில் காண முடிகின்றதே!.

இவ்வாறு உடலால் ஊனமுற்று இருக்கின்ற இவர்களைப் போன்றவர்களால் பல்வேறு புதிய, புதிய படைப்புகளை இந்த மனித சமுதாயத்திற்காகப் படைக்க முடியும்போது, அவர்களை விட, உடல் உறுப்புகளால் நன்றாக பிறந்து, வளர்ந்து இருக்கின்ற நம்மால் மட்டும் ஏன் முடியாது?

நம்மால் முடியாமல் போனதற்குக் காரணம், அவர்கள் உடலால் ஊனமுற்றவர்களாகப் பிறந்தும், மனதினால் ஊனமற்று தெளிவாக இருந்தனர். ஆனால், நாமோ உடலால் நன்றாகப் பிறந்தும், மனதினால் ஊனமுற்றவர்களாக இருக்கின்றோம்.




அவர்களிடம் எந்தவிதமான ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களும் இல்லாத, தூய்மையான மனம் இருந்ததினால், அவர்களால், தங்களது மேம்பட்ட புத்தி சக்தியைக் கொண்டு, இந்த உடலும், உலகமும் தோன்றுவதற்குக் காரணமான அந்த அறிவை அறிந்துக் கொண்டு, அந்த அறிவாகவே இருந்து அனைத்தையும் படைத்தனர்.

ஏற்றிவைக்கப்பட்ட எண்ணங்கள் இல்லாதவர்களுக்கு, புத்தி சக்தி சற்று அதிகமாக வெளிப்படும் என்பது அனுபவ உண்மை.

அதனால்தான் குழந்தைகள் அதிகம் புத்திசாலிகளாகவே இருப்பார்கள். ஆனால், நாம்தான் அவர்களுக்கு புத்தி புகட்டுவதாகக் கூறிக்கொண்டு, அவர்களையும் நம்மைப் போன்று, மனதினால் மாட்டிக் கொள்ள வைத்து, சின்னா பின்னமாக்கிக் கொண்டு இருக்கின்றோம்.

அதுவும் இன்றைய காலத்தில் பிறந்துள்ள மனிதன் அந்த மகத்தான மனதிடம் மாட்டிக் கொள்ள என்று, ஏராளமான சமூக ஊடங்கங்கள் (Social Medias) உள்ளன.

அந்தவகையிலே, திரைப்படம் (Cinema), தொலைக்காட்சி (Television), தொலை தொடர்பு (Communication) என ஏராளமான விசய சுகங்கள் இந்த மனதினால் ஏற்றி கொள்ளப்படுகின்றன.

இதுப்போதாது என்று, ஏட்டுக்கல்வி என்பதாக, பள்ளிக் கூடத்திலும், பல்வேறு தலைப்புகளில் பாட புத்தக மூட்டைகளைக் கொடுத்து, அனைவரையும் அதி புத்திசாலிகளாக மாற்ற முடியுமா என்று முயற்சிக்கின்றனர்.

இதற்கான மூளை மனிதனிடம் இருக்க வேண்டும் என்றும் எதிர்ப்பார்க்கின்றனர். இந்த மூளைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற கல்வித்திட்டம் நம் சனாதன தர்மத்தில் கிடையாது.

ஆனால், இது வெளி தேசத்தவர்களால், நம்முடைய பாரத தேச மக்களின் மனதிலே ஏற்றி வைக்கப்பட்டு, ஏட்டுக்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அதற்குக்காரணம், நாம் பிறவியிலேயே அந்த அறிவாக (அறிஞர்களாக) மலர்ந்ததை, மற்ற தேசத்தவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே, அவர்கள் நம் அறிவைக் கண்டு ஆச்சரியம் அடைந்து, பொறாமைக் கொண்டதின் விளைவாக, நாம் அவர்கள் விரித்த வலையில் சிக்கிக் கொண்டோம். சின்னா பின்னமானோம்.

பொதுவாக, நம் பண்டைய அறிஞர்கள் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களுக்கு, என்றுமே முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தவர்கள் கிடையாது. அந்த அறிவாகவே எப்பொழுதும் மலர்ந்து இருந்தார்கள்.

அதன் காரணமாகத்தான் பாரத தேசத்தவர்களாகிய நாம் மட்டுமே, இந்த உலகத்தின் முதல் பல்கலைக்கழகமான "**நாலந்தா பல்கலைக்கழகம்**" என்ற ஒன்றை ஏற்படுத்தி, ஏராளமான அறிவுக் கலைகளை எல்லோருக்கும் அனுபவமாகக் கற்றுக் கொடுத்தோம்.

இதைக் கற்க பல வெளி தேசங்களில் இருந்து வந்த மக்கள், நம் அறிவாற்றலைக் கண்டு பிரமித்துப் போயினர்.

இங்கு கற்க வந்த வெளி தேசத்தவர்களால், நம் பாரத தேசத்தின் புகழ் உலகம் முழுவதும் பரவியது. இதைக் கேள்விப்பட்ட மற்ற பல தேசத்தவர்களும் நம் மீதும், நம் செல்வ வளங்கள் மீதும் ஆசைக் கொண்டு, நம்மை அடிமையாக்கச் செய்த சூழ்ச்சியில் நாம் சிக்குண்டோம்.

நம்முடைய பாரத தேசத்தில் பிறந்த மெய்ஞ்ஞானிகள் எல்லோருமே, தங்கள் கண்டு பிடிப்புகளை, அந்த ஏக அறிவின் வெளிபாடு என்றும், அதற்கான கருவியாகவே இந்த உடல் இருக்கின்றது என்றும் மிகத் தெளிவாக இருந்தனர்.

ஆனால், வெளி தேசத்தவர்களோ, நம்முடைய அறிவியல், ஆன்மீக கண்டு பிடிப்புகளை, அவர்கள் கண்டு பிடித்ததாகக் கூறிக்கொள்ள வேண்டும் என்ற ஆசையில், அதற்கான சதி திட்டத்தை வகுத்தனர்.

அதற்கு முதற்படியாக, நம்முடைய மனதில் ஏராளமான ஆசைகளை ஏற்றி வைத்தனர். அவர்கள் விற்பனைக்காகக் கொண்டு வந்த சில பொருட்களில் நம்மை சிக்க வைத்தனர். அந்த வகையிலே, நாம் தேயிலை, காபி, மது, மாது மற்றும் அனைத்து வெளி தேசத்துப் பொருட்களின் மீதும், அதிக ஆசைகளை வளர்த்துக் கொண்டோம்.

அந்த அறிவாகவே வாழ்ந்துக் கொண்டு இருந்த நம் முன்னோர்களில் இருந்து, மாறுபட்டு, அற்ப மனதிடம் மாட்டிக் கொண்டோம்.

இதன் காரணமாக, நாம் செய்த மிகப்பெரிய தவறு, நமது தேசத்தில், நம்முடன் வாழ்ந்த, நமது உடன்பிறவா சகோதர, சகோதரிகளை நாம் தீண்டத்தகாதவர்களாக மாற்றினோம்.

அதுமட்டுமல்ல!, நம் சகோதரிகளையே ரவிக்கைப் போட அனுமதிக்காமல், அவர்களை அப்படியே மேல் ஆடை இன்றி இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினோம். பெண்களை போகப் பொருட்களாக மாற்றினோம்.

ஆம்!, அவர்கள் விரித்த சதி வலையில் சிக்கி, **தீண்டாமை** என்றதின் காரணமாக சின்னா, பின்னமானோம்.

நாம் நம்முடைய சுய அறிவின் வெளிப்பாட்டை இழந்து, ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களுக்கு அடிமையானது எப்படி? எனில், வெளி தேசத்தவர்களின் மது, மாதுவுக்கு மயங்கிய மன்னர்களின் கீழ் நாம் ஆளப்பட்ட பொழுது, அதன் காரணமாக, ஜாதி வர்ணங்களை கொண்டுவந்து புகுத்தி, குல பேதங்களை கற்பித்து, **ஆண்டான் - அடிமை** என மனிதனை, மனிதனே அடிமைப் படுத்திக்கொண்ட, அவல நிலையான "**தீண்டாமை**" என்ற மிகப்பெரிய நஞ்சை நாம் இந்த சமூகத்தின் மீது ஏற்றி வைத்து விட்டோம்.

அதன் சமஸ்டி (அனைவருக்குமான) கர்மத்தின் காரணமாக, நம்மை நாம் இழந்தோம். நம் சுய அறிவை இழந்தோம். இன்றுவரை எண்ணங்களாக ஏற்றி வைக்கப்படுகின்ற ஏராளமான பாடப்புத்தகங்களை உல்ளடக்கிய கல்வித்திட்டத்தில் இணைந்துள்ளோம்.

நம்மிடம் வியாபாரம் செய்து, பிழைக்க வந்த முகலாயர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் அடிமையாகி, அன்றுமுதல், இன்றுவரை நாம் எல்லா அரசியல்வாதிகளுக்கும் அடிமைகளாகவே உள்ளோம்.

இந்த அடிமைத்தனத்திற்குக் காரணம், நாம் '**தீண்டாமை**' என்ற மிகப்பெரிய தவறை, இந்த பாரத தேசத்து மண்ணில் பிறந்த, நம் உடன் பிறவாத நம் சகோதர, சகோதரிகளுக்குச் செய்தோம்.

அதன் பலனாக, நாம் இன்றுவரை ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களில் சிக்கி சீரழிந்துக் கொண்டுள்ளோம்.

உண்மையான, நம் சுயசொரூபமான "**அறிவு**" சொரூபத்தை அறிய முடியாமல், அறியாமையிலேயே இன்று வரை ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் பிடியில் சிக்கி இருக்கின்றோம்.

எனவே, இனி வரும் இளைய தலைமுறைகள் இதுப் போன்ற ஏற்றத்தாழ்வுகள் ஏதுமற்ற, மனித சமுதாயத்தை படைக்க வேண்டுமானால், நிச்சயமாக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, இன்றைய மனித சமுதாயத்திற்கு "**விழிப்புணர்வு**" கொண்டு வர வேண்டும்.

அதற்கான முதற்படியாக நம் நவீன கல்வித் திட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

இங்கு விழிப்புணர்வு என்பது, ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான மூட நம்பிக்கைகள், முட்டாள்தனமான பழக்க வழக்கங்கள், தவறான எண்ணங்கள் போன்றவைகளை விலக்கி, மனிதர்களாகிய நமக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட நன்மை, தீமைகளை பகுத்தறியும் புத்தி சக்தியினை மேம்படுத்திக் கொண்டு, நம் மனதை விசாரித்து, விழிப்புற்ற புத்தியினால், நம் உண்மை சொரூபமான "**அறிவை**" அறிய முயல வேண்டும்.

அந்த அறிவை அறிய நமக்குத் தடையாக இருப்பது, நாம் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் தொகுப்பாகிய "**மனம்**" என்பதினால், அந்த மனதினை, விழிப்புற்ற புத்தியினால் விசாரித்து, விவேகத்துடன் வாழ முயற்சிக்க வேண்டும்.

பொதுவாக, நாம் ஏட்டுக் கல்வி என்ற பெயரில் கற்கின்ற விசயங்கள் ஆகட்டும், கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர் ஆகட்டும், நம்மை அறியாமை என்ற இருளில் இருந்து, வெளியேற்றி வெளிச்சத்தை தருகின்ற அறிவை அல்லவா? சுட்டிக் காட்ட வேண்டும்.

அதுவே, உண்மையான **கல்வி!,** அவரே, உண்மையான **ஆசிரியர்!**

ஆனால், இன்றைய நடைமுறையில் அப்படியா உள்ளது?

பணம், பதவிக்கு ஆசைப்பட்ட பலரும், பகுத்தறிவற்ற முறையில் நடந்துக் கொண்டு, பணத்தை இலஞ்சமாகக் கொடுத்து, ஆசிரியர் பதவிக்கு வருகின்றனர்.

நல்ல பண்புகளை மாணவர்களுக்கு போதிக்க வருகின்ற ஆசிரியர் பதவிக்கே, தீமையான வழியில் காரியத்தை சாதித்துக் கொண்டு வருகின்ற இவர்களின் வாயிலாகவும், இவர்கள் கற்றுக் கொடுக்கின்ற கல்வியின் வாயிலாகவும், மாணவர்கள் நல்ல பண்பு நலன்களுக்கு மாறிவிட முடியுமா? என்று, இவர்களை வைத்து கல்வி கற்கின்ற மாணவர்களின் நிலையை சற்று எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அவ்வாறே, ஆன்மீகம் என்பதில், “**அந்த அறிவாகவே நீ இருக்கின்றாய்**!” என்று ஆன்மாவை (அறிவை) சுட்டிக் காட்ட வேண்டிய ஆச்சாரியர்கள் பலரும் பகுத்தறிவற்ற முறையில்

பலவாறான கர்ம பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்து, மேன்மேலும், அந்த மாணவனை மனதின் பிடியில் சிக்க வைத்து விடுகின்றனர்.

அத்துடன், அந்த மாணவனும் அதுதான் சரி என்று கருதிக் கொண்டு, அவர்கள் குரு கூறிய, குருட்டு வழிமுறைகளையே நடைமுறையில் கொண்டு வருகின்றான்.

**ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை**
**நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்**
**வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்**
**கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே** - சிவவாக்கியர்.

இவ்வாறு தன் வாழ்நாட்களும் வெகு விரைவாகக் கழிந்து போய், இறுதியில் இவ(இறைவ)னை யார் என்று அறியாமலேயே, அறியாமையினால் மாண்டு போகின்றான்.

**மனமது செம்மையால், மந்திரம் செபிக்க வேண்டாம்!** என்கின்ற மகத்தான மறை மொழி மாந்தர்களின் வார்த்தைகளை மறந்து, மந்திரங்களைக் கூறிக் கொண்டே இருக்கின்றனர்.

மனதின் திறத்தை அறியவே மந்திரங்கள் என்பதை அறியாமல், மனம் போன போக்கில், பல மந்திரங்களை மாற்றி, மாற்றிக் கூறிக் கொண்டு, மேலும், மேலும் மனதின் பிடியில் இன்னும் ஆழமாக சிக்கிக் கொள்கின்றனர்.

அறியாமையில் வருகின்ற மாணவனை, அறிவைப் புகட்டத்தான் ஆச்சாரியர்கள் (ஆசிரியர்கள்) இருக்க வேண்டுமே

ஒழிய, மாணவனை மேலும், மேலும் அறியாமை இருளில் தள்ளி விடுகின்ற, தன் தகுதியை அறியாத ஆசிரியராக இருப்பது, உண்மை ஆச்சாரியர்களுக்கும் இழுக்கு உண்டாக்கும் என்பதை எல்லோரும் அறிய வேண்டும்.

பயிற்சி என்ற முறையில் எதைக் கற்றுக் கொடுத்தாலும், அதனால் மாணவனின் மனம், மகத்தான புத்தி சக்தியை விழிப்படையச் செய்து, அந்த அறிவை அறிய முடியுமா? என்பதை கவனிக்க வேண்டும்.

அதைவிடுத்து, பயிற்சியின் பலனாக அது கிடைக்கும், இது கிடைக்கும் என்று எதையாவதுக் கூறி, மாணவனின் மனதை ஆசை வார்த்தைகளால் அபகரித்து, அவனை தனக்கு, தாஸனாக (அடிமையாக) மாற்றிக் கொள்வது என்பது மன்னிக்க முடியாத குற்றம் ஆகும்.

இத்தகைய ஆச்சாரியர்கள் என்றுமே மேல் நிலைக்கு வரமுடியாமல், மற்றவர்களையும் மேன்மை படுத்த முடியாமல், துயரத்தில் சிக்கி, நரகத்தில் தள்ளப்பட்டு, துர் மரணத்தை அடைகின்றார்கள்.

இங்கு சொர்கம், நரகம் என்ற இரண்டுமே, நம் மனதினால் மட்டுமே அறியப்படுகின்றது. மனதை விசாரித்து, நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து, புத்தியினால் விழிப்புற்ற சாதகன், அதே மனதினால், மகிழ்ச்சியாக அந்த அறிவை அனுபவித்து வாழ்வது ‘**சொர்க்கம்**’ எனப்படுகின்றது.

அதுவே, மனதை விசாரிக்காமல், மனம் போன போக்கில் போய்க்கொண்டு, அறிவை அனுபவம் ஆக்காமல், வாழ முயற்சித்து, அந்த அறியாமை மனதினால், துயரத்தை அடைவது '**நரகம்**' எனப்படுகின்றது.

இதுவே, "**தீதும், நன்றும் பிறர் தர வாரா!**" என்று மிக எளிமையாக நம் பெரியவர்கள் எடுத்துக் கூறினர்.

ஆகவே, கல்வி என்ற முறையில் ஏற்றி வைக்கப்பட்ட ஏதாவது ஒரு சாஸ்திரத்தை பிடித்துக் கொண்டு, அதுவே சரி! என்று அந்த சாஸ்திரத்தையும், அந்த சாஸ்திரத்தை போதித்த குருவையும் பிடித்துக் கொண்டு, விடமுடியாமல், விழி பிதுங்கி அவர்களுக்கு அடிமைகளாகவே மாறி விடுகின்றார்கள்.

படிப்பது என்னவோ?, பற்றற்று இருப்பதை பற்றித்தான், ஆனால், பிடிப்பது என்னவோ?, சாஸ்திரத்தையும், சத்குருவையும் பிடித்துக் கொண்டு, கற்றதினால் ஆன பயனை அறிய முடியாமல் இருக்கின்றார்கள்.

இன்றைய நவீன அறிவியல், ஆதி ஆன்மீகம் என்று, எதைக் கற்றுக் கொள்ள முற்பட்டாலும், மற்றவர்களால் ஏற்றி வைத்துக் கொண்ட விசயங்களையே இவர்கள் கற்கின்றனர்.

ஆனால், யாருமே கற்க வருகின்ற மாணவனின் சுய அறிவை ஆராய்ந்து, அவனிடம் என்ன, என்ன திறமைகள் புதைந்துள்ளது என்பதை அறிந்துக் கொள்ளத் தயாராக இல்லை.

இவர்களின் கட்டாயக் கல்வியை இவனுக்கு திணிப்பதில்தான் இவர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள்.

இவனது பெற்றோர்களும் அறியாமையில் இருப்பதினால், இதுப்போன்ற கல்வி முறைகளையே பெரிதும் விரும்புகின்றார்கள். ஆக, அறிவியல் ஆறிஞர் ஆனாலும், ஆன்ம அறிஞர் ஆனாலும், இவர்கள் இருவரின் ஓட்டமும் ஒன்றை மட்டுமே மையமாக வைத்து ஓடிக்கொண்டு இருக்கின்றது.

அது அந்த ஒன்றேயாகிய "**அறிவு**" என்பதை அறிவதாக மட்டுமே இருக்கின்றது. அந்த வகையிலே, அறிவியலோ '**விஞ்ஞானம்**' என்ற பெயரில், "**கடவுள் துகள்**" கண்டு பிடித்து விட்டேன் என்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. ஆன்மீகமோ '**மெய்ஞ்ஞானம்**' என்ற பெயரில் கடவுளைக் கண்டபடி, கண்டு பிடித்துக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

எனவே, அந்த ஏக அறிவை (இறைவனை) எல்லா வற்றிலும் அறிந்துக் கொண்ட, அறிஞர் பெருமக்கள் மட்டுமே, "**நான்**" என்ற அஹங்காரமற்று, அனைத்தும் அவன் செயல் என்று அமைதி அடைகின்றனர்.

அந்த அறிவாகவே நாம் இருக்கின்றோம், நம்முடைய அறியாமை மட்டுமே, அந்த அறிவை அறிவதற்கு தடையாக இருக்கின்றது என்பதை அறிந்து, அந்த அறிவின் அனுபவம் நம் ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டுமென்றால், முதலில் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்கள் ஏதுமின்றி, புத்தியினால்

விழிப்புடன் இருந்தால், அந்த விழிப்புணர்வு ஒன்று மட்டுமே, இருப்பதை இருப்பதாக நமக்குக் காட்டிக் கொடுக்கும்.

அத்தகைய “**இருப்பு**” எதுவோ, அதுவே, “**அறிவு**”. அதுவே, “**ஆன்மா**”, அதுவே, “**பிரம்மம்**”. ஆக, ‘**அது**’ மட்டுமே “**இருப்பு**” கொண்டுள்ளது.

அதற்கு வேறாக காணப்படுவது எல்லாமே, ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களினால் உண்டான “**மனம்**” என்பதை எளிதாக அறிய முடிகின்றது அல்லவா?

இந்த முறையில்தான், அந்த இருப்பாகவே மாறிய நம் முன்னோர்களான சித்தர் பெருமக்கள், தங்கள் கண்டுபிடிப்புகளை இந்த உலகத்திற்குக் கொடுத்தனர்.

அந்த வகையிலே, அந்த சித்தர் பெருமக்கள் கண்டறிந்த எண்ணற்ற கண்டுபிடிப்புகளை (மருத்துவம், வானவியல், யோகம், விஞ்ஞானம் என ஏராளமான சாஸ்திரங்கள் ...) நாம் தற்பொழுது, நடைமுறையில் அனுபவமாகக் காண்கின்றோம்.

அவர்களைப் போன்றே, நாமும், நம் சொரூபத்தை அறிந்து, அந்த அறிவாகவே மலர்ந்து, பல்வேறு சாஸ்திரங்களை வெளிப்படுத்த முடியும்.

ஆனால், அதற்காக நாம் செய்ய வேண்டியது என்ன?

அது ஏற்கனவே, ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களை விடுத்து, மனதினை, விழிப்புற்ற புத்தியினால் கவனித்து வரவேண்டும்.

அவ்வாறு புத்தியினால், மனதின் சேஷ்டைகளை கவனித்தோமானால், அந்த மனம் தன்னை இந்த புத்தி கவனிக்கின்றது என்று சும்மா இருக்க ஆரம்பிக்கும்.

நாளடைவில், இந்த புத்தியின் வலுவான கவனத்தினால், அந்த மனம் தன்னை அந்த புத்தியுடன் ஒன்றாக இணைத்துக் கொண்டு விடும். இதன் பிறகு, அந்த அறிவை அறிந்துக் கொண்டு, ஆனந்தமாக நம் சொரூபத்தில், நாமும் அந்த சித்தர்களைப் போன்றே, சித்தம் தெளிந்தவர்களாக மாறி விடுகின்றோம்.

அதைவிடுத்து, ஏற்கனவே கூறப்பட்ட சாஸ்திரங்களில் சிக்கிக் கொண்டு, இது உயந்தது, இது தாழ்ந்தது என்ற இருமைகளுடன் கூடிய எண்ணங்கள் இருக்கின்ற வரை, அந்த ஏக அறிவை அறிய முடியாது.

ஆகவே, நம்முடைய அறியாமையை போக்க மட்டுமே சாஸ்திரமும், சத்குருவும் தேவைப்படுகின்றது.

ஆகவே, சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள பல்வேறு கருத்துக்களையே பலவாறாக மாற்றி, மாற்றி கற்றுக் கொண்டு இருப்பதும், அவைகளை பல குருமார்களின் வாயிலாக, அடிக்கடி கேட்பதும் என எல்லாமே “**சிரவணம்**” (கேட்டல்) என்ற முறையில் மட்டுமே நின்று விடும்.

அவ்வாறு, இதுவரை கற்றறிந்த பாடங்களை, அப்படியே நடைமுறையில், புத்தியினால் விசாரித்து, அறிய முற்படுவதை “**மனனம்**” (சிந்தித்தல்) என்ற முறையில் இருக்கும்.

அதுவே, இந்த **சிரவண, மனன** நிலை கடந்து, நாம் இதுவரை கற்றதும், கேட்டதும் ஆன பாடங்களை, மனதில் ஏற்றி வைத்துக் கொண்டுள்ளதை, விழிப்புற்ற புத்தியினால், விசாரித்து, விவேகத்துடன் நடைமுறைக்கு வரவேண்டியது, ஒன்று மட்டுமே "**நிதித்யாஸனம்**" (நடைமுறை அனுபவம்) எனப்படும்.

ஆகவே, எவர் ஒருவர், இதுப்போன்ற ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் உண்டான மனதை, விழிப்புற்ற புத்தியினால் விசாரித்து, **சிரவணம்** என்ற கேட்டதைக் கொண்டு, **மனனம்** என்ற விசாரணைக்குள் நுழைந்து, நன்மை, தீமையை பகுத்தறிந்து, அந்த அறிவாகவே அனுபவத்திற்கு வருவதை **நிதித்யாசனம்** என்றறிந்து, மனமற்ற நிலையில் இருக்கின்றாரோ, அவரையே '**மகாத்மா**' என்று அழைக்கின்றோம்.

## 3. உள்ளுணர்வும், விழிப்புணர்வும்

ஆகவே, அந்த மெய்யறிவு தெளிவாகப் பிரகாசிக்க வேண்டும் என்றால், அதற்குத் தகுதியான நல்ல உடலும், பகுத்தறியக்கூடிய புத்தியும் அவசியம் இருந்தாக வேண்டும்.

இதில், மனதைக் கடந்து, விழிப்புற்ற புத்தியினால் நன்மை, தீமைகளை பகுத்தறிந்து, சித்தம் தெளிந்து, ஞானத்தைக் கொண்டு அறிவை அறிந்தவன் "**சித்தன்**" என்றும், அறியாமையினால், மனதை விசாரிக்காமல், அடக்க முயற்சித்து சித்தம் தடுமாறியவன், "**பித்தன்**" என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஆகவே, ஒருவன் **சித்தன்** ஆவதும், **பித்தன்** ஆவதும், இந்த மனதினால்தான் என்பதை நன்கு அறிந்து, மனதை அடக்க முயற்சிக்காமல், மனதை புத்தியினால் விசாரித்து, அறிவை அறிய வேண்டும்.

மனதை விசாரித்து அறிந்த, விழிப்புற்ற புத்தியினால், விவேகத்தை அடைந்து, "**நான்**" என்ற அஹங்காரத்தை அழித்து, அறிவை அறிவது என்பது, புறப் புலன்களான **தொடு உணர்வு, நாக்கு, மூக்கு, கண்கள்,** மற்றும் **காதுகள்,** என்ற புறக்கரணங்களின் துணையுமின்றி, இந்த மனம், தன்னை விரிவுபடுத்திக் கொண்ட **புத்தி, சித்தம், அஹங்காரம்** போன்ற அகக் கரணங்களின்

துணையுமின்றி, **‘எது தன்னைத் தானே அறிகின்றதோ’** அதுவே, **“அறிவு”** எனப்படுகின்றது.

அந்த அறிவு பிரகாசிக்கக்கூடிய தகுதியான கருவியாகிய இந்த மனித சரீரம், மேலும் சில பிரத்யேகமான தகுதியைப் பெற்றால், அதனால் இன்னும் சிறப்பாக சில காரியங்களை ஆற்ற முடியும் என்பதையும் அறிந்துக் கொண்டு, அதற்கான சாதனமாக இந்த உடலை இன்னும் சிறப்பாகப் பயன்படுத்தி, நம் முன்னோர்கள் வாழ்ந்துக் காட்டியுள்ளனர்.

அந்தவகையிலே, இருட்டில் பார்க்கும் ஆற்றல்…

தூர நடப்பதை இங்கேயே உணரும் ஆற்றல்…

இன்னும் சிலருக்கு கையால் தொடாமல் பொருளை நகர்த்தக்கூடிய ஆற்றல்…

எதிர்காலத்தில் நடப்பதை, இப்பொழுதே அறியும் ஆற்றல்…

என ஏராளமான சித்துக்களை அடைந்தவர்கள் நம் சித்தர் பெருமக்கள். ஆனால், இவைகள் எல்லாம் நம்மைப் போன்ற சாதாரண மனிதனுக்கு சாத்தியமா…?

நாமும் சித்தன் ஆக முடியுமா?

இந்த சித்துக்கள் எல்லாம் நம்மைப் போன்ற சாதாரணமான ஜெனங்களுக்கு அவ்வளவு எளிதாக ஏன் வெளிப்படுவதில்லை?.

மேலும், நாமும் அவர்களைப் போன்றே இரண்டு கண்கள், ஒரு மூக்கு, ஒரு வாய் என சரியாகத்தானே இந்த ஆறு புலன்களைக் கொண்டு பிறந்துள்ளோம்.

பிறகு ஏன் நமக்கு மட்டும் அத்தகைய அபரிமிதமான சக்திகள் வெளிப்படவில்லை?

அதற்குக் காரணம், நாம் மனதை அறியாமல், மனதில் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களுக்கு ஏற்ப, "**நான் செய்கிறேன்**", "**நான் அனுபவிக்கின்றேன்**" (கர்த்தா, போக்தா) என்ற அஹங்காரத்தில் இருப்பதால், எப்பொழுதும், நம் சித்தம் சலனமடைந்து காணப்படுகின்றது.

குழம்பிய நீர் நிலையிலே, எவ்வாறு சூரியப் பிரகாசம் தெளிவாக இருக்காதோ, அவ்வாறே, குழம்பிய சித்தத்தில், அறிவுப் பிரகாசம் தெளிவாக இருக்காது.

அதனால்தான் நம்மால், அவர்களைப் போன்று சித்தன் ஆகவும் முடியவில்லை. சித்துக்கள் பெறவும் முடியவில்லை.

ஆனால், மிக எளிதாக பித்தன் (பைத்தியக்காரன்) ஆகி, மன நல மருத்தவமனையில் அனுமதிக்கப்படுவது மட்டும் மிக நன்றாக நடக்கின்றது.

கொடுக்கப்பட்ட பகுத்தறிவாகிய, புத்தியினால் மனதை விசாரித்துப் பார்த்தோமானால், நாம் அந்த ஆறு புலன்களைக் கொண்டு (ஆறு அறிவுகளாக) கையாளுவதற்குக் காரணமான, அந்த ஒரே அறிவை **("மெய்யறிவை")** அனுபவமாக உணராது இருப்பதுதான் ஆகும்.

ஆகவே, ‘**அறிவு**’ என்பது நம்முள்ளே தானாகவே மலர வேண்டுமே தவிர, மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்டு, எண்ணங்களாக இருக்கின்ற விசய சுகங்களை ‘**அறிவு**’ என்று நினைப்பது, நம்முடைய அறியாமையை வெளிப்படுத்துகின்றது.

ஒன்றுமற்ற பூஜ்ஜியத்திலே, இந்த மொத்த பிரபஞ்சமான ராஜ்ஜியத்தையே அடக்கி, ஆளுகின்ற, ஒரே அறிவு இருப்பதை “**சூன்யம்**” என்றும், “**வெட்டவெளி**” என்றும் நம் முன்னோர்கள் அழைத்தனர்.

ஆக, அறிவு என்பது, ஒன்றுமற்ற வெட்டவெளி, அதை **பூஜ்ஜியம், சூன்யம்** என்று பலவாறாக அன்றைய அறிஞர் பெருமக்கள் அழைத்தனர்.

ஒன்றுமற்ற வெட்ட வெளியே கண்ணிற்குத் தெரியாமல் எங்கும், எதிலும் நிறைந்து இருக்கும் பொழுது, ‘**மகாகாசம்**’ என்றும். அதுவே, இந்த ஸ்தூல சரீரத்தில் உள்ளே நிறைந்து இருக்கும் போது, ‘**சிதாகாசம்**’ என்றும் அழைக்கப்படுகின்றது.

இதிலே, **சித் + ஆகாசம் = சிதாகாசம்** என்பதை ‘**அறிவாகாசம்**’ என்றும் கூறப்படுகின்றது.

**ஆகாசம்** என்ற ஒன்றுமில்லாததில், **சித்** என்ற அந்த ஒரே அறிவு, சிதாகாசமாக ஏற்றி வைக்கப்பட்டு, எல்லா விதமான உடல்களின் வாயிலாக, அதனதன் தகுதிக்கு ஏற்ப, அது பலவாகப் பிரதி பிம்பிக்கின்றது.

அந்த வகையிலே, சூரியன், சந்திரன், கோடானு, கோடி நட்சத்திரங்கள், பல்வேறு விதமான கோள்கள் என இந்த மொத்த பிரபஞ்ச உடலில் **ஒரே அறிவு** பலவாறாக தன்னை பிரதி பிம்பித்துக் கொள்கின்றது.

அத்தகைய பிரபஞ்ச உடலின் ஒரு கூறாக இருக்கும், இந்த பூமி என்ற ஒரு கோளில் வசிக்கும், ஓர் அறிவு தாவரம் முதல் ஆறு அறிவு மனிதன் வரை, அது சிதாகாசமாக (அறிவாகாசமாக) அனைத்து உடல்களிலும், அவைகளின் தகுதிகளுக்கு ஏற்ப, ஏற்றத் தாழ்வுகளுடன் பிரதி பிம்பிக்கின்றது.

ஒன்றேயான அறிவின் பிரதி பிம்பம், மிக அதிகமாக பிரகாசிக்கக் கூடிய உபாதியாகிய, ஒரே ஒரு ஸ்தூல உடல் உண்டென்றால், அது இந்த மனித உடல் மட்டுமே ஆகும்.

அதனால்தான், மனிதன் மட்டுமே, தன்னை யார் என்று, விசாரித்து, தன் உண்மை சொரூபத்தை (அறிவை) அறிந்துக் கொள்ள முடியும்.

மற்ற உடல்களில் பிறந்தவைகளுக்கு அந்த பாக்கியம்கூட இல்லை.

எவ்வாறு, “**நான் இருக்கின்றேன்**” என்று, நம்மை நாம் அறிவதற்கு, மற்றொருவர் வந்து, நம்மை நமக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது அல்லவா?

அவ்வாறே, அந்த "**அறிவு**" இருப்பு கொண்டுள்ள இந்த உடலில், "**நான் இருக்கின்றேன்**" என்று தன்னை அறிவதற்கு, மற்றொரு புற அறிவு (புலன்கள்) உதவ வேண்டிய அவசியம் இருக்காது.

அது சுயம்பிரகாசமாக இருக்கின்றது.

அது பூரணமாக இருக்கின்றது.

அது நிறைவாக இருக்கின்றது.

அதுவே இருப்பாகவும், அறிவாகவும், ஆனந்தமாகவும் இருப்பதினால், அதை "**சத்சிதானந்தம்**" (**சத்** + **சித்** + **ஆனந்தம்**) என்றும் அழைக்கப்படுகின்றது.

அத்தகைய '**ஒரே அறிவு**' எங்கும், எதிலும், நீக்கமற நிறைந்துள்ளதால், அதனை அற்பமான மனித மூளையுடன் ஒப்பிட்டு, ஏற்றி வைக்கப்பட்ட ஏட்டுக் கல்வியை கற்றவர்களை '**அறிவாளிகள்**' என்றால், கல்வி கற்பதற்காக பள்ளிக்கூடமே போகாத பண்டைய ரிஷிகளை என்னவென்று கூறுவது?

அப்படிப்பட்ட, மனித மூளை மகத்தானது என்றால், சுனாமி வந்து, நூற்று கணக்கான மனித உயிர்கள் பிரிந்த போது, மனித மூளைக்கு அப்பாற்பட்ட ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது.

அது, சுனாமியால் இறந்த மனிதனை விட, மீன்கள் அல்லது கால்நடைகளின் எண்ணிக்கை மிக, மிகக் குறைவாக இருந்தது.

அதிலே, சில கட்டடப்பட்ட கால்நடைகளைத் தவிர, மற்ற கால் நடைகள், பறவைகள், பாம்புகள், பல்லிகள் என இந்த நிலத்தில் வாழும் ஏராளமான உயிரினங்கள், அந்த இயற்கைப் பேரழிவு வர போவதை முன்கூட்டியே உணர்ந்து, தங்கள் இருப்பிடத்தைக் காலி செய்துக் கொண்டு சென்று விட்டன.

இங்கு மற்ற உயிரினங்களை விட, ஆறாவது அறிவான பகுத்தறிவு கொண்டவன் மனிதன் என்று மார்தட்டிக் கூறிக் கொள்கின்றோமே தவிர, ஒரு ஆட்டிற்கும், மாட்டிற்கும், பறவைகளுக்கும், பாம்பிற்கும், பல்லிக்கும் தெரிகின்ற ஒரு விஷயம் கூட, இந்த மனித மூளையால் ஏன் தெரிந்து கொள்ள முடியவில்லை?

மற்ற உயிரினங்களின் மூளையுடன் ஒப்பிடும் பொழுது, மனித மூளை மகத்தான சக்தி வாய்ந்ததாக இருப்பினும், மூளையைக் காட்டிலும், முக்கியமான ஏதோ ஒன்று, அந்த உயிரினங்களுக்கு இருந்திருக்க வேண்டும் என்று புரிகின்றது அல்லவா?

ஆம்!, அதைத்தான் "**உள்ளுணர்வு**" **(Intuition)** என்று அழைக்கிறோம்.

அவைகள் உணந்துக் கொண்ட, அந்த உள்ளுணர்வு சக்தியானது, மனிதனைவிட மகத்தான ஆற்றல் வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும்.

அதனால்தான், அவைகளால் அந்த கடல் சீற்றத்தை முன்னதாகவே உணர்ந்து, அந்த இடத்தை விட்டு, மற்றொரு இடத்திற்கு, எளிதாக இடம் பெயர்ந்து செல்ல முடிந்தது.

ஆனால், மனிதர்களாகிய நம்மால் மட்டும் அந்த உள்ளுணர்வை உணர முடியாமல் போனது ஏன்?...

அது மனிதனுக்கு மட்டும் ஏன் பயன்படாமல் போனது.?

உண்மை என்னவெனில், அது பண்டைய ரிஷிகளுக்கு பயன்பட்டது. ஆனால், இன்றைய மனிதர்களாகிய நமக்குப் பயன் படவில்லை.

அதற்குக் காரணம் என்ன?

பண்டைய ரிஷிகள், நம் சித்தர் பெருமக்கள் பெரும்பாலும் அடந்த காடுகளில் மட்டுமே அதிகம் சுற்றித் திரிந்தார்கள்.

அவர்கள் வாழ்ந்த காலத்தில், இப்பொழுது இருப்பதுப் போன்று, மாட, மாளிகைகள், கூட கோபுரங்கள் எல்லாம் இருக்க வில்லை.

அவர்கள், இன்று நாம் வாழ்வதுப் போன்று, நாகரீகமான நகரில், அழகான மாடி வீடுகளில், பாதுகாப்பான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் அல்ல!.

அவர்களை எப்பொழுதும், பல ஆபத்துகள் சூழ்ந்தவாறு இருந்தது.

அதற்குக் காரணம், அவர்கள் வசிப்பிடம் காடுகள் நிறைந்தப் பகுதிகளாக இருந்ததினால், கொடிய காட்டு விலங்குகளால், அவர்கள் கொலை செய்யப்படக் கூடிய பேராபத்தில் எப்பொழுதும் வாழ்ந்துக் கொண்டிருந்தனர்.

மிருகங்களைப் பொருத்தவரை, மனிதன், ரிஷி, சித்தர்கள் என்றெல்லாம் தெரியாது. அவைகளின் பார்வைக்கு இவர்கள் உணவாகத்தான் தெரிவார்கள்.

அத்துடன் இன்றைய மனிதனிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட மகான்களாக அவர்கள் இருந்தார்கள்.

அதுவும் குறிப்பாக **நுண்ணுணர்வு** என்ற **உள்ளுணர்வு** விஷயத்தில், மற்ற உயிரினங்களை விட, மேம் பட்டவர்களாகவே இருந்தனர். அதனால், அவர்களது **நுண்ணுணர்வு சக்தி** மிகக் கூர்மையாக இருந்தது.

குறிப்பாக நுகறும் திறன். எதிரிகள் பல மீட்டர் தள்ளி வரும் போதே, அதை வாசனைகள் மூலம் அறியக் கூடியத் திறன், அத்துடன், மனமற்ற நிலையில் அவர்கள் அடைந்திருந்த அட்டாமா சித்துக்கள் என எல்லாம் இருந்தன.

அவர்கள் சிறு ஓசையையும், உன்னிப்பாக கவனிக்கும் **விழிப்புணர்வு** கூடியவர்களாக இருந்தனர்.

குறிப்பாக, எதிர் காலத்தைப் பற்றிய எந்த எண்ணமும் இல்லாமல், எப்பொழுதுமே நிகழ்காலத்தில் வாழ்பவர்களாகவே இருந்தனர்.

ஆனால், இன்றைய மனிதர்களாகிய நாம் அளவிற்கு அதிகமான தர்க்க அறிவும், எதிர் காலத்தை பற்றிய திட்ட அறிவும், கடந்த காலத்தைப் பற்றிய ஞாபக அறிவும் கொண்டவர்களாக மற்றவர்களால் மாற்றப்பட்டுள்ளோம்.

அதுவும், கல்வி என்ற பெயரில் பெருமைமிகு தன் சுயத்தை (நுண்ணறிவை) இழந்தும் விட்டோம். ஆனால், நமக்கு இயற்கை கொடுத்திருக்கும், ஒரே ஒரு ஆறுதல் என்ன தெரியுமா?

நம்மால் மறக்கப்பட்ட, அல்லது மறக்கடிக்கப்பட்ட, எதுவுமே முற்றிலுமாக நம்மிடம் இருந்து நீங்கி விடவில்லை. அந்த அற்புதமான நுட்பங்கள் நம்மிடம் இருந்து முற்றிலுமாக அழிந்து விடவில்லை.

ஆனால், அந்த உள்ளுணர்வு நம்மிடம் ஆழமாக புதைக்கப்பட்டுள்ளது. அதை வெளியே எடுத்துக் கொண்டு வரவேண்டியதை மட்டுமே நாம் மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஏதாவது பயிற்சி முறைகள் உள்ளனவா?

நாம்தான் எப்பொழுதுமே, பயிற்சிகள் என்றால், பரவசம் அடைவோமே, அத்துடன் அவைகளை பவ்யத்துடன் ஏற்றுக் கொண்டு, நடைமுறைப் படுத்துவோமே!.

உண்மை என்ன?

உண்மையை உணர்ந்த மெய்ஞ்ஞானிகள் நம்மிடம் வந்து, இங்கு பயிற்சிகள் ஏதுவும் தேவை இல்லை. '**நீ அதுவாகவே இருக்கின்றாய்**!' என்றுக் கூறினால், நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

இந்த உண்மையை எடுத்துக் கூறுகின்ற பெரியவர்களைக் கூட, நாம் பெரிதாகப் பொருட்படுத்தவும் மாட்டோம்.

ஏன்?

நாம் ஏற்கனவே, ஏற்றி வைத்துக் கொண்டுள்ள ஏராளமான எண்ணங்களின் மூலம், எல்லாவற்றையுமே பயிற்சிகள் வாயிலாகவே அடைய முடியும் என்பதாக இருக்கின்றது.

அதனால், இந்த ஒரே உண்மையை உணர, மனம் இடம் கொடுக்காமல் இருக்கின்றது. இனி, நாம் செய்ய வேண்டிய காரியம், அல்லது உங்கள் பாஷையில் கூறப்படுகின்ற பயிற்சி என்று வைத்துக் கொண்டாலும் சரி!

செய்ய வேண்டியது ஒன்று மட்டுமே ஆகும்.

அதுதான், மனதைக் கவனிப்பது!

மனதைக் கவனிப்பது என்றவுடன், ஏதோ ஒரு ஆசனத்தில் அமைதியாக அமர்ந்துக் கொண்டு, அப்படியே அந்த மனதைப் பார்த்துக் கொண்டிருப்பதா?

அப்படியெல்லாம் கிடையாது!

சகஜமாக உங்கள் மனதில் இருந்து, எப்பொழுதும் வெளி வருகின்ற எண்ணங்களை, சற்று விழிப்புணர்வுடன் இருந்து, அதை கவனிக்கத் தொடங்குங்கள்.

அதாவது, மனதின் போக்கில் போகாமல், சற்றே அந்த மனதை, புத்தியால் கவனித்து, அந்த எண்ணத்தை நடைமுறைப்

படுத்துவதும், வேண்டாம் என்று தவிர்ப்பதும் விழிப்புணர்வு என்று இங்கு கூறப்படுகின்றது.

உதாரணமாக, ஒரு பொருளை வாங்கியே ஆக வேண்டும் என்று, உங்கள் மனம் விரும்புகின்றது என்பதாக வைத்துக் கொள்ளுங்களேன். இப்பொழுது, அந்த பொருளை உடனடியாக வாங்கி விட்டால், நீங்கள் மனம் போன போக்கில் போகின்றீர்கள் என்று கருதலாம்.

அதுவே, அந்த பொருளின் அவசியம் என்ன? அதன் தேவை நமக்கு எப்போது அவசியம்!

அத்துடன், அதன் உபயோகம் நமக்கு முழுமையாகப் பயன்படுமா? அது கையாளுவதற்கு சிறப்பாக இருக்குமா? அல்லது எதிர்காலத்தில் நம்மை சிரமப்படுத்துமா? போன்ற கேள்விகளை எழுப்பி, அதற்கான விடைகளை உங்கள் புத்தியினால் பகுத்தறிந்து, அதன் நன்மை, தீமைகளை அலசி ஆராய்ந்து, அதை வாங்குவதும், வாங்காமல் விடுவதுதைப் பற்றிய விசாரமே உங்களை விழிப்புணர்வுடன் கூடிய, விவேகியாக மாற்றுகின்றது.

இதைத்தான் **விழிப்புணர்வு** என்று கூறப்படுகின்றது.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட புத்தியினால், விழிப்புடன் செயல்படுவதே, விழிப்புணர்வு என்றால், ‘உள்ளுணர்வு’ என்பதும், ‘விழிப்புணர்வு’ என்பதும் வேறு, வேறானதா?

ஆம்!

**உள்ளுணர்வு** என்பது, உங்களுக்கு உள்ளே இருந்து தானாகவே வெளிப்படுவது.

**விழிப்புணர்வு** என்பது, உங்களால் புத்தியைக் கொண்டு விசாரிக்கப்பட்டு வெளிப்படுவது எனலாம்.

இதிலே, மனதில் உதிக்கும் ஒரு எண்ணத்தை புத்தியைக் கொண்டு, விசாரித்து, அந்த எண்ணத்தின் நன்மை, தீமைகளை பகுத்தறிந்து, அதை நடைமுறைக்கு கொண்டு வருவதா? அல்லது வேண்டாமா? என்று தெளிவாகத் தீர்மானிப்பது '**விழிப்புணர்வு**' எனப்படுகின்றது.

அதுவே, இப்பொழுது ஒரு விபரீதம் நடக்கப்போகின்றது. உடனடியாக, இந்த இடத்தில் இருந்து வெளியேறி விடு! என்று உங்களை அறியாமலேயே, ஒரு உணர்வு உங்கள் உள்ளே உதயமானால், அதை "**உள்ளுணர்வு**" எனப்படுகின்றது.

பொதுவாக, எதைச் செய்வதாக இருந்தாலும், மனதைக் கடந்து, புத்தியைக் கொண்டு, விழிப்போடு செய்வதைத்தான் '**விழிப்புணர்வு**' என்று கூறுகின்றோம்.

உதாரணமாக, பறவைகளை உற்று கவனித்து பாருங்கள். குறிப்பாக, அவைகள் தரையில் அமர்ந்து இரை தின்னும்போது, அவைகள் மிகுந்த விழிப்போடு, அதிக எச்சரிக்கை உணர்வோடு இருப்பதைக் காண முடியும்.

அவைகளின் விழிப்புணர்வோடு மனிதன் போட்டி போட முடியாது. அவைகள் தான் அமர்ந்து இருக்கும் இடத்தில் இருந்து ஓர் எல்லையை தீர்மானிக்கின்றன. அந்த எல்லைக் கோட்டுக்குள்

யாராவது நுழைய நினைத்து, அந்த எல்லைக் கோட்டை சற்று நெருங்கும் போது, அவைகள் உடனடியாக பறந்து விடுகின்றன.

சரி! ஒரு பறவைக்கு வேண்டுமானால் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு, வாழ விழிப்புணர்வு தேவைப் படலாம். ஆனால் மனிதர்களாகிய நமக்கு எதற்கு அந்த அளவுக்கு விழிப்புணர்வோடு வாழ வேண்டிய அவசியம் உள்ளது? என்று சிலர் கருதலாம்.

ஆம்! நாம் வாழும் வாழ்க்கையை தெள்ளத் தெளிவாக இருக்க வேண்டுமானால், நம்மிடையே ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான மூட நம்பிக்கைகளையும், மத கோட்பாடுகளையும் கலைந்து, விழிப்புற்ற புத்தி சக்தியைக் கொண்டு, மனதைக் கடந்து, மாயையை அறிந்து, மதி மயக்கம் அடையாமல், வாழ்வதற்கு இந்த விழிப்புணர்வு அவசியமாகின்றது.

அதாவது, விழிப்புணர்வோடு வாழ்கின்ற மனிதன் மட்டுமே இந்த உலகத்தை தெள்ளத் தெளிவாக அறிகின்றான். அவனுக்கு மட்டுமே ஏமாற்றம் ஏதுமற்ற, அமைதி தவழுகின்ற, ஆனந்த நிலையுடன் கூடிய உலகமாக இருக்கின்றது.

ஆனால், மனதினால், விசாரித்துப் பார்க்காத விவேகமற்ற மனிதனுக்கு, காண்பதெல்லாம் கவலை அளிப்பதாகவும், அனைவருமே ஏமாற்றுபவர்களாகவும், எல்லாமே மோசமாகவும், இந்த உலகமே படு பயங்கரமானதாகவும் இவனுக்கு இருக்கின்றது.

அந்த விழிப்பைக் கொடுக்கும் யுக்திக்கு பெயர் தான் "**தியானம்**" எனப்படுகின்றது.

தியானம் செய்வது எப்படி? என்று, ஒருவர் ஒரு குருவை அணுகினார்.

அவரிடம் சென்று, "**நான் எப்படி தியானம் செய்வது**?" என்பதை கற்க வந்திருக்கின்றேன், தயவுசெய்து, எனக்கு தியானத்தைக் கற்றுக் கொடுக்கின்றீர்களா? என்கிறார்.

அதற்கு, அந்த குரு, "**அப்படியானால் நீங்கள் வேறு ஒருவரைத்தான் சென்று பார்க்க வேண்டும், காரணம் நாங்கள் இங்கே ஏதோ ஒன்றை, எப்படிச் செய்வது? என்று கற்றுக் கொடுப்பதில்லை. மாறாக எதையும் எப்படிச் செய்யாமல் இருப்பது என்பதை மட்டும்தான் கற்றுக் கொடுகின்றோம்**" என்றார்.

தியானம் என்பதை பற்றி ஒரு அடிப்படை விஷயத்தை அனைவருமே அறிய மறுக்கின்றோம்.

அதாவது, ஏதோ ஒரு பொருள் அல்லது கருத்து மீது கவனத்தை குவித்து, அதைப் பற்றிய எண்ணத்துடன் எப்போதும் மனதை ஒருமுகப்படுதல் (Concentration) என்பது தியானம் ஆகாது. இதனை '**மெடிடேஷன்**' என்று கூறவும் முடியாது.

மனமானது எதையாவது ஒன்றைப் பற்றிக் கொண்டு இருந்தாலும், அந்த ஒன்றைப் பற்றிய சிந்தனையே மேலோங்கி இருந்தாலும், அதனைப் பற்றிய எண்ணத்தை (Thinking), ஒரு சிந்தனை என்றுதான் கூறப்பட வேண்டும்.

"**சிந்தனையற்ற இடமே சிவம் இருக்குமிடம்**"

உண்மையில், தியானம் என்பது, எதையாவது ஒன்றைப்

பற்றி சிந்தித்துக் கொண்டு இருப்பதற்கான செய்வதற்கான ஒரு செயல் அல்ல. அது முற்றிலுமாக தனனை அறிகின்ற ஒரு நிலை.

ஏதுவும் செய்யாமல், அனைத்தையும் அப்படியே உள் வாங்கும் ஒரு விழிப்பு நிலை உள்ளது அல்லவா?, அந்த நிலையில் மட்டுமே, நாம் நம்மை, எப்போதும் வைத்துக் கொள்ள முடியுமானால், அதுவே "**தியானம்**" எனப்படும்.

ஆனால், பெரும்பாலானவர்கள் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களில் சிக்கிக் கொண்டு, ஒரு இடத்தில் உட்கார்ந்துக் கொண்டு செய்வதுதான் '**தியானம்**' என்பதாக கருதிக் கொண்டுள்ளனர்.

அத்துடன், எதாவது ஒரு மந்திரத்தைக் கூறிக் கொண்டு இருப்பதையும், மூச்சைக் கவனித்துக் கொண்டு இருப்பதையும் '**தியானம்**' என்று கூறுகின்றனர்.

உண்மையாகவே, தியானம் என்ற நிலையில் நாம் **நடக்கலாம், குளிக்கலாம், ஆடலாம், பாடலாம், ஓடலாம்**. ஆனால், எந்த செயலைச் செய்யும் பொழுதும், நாம் நம் முழு கவனத்தில் விழிப்போடு, நிகழ்காலத்தில் இருந்துக் கொண்டு செய்தால் மட்டுமே போதும். அதுதான் "**தியானம்**".

ஆனால், நாம் தியானத்தை இப்படியா செய்கின்றோம்?...

நீங்கள் நடக்கும் போது உங்களுக்குள் என்ன சிந்தனை ஓடுகிறது என்று என்றாவது கவனித்து இருக்கிரீர்களா? அப்போதுதான் உலகத்தில் உள்ள எல்லா சிந்தனைகளும் உங்களிடம் ஓடும்.

ஆனால், "**நடக்கிறோம்**" என்ற அந்த சிந்தனை மட்டும் ஓடவே ஓடாது. அவ்வாறே, குளிக்கும் போதும், '**குளிக்கின்றோம்**' என்ற சிந்தனையைத் தவிர மற்ற எல்லா சிந்தனைகளும் ஓடும்.

ஆகவே, நாம் எதை செய்தாலும், அதை செய்கிறோம் என்ற உணர்வோடு, முழுமையாக அதிலேயே கவனத்துடம் ஒன்றி, விழிப்போடு நிகழ்காலதில் இருந்துக் கொண்டு இருந்தால் மட்டுமே போதும், அதுவே '**தியானம்**' எனப்படும்.

அவ்வாறே, '**சகஜ சமாதி**' என்றாலும், இந்த நிலையில் இருப்பதைத்தான் என்றும் அறிய வேண்டும்.

பொதுவாக, நடக்கும் போது நடக்கின்றோம் என்ற உணர்வோடு, ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்து, நடந்தால் அது தான் தியானம்.

இந்த நடக்கும் தியானம் எல்லாம், நமக்கு சரி பட்டு வராது! சும்மா உட்கார்ந்து கொண்டு செய்யும் தியானம் மட்டும்தான் என்னால் செய்ய முடியும். ஆனால், சும்மா உட்கார்ந்தாலே மனம் தாறு மாறாக ஓட ஆரம்பிக்கிறதே, அதை ஓடாமல் நிறுத்துவது எப்படி? என்று சிலர் கேட்கின்றார்கள்.

அதற்கான வழிமுறையாக, அந்த மனதை நிறுத்த ஒரு சூத்திரம் உள்ளது.

"**மனதை நிறுத்த நினைத்தால், அது மேலும், மேலும் அதிகமாக ஓடும். அதுவே, அதை உற்றுக் கவனித்தால், ஓடுவதில் இருந்து உடனடியாக நிற்கும்.**" இதான் சூத்திரம்.

இவ்வாறு, மனதைப் பற்றிய ஆழமான கருத்துக்களைப் பற்றி பலரும் படித்துக் கொண்டு வரும்போது, பலருக்கும் பொதுவான ஒரு சந்தேகம் வருவது இயல்பாகவே உள்ளது.

அது என்னவெனில், எண்ணங்கள் அற்ற நிலையில், அறிவு பிரகாசிக்கும் என்றால், மனதில் எதையுமே யோசிக்காமல், சும்மா இருப்பது நல்லது என்று கருதி, சிலர், சிந்தனை செய்வதையே நிறுத்தி விட நினைக்கின்றார்கள்.

இதை விட முட்டாள்தனம் வேறு ஒன்றும் இல்லை.

அதாவது, அதிகம் சிந்திக்காத போதுதான் அறிவு பிரகாசித்து, அனேக அறிவியல் உண்மைகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன என்ற அடிப்படை விசயத்தை மட்டும் வைத்துக் கொண்டு பார்த்தாலும், அதிகம் போதை வஸ்துக்களைப் பயன் படுத்துபவன்கூட, சிந்தனைகளற்றவனாகவே இருக்கின்றான்!

அப்படியானால், அவனும் அந்த அறிவை அறிந்திருக்க வேண்டும் அல்லவா?

இதைக் கருத்தில் கொண்டுதான், வட நாட்டில் வாழுகின்ற அகோரிகள் என்ற ஒரு சாரர்கள் “**கஞ்சா**” என்ற போதை வஸ்துவைப் பயன்படுத்தி, எண்ணங்கள் ஏதுமற்ற, மனமற்ற நிலையில், அந்த அறிவை அறிய முயல்கின்றார்கள்.

மனிதனாகப் பிறந்தவனிடம், இதைவிட முட்டாள்தனம் வேறொன்றும் இருக்க முடியாது. இவர்களைப் பகுத்தறிவு உடையவர்கள் என்றும் கூற முடியாது. ஐந்தறிவு கொண்ட மிருகங்கள் கூட இவர்களை விட உயர்வாக வாழ்கின்றன.

அறிவை (ஆன்மாவை) அறிவதற்கு மனம் தேவையில்லை என்றால், கோமா நிலையில் உள்ள நோயாளிகள், மது அருந்துகின்ற குடிகாரர்கள், மற்றும் வேலைக்கு போகாமல், வெட்டியாக வீட்டிலேயே தூங்கிக் கொண்டு இருக்கின்ற சோம்பேறிகள் என எல்லோருமே மனமற்ற நிலையிலேதான் இருக்கின்றார்கள்.

அதனால், இவர்கள்கூட அந்த அறிவை அறிந்து, அதுவாகவே ஆகிவிட வேண்டும் அல்லவா?

அப்படி நடக்குமா?

பொதுவாக, தானாகவே மனம் சஞ்சலமற்ற நிலையில், அமைதியான முறையில், அந்த அறிவை அறிவதற்கும், அதுவே, அந்த மனதை கட்டாயப்படுத்தி, மனமற்ற நிலைக்கு உட்படுத்திக் கொண்டு, செயற்கையாகச் செய்யும் செயல்களுக்கும் நிறையவே வித்தியாசம் உள்ளது.

அது எவ்வாறெனில், காற்று வீசாத ஒரு இடத்தில் ஏற்றி வைக்கப்பட்ட அகல் விளக்கு தானாகவே ஆடாமல், அசையாமல் சுடர் விட்டு பிரகாசித்து எரிவதற்கும், அதுவே, காற்றே சுத்தமாக வர முடியாமல் தடுத்து விட்டு, அகல் விளக்கு ஏற்றி, ஆடாமல், அசையாமல் சுடர் பிரகாசிக்க வேண்டும் என எதிர்ப்பார்ப்பதற்கும் உள்ள வித்தியாசத்தைப் போன்றது ஆகும்.

காற்று இல்லாத இடத்தில் விளக்கு எரியுமா?

அதுப்போலத்தான், மனமற்ற நிலைக்கு செல்ல வேண்டும் என்று கருதி, மனதை அடக்க முயற்சிப்பதற்கான படி நிலைகளாக மது, கஞ்சா, மற்றும் மயக்க ஊசி, என எதையாவது பிடித்துக் கொள்கின்றார்கள்.

வெளியே பார்ப்பதற்கு, ஒரு ஆலமரத்தின் விதை கடுகு அளவு மிகச் சிறியதாகத்தான் இருக்கின்றது. ஆனால், அந்த விதையை மண்ணின் உள்ளே புதைத்து வைத்து, சில வருடங்கள் கழித்துப் பார்த்தால், பல கிளை விழுதுகளைக் கொண்ட, மிகப் பிரமாண்டமான மரமாக மாறி விடுகின்றது.

இதைப் போன்றுதான் நாம் ஏற்றி வைத்துக் கொள்கின்ற ஒரே ஒரு எண்ணம் நம் மனதினுள் நுழையும் முன்பு, மிகச் சாதாரணமாகத்தான் இருக்கின்றது. அதுவே, அந்த ஒரு எண்ணத்தை மனதின் உள்ளே புதைத்து வைத்து, சில வருடங்கள் கழித்துப் பார்த்தால், பல எண்ணங்களைக் கொண்ட மிகப் பிரமாண்டமான மனமாக மாறி விடுகின்றது.

எனவே, எண்ணங்களால் ஏற்றி வைக்கப்பட்ட மனம் பார்ப்பதற்கு சாதாரணமாகத்தான் தோன்றுகின்றது. ஆனால், அதுவே சலனமற்ற நிலையில் அளப்பரிய ஆற்றலைப் பெறுகின்றது.

அதன் அசாத்திய ஆற்றலை, நம்முடைய தொடர்ச்சியான சிந்தனை சிதறல்களால் வீணடிக்கப்படுவதால், மனதின் மகத்தான ஆற்றலை, நாம் முழுமையாகவே பயன்படுத்த முடியாமல் போகின்றது.

பொதுவாக, மனதை சற்று நேரம் அமைதியாக நிறுத்தி வைத்தாலே, அதன் வாயிலாக அளப்பரிய ஆற்றல்கள் நம்மிடம் வெளிப்படுவதைக் காணலாம்.

அந்த ஆற்றல்கள் எப்படி வந்தது?

மனம் அமைதி (சாந்தி) அடையும் போது மட்டுமே, அனேக ஆக்கப்பூர்வமான ஆற்றல்களை வெளிப்படுத்த முடியும் என்பதை அறிந்த அறிஞர்கள், அதற்கான அறிவை அறிய வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

மனம் அமைதி அடையத்தான், அனைவருமே தியானம் செய்ய முயற்சிக்கின்றார்கள். ஆனால், அதற்கான வழிமுறைகளை மட்டும் அறிய மறுக்கின்றார்கள்.

அத்துடன் இன்னும் சிலர், "**இந்த மனித மனதை பிரபஞ்ச அறிவுடன் இணைக்க முடியுமா**?" என்றும் எதிர்ப்பார்க்கின்றார்கள்.

அதாவது, இந்த பிரபஞ்ச மனதை அறியக் கூடிய மனித மனம் உண்டாக வேண்டுமானால், அதற்கான அடிப்படை விசயங்களை, நாம் நம் நடைமுறையில் சோதித்துப் பார்க்கத் தயாராக வேண்டும்.

ஆம்! **பிரபஞ்ச அறிவை அறியும்** அருமையான வழிமுறையை நாம் பின்வருமாறு பரிசோதித்துப் பார்க்கலாம்.

அதாவது, மனதில் உதிக்கின்ற எண்ணங்களை எல்லாம், சற்றே உற்று கவனித்துக் கொண்டு வந்தால், அதில் ஏதேனும் ஒரு விசயத்தைப் பற்றி மட்டும், மிகவும் ஆழமாக யோசித்துப் பார்த்து,

அதற்கான விடையை அறிய முடியாமல், அதைப் பற்றி மேலும் யோசிக்க முடியாமல், அப்படியே விட்டு விடுகின்ற போதுதான், அந்த விசயத்திற்கான விடை திடீரென்று நம் உள்ளே இருந்து வெளியே வரும்.

இது பெரும்பாலானவர்களின் அனுபவ உண்மையும் கூட...

உதாரணமாக, நீங்கள் அன்றாடம் பயணம் செய்யும் பேருந்தில், ஒரு நாள் ஒரு புதிய நபரை சந்தித்து, அவருடன் தங்களை அறிமுகம் செய்துக் கொண்டீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன். அது நடந்து பத்து நாட்கள் கடந்து, திடீரென்று அவர் ஞாபகம் உங்கள் மனதில் உதிக்கின்றது. ஆனால், அவரது பெயர் மட்டும் ஞாபகத்திற்கு வர மறுக்கின்றது.

நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டு முயன்றும், அவரது பெயரை நினைவுக்கு கொண்டுவர முடியாமல், சீ! போ!... என்று, அந்த எண்ணத்தை உதறிவிட்டு, வேறு வேலைகளைப் பார்த்துக் கொண்டு இருப்பீர்கள். அப்பொழுதுப் பார்த்து, திடீரென்று அந்த பெயர் உங்கள் ஞாபகத்திற்கு வந்து விடும்.

ஆம்! அது தற்செயலாக வந்தது அல்ல!...

இதற்கு சற்று நேரம் முன்பு நீங்கள் மனதிற்கு கொடுத்த அதிக அழுத்தம் காரணமாக மட்டுமே, நீங்கள் வேறு வேலையில் கவனம் செலுத்தினாலும், அந்த மனம் இவ்வளவு நேரமும் உங்கள் உள்ளுக்குள்ளேயே வேலை செய்துக் கொண்டிருந்துள்ளது.

அதன் மூலமாக, அது உங்களுக்கு அவரது பெயரை சற்று தாமதம் செய்தாலும், விடாமல் எடுத்துக் கொடுத்து விட்டது.

இதுதான், மனதின் மகத்தான சக்தி ஆகும்.

எனவே, நாம் எந்த ஒரு வேலை செய்தாலும், எந்தத் துறை சம்பந்தமாக இருந்தாலும், அது சம்பந்தமான உண்மைகளை பிரபஞ்சத்தில் இருந்து ஈர்க்க வேண்டுமாயின், அதைப் பற்றிய ஒரு வழி முறையை அவசியம் அனைவரும் அறிந்துக் கொள்ள வேண்டும்.

இதன் வாயிலாக மட்டுமே, நீங்கள் இந்த பிரபஞ்ச அறிவுடன் இணைய முடியும்!

அதாவது, நீங்கள் எந்த ஒரு பிரச்சனையை தீர்க்க விரும்பிகின்றீர்களோ, அதைப் பற்றியே, மிக அதிகமாகவும், மிக, மிக ஆழமாகவும் சிந்திக்க வேண்டும். அல்லது நீங்கள் எந்த ஒரு பொருளை அடைய விரும்புகின்றீர்களோ அதைப்பற்றியே, மிக அதிகமாகவும், ஆழமாகவும் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு தொடர்ந்து, மிக, மிக அழுத்தமானதாக அந்த சிந்தனை இருக்கும் நிலையிலும், இதற்கு மேல் அதைப் பற்றி சிந்திக்கவே முடியாது என்கின்ற எல்லயில்லா நிலையிலும் கூட, நீங்கள் அதைப் பற்றியே, மேலும், மேலும் பல கோணங்களில் தொடர்ந்து சிந்திக்க வேண்டும்.

அதாவது, உங்கள் முழுமையான முயற்சியின் எல்லை எதுவரையோ, அதுவரை அந்த விருப்பத்தை கொண்டு சென்று விட வேண்டும்.

பிறகு ....?

திடீரென்று அதை அப்படியே, முழுவதுமாகவே மறந்தும் விட வேண்டும். ஆம்! அதை பற்றி ஒரு துளியும் கவலை கொள்ளாமல், வேறு வேலைகளைப் பார்க்க வேண்டும்.

அவ்வளவுதான்!.

அந்த நிலையில், திடீரென்று அந்த பிரச்சனையைப் பற்றியதான, அதைத் தீர்க்க வேண்டிய தீர்வு, அல்லது அடைய விரும்பிய பொருள், இவைகள் உங்களுக்கு முன்னால் வந்து நிற்கும்.

இந்த நிலையில்தான், அனேக அறிவியல் அறிஞர்கள் தங்கள் கண்டு பிடிப்புகளைக் கண்டறிந்தனர்.

என்ன காமெடி செய்கின்றீர்களா? என்று நீங்கள் கேட்க வருவது புரிகின்றது.

காமெடி கிடையாது, உண்மையில், ஒரு பிரச்சனையை தீர்க்க, அல்லது விரும்பிய பொருளை அடைய நீங்கள் எடுத்த முழு முயற்சியும் முடிந்தவுடன், மனதில் அதைப் பற்றிய எண்ணங்கள் முழுமையாக இல்லாத நிலையில், தாங்கள் தன்னை மறந்த நிலையில், அந்த பிரச்சனைக்கான முடிவும், அல்லது, அந்த விரும்பிய பொருளும் உங்களுக்கு வருவது நிச்சயம் நடக்கும்.

ஆம்!, நாம் அறிந்த அறிவியல் அறிஞர்கள் அனைவருமே, ஆராய்ச்சியின் உண்மைகளை அறிய வேண்டி, அதைப் பற்றி அதிகம் சிந்தித்துவிட்டு, அதன் பிறகு, அப்படியே அதனை மறந்தும் போய் விடுவார்கள்.

அதன் விளைவாக, இவர்களது மனம் அந்த ஆராய்ச்சியின் அரிதான உண்மையை, உள்ளே இருந்த அறிவு, அதை உள்ளுணர்வு வாயிலாக மனதிற்கு வெளிப்படுத்தி, தீடிரென்று அதை அவர்களால் கண்டு பிடிக்க துணை புரிகின்றது.

அவ்வாறே, ஒருவர் புதுமையான, நவீன வசதிகளுடன் கூடிய கார் வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, அந்தக் காரைப் பற்றிய அனேக விசயங்களை மனதில் உள்வாங்கி, அந்த காரின் பெயர், நிறுவனம், விலை என எல்லாவற்றையும் எவ்வளவு தூரம் அறிந்துக் கொள்ள முடியுமோ, அவ்வளவு தூரம், அதைப் பற்றி விசாரித்து விபரங்களை சேகரித்துக் கொண்டே இருப்பார்.

அதுவும், அந்தக் காரைப் பற்றி, அந்த நிறுவனமே அந்த அளவிற்கு யோசித்திருக்காது, ஆனால், இவர் அந்தக் காரைப் பற்றிய அத்தனை தகவல்களையும் அக்கு, வேறாக, ஆணி வேறாக பல கோணங்களில் அறிந்து வைத்துக் கொண்டு, அதைப் பற்றியே சிந்தித்தவாறு இருப்பார். அதை வாங்க வேண்டும் என்றும் விடாப்பிடியாய் இருப்பார்.

அதன் பிறகு, அதற்கான பணம் அவரிடம் இல்லாத காரணத்தினால், அதைப் பற்றிய சிந்தனையை அவர் சுத்தமாக மறந்தே போய் சில ஆண்டுகள் கூட ஆகியிருக்கும்.

ஆனால், மனதின் வலிமை மகத்தானது என்பதினால், ஒரு நாள் அந்தக்காரை வாங்கக் கூடிய, சூழ் நிலைகளை அவருக்குக் கொடுத்து, அந்தக் காரையே வாங்கவும் வைத்து விடுகின்ற மகத்தான சக்தியைக் கொண்டது இந்த மனம்.

அவருக்கு, அந்தக் காரை வாங்கக் கூடிய அளவிற்கு அவ்வளவு பணம் மற்றும் வசதி வாய்ப்புகள் எப்படி அவரால் சம்பாதிக்க முடிந்தது?

அதுதான், **பிரபஞ்ச மனதின் ஈர்ப்பு சக்தி** எனலாம்.

அதாவது, இவரது அந்த ஒரு எண்ணத்தின் விதை, இந்த மனதில் உதித்து, அதை அடிக்கடி அவர் நினைப்பதால், அது பிரபஞ்ச மனதில் விதைக்கப்பட்டு, ஒரு நாள் அந்த விதை செடியாகி, மரமாகி, காயாகி, கனிந்து பழமாக மாறியது.

விதைத்த விதை விளைச்சலுக்கு வர சில காலங்கள், தேசங்கள் வேண்டுமானால் மாறுபடலாம். அதாவது, சில ஆண்டுகள், அல்லது சில பிறவிகள் என இருக்கலாம். ஆனால், விதைத்த விதை, ஒரு நாள் முளைத்தே தீரும்.

இதைத்தான், '**பிரபஞ்ச ஈர்ப்பு விதி**' **(Law of attraction)** என்கின்றோம்.

இந்த விதி, நம்முடைய மனதின் வாயிலாக மட்டும்தான் கையாளப்படுகின்றது.

அதற்குக் காரணம், இந்த மொத்த பிரபஞ்சமும் நம்மால்தான் படைக்கப்பட்டு உள்ளது. நாம் இல்லாவிடில், இந்தப் பிரபஞ்சம் கிடையவே கிடையாது.

இது என்ன புதுக் கதையாய் இருக்கிறதே? என்று நீங்கள் சந்தேகிப்பது புரிகின்றது. இது சற்று ஆழமான விசயம்தான். இருப்பினும், புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம்.

அதாவது, இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட உங்களது தனித்த உடல் முதற்கொண்டு, நீங்கள் காணுகின்ற, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் இந்த பூமியில் உள்ள அனைத்து உடல்கள் உட்பட, எல்லாமே அந்த ஒரே அறிவினால் பிரதி பிம்பிக்கப்படுகின்றது.

அத்துடன், அதை அறியக் கூடிய அறிவாகவும் அதுவே இருக்கின்றது.

அதாவது, இந்த பூமியில் உள்ள ஒரு அறிவு முதல் ஆறு ஆறிவு வரை உள்ள மொத்த உடல்களை எடுத்துக் கொண்டால், எல்லாமே ஒரே அறிவின் பிரதி பிம்பம்தான். ஆனால் அது பிரதி பிம்பிக்கின்ற உடல்களைப் பொருத்து, வேறுபடுகின்றது.

உதாரணமாக, நீங்கள் ஒருவர் மட்டும்தான் ஒரு பொருட் காட்சியில் வைக்கப்பட்ட, கண்ணாடி மாளிகை காட்சி அரங்கினுள் இருக்கின்றீர்கள். அந்த அறையில் பல வகையான பாதரசம் பூசப்பட்ட கண்ணாடிகள் வைக்கப்பட்டு இருக்கும்.

அதிலே, ஒரு கண்ணாடியில் முன்னால் நின்று பார்த்தால், உங்கள் உருவம் குள்ளமாகவும், மற்றொரு கண்ணாடியில் உங்கள் உருவம் குண்டாகவும், வேறு ஒரு கண்ணாடியில் உங்கள் உருவம் அசிங்கமாகவும் காணப்படும்.

இதற்குக் காரணம் நீங்களா? அல்லது உங்கள் முன்பு காணப்படுகின்ற கண்ணாடியா?

நிச்சயமாக, உங்களை பிரதி பிம்பித்துக் காட்டுகின்ற கண்ணாடிகள்தான் காரணமே, தவிர, நீங்கள் நீங்களாகவேதான் இருக்கின்றீர்கள்.

ஆனால், நீங்கள் ஒருவரே, பல்வேறு உடல்களாக மாறுபட்டு காணப்படுவதற்குக் காரணம், உங்கள் முன்னால் வைக்கப்பட்டுள்ள கண்ணாடிகள்தான் என்பது, மிகவும் எளிதாகப் புரிகின்றது அல்லவா?

இதுப்போன்றுதான், இருக்கின்ற ஒரே அறிவு, தன்னை பிரதி பிம்பித்துக் கொள்கின்ற உடல்களை (மனங்களை) பொருத்து, பலவாக பிரதி பிம்பிக்கின்றது.

அந்த வகையிலே, தாவரங்களின் உடல்களில் ஒரு அறிவாகவும், மிருகங்களின் உடல்களில் ஐந்து அறிவாகவும், மனிதனின் உடல்களில் ஆறு அறிவாகவும் காணப்படுகின்றது.

மேலே, கூறப்பட்ட உதாரணத்தில், உங்களைப் பலவாறாக பிரதிபிம்பிக்கின்ற அத்தகைய மாயக் கண்ணாடிகளை அந்த இடத்திலிருந்து நீக்கி விட்டால், உண்மையில் நீங்கள் மட்டுமே இருப்பீர்கள். உங்களுக்கு வேறாக வேறு உருவங்கள், இனி உண்டாகாதுதானே!

அதுப்போன்றே, இருக்கின்ற ஒரே அறிவு, பலவாறாக பிரதிபிம்பிக்கின்ற மனங்களினால் (உடல்களினால்) மட்டுமே, ஏற்றத் தாழ்வுகளுடன் காணப்படுகின்றது.

அந்த மனதை, ஆறு அறிவுள்ள மனித உடலில் மட்டும், கொடுக்கப்பட்ட பகுத்தறிவைக் கொண்டு, தன்னை யார்? என்று விசாரித்து, விசாரத்தின் வாயிலாக, மனதை புத்தியில் ஒடுக்கி, புத்தியை அறிவில் (ஆன்மாவில்) ஒடுக்கினால், அனைத்தும் ஒன்றாகி, அந்த ஒரே '**அறிவு**' மட்டுமே பிரகாசிக்கும்.

இனி அதற்கு வேறாக எதுவுமே இங்கு கிடையாது.

உதாரணமாக, ஒரு அறிவு தாவரமான '**தென்னை மரம்**' ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். இதற்கான விதை ஒரு **தேங்காய்** மட்டுமே.

ஆனால், அதைப் பார்ப்பதற்கு ஒரு சாதாரணமான ஜடப்பொருள் போன்று, அசைவின்றி, ஆடாமல் அப்படியே பூமியில் கிடக்கின்றது.

அந்த தேங்காயை ஆறு அறிவு கொண்ட மனிதர்களாகிய நாம் எடுத்து, நாம் வசிக்கும் இந்த பூமியில், மண்ணில் புதைத்து வைத்து, சில நாட்கள் கழித்துப் பார்த்தால், அதில் இருந்து பச்சை நிற குருத்து ஒன்று வெளி வந்து, நாளடைவில் இந்த வெட்ட வெளியில், அது மிகப் பெரிய மரமாக மாறி, இலைகள், காய்கள், கனிகள் என எல்லாம் உண்டாகி, பல ஆயிரக்கணக்கான தேங்காய்களை நமக்குத் தருகின்றன.

இது எப்படி சாத்தியம் ஆனது?

நாம் பூமியில் புதைத்து வைத்தது, ஒரே ஒரு தேங்காய் மட்டுமே, மரமாக மாறி, பல ஆயிரக் கணக்கான தேங்காய்களை கொடுப்பது மட்டுமின்றி, இந்த பூமியில் உள்ள நீரை உறிஞ்சி

எடுத்துக் கொண்டு, 40, 50 அடி உயரத்துக்கு மேலே கொண்டு சென்று சேர்த்து, அதை பல மடங்கு தேங்காய்களாக நமக்குத் திருப்பிக் கொடுக்கின்றது என்றால், இதற்கான '**அறிவு**' ஒன்று இருந்திருக்க வேண்டும் அல்லவா?

**அந்த அறிவு எது?**

நாம் நமது வீட்டு மொட்டை மாடியில் உள்ள குடிநீர் தொட்டிக்கு, குடிநீரை 20, 25 அடி மேலே கொண்டு செல்ல என, ஒரு மின் மோட்டாரைப் பொருத்தி, அதன் பிறகு அந்த நீரை நாம் மாடியில் உள்ள தண்ணீர் தொட்டிக்கு ஏற்றுகின்றோம்.

ஆனால், அந்த மரமோ, 40, 50 அடி உயரத்துக்கு மேலே நீரைக் கொண்டு செல்வதற்கு எந்தவிதமான மின் மோட்டாரின் உதவியும் இன்றி, தானாகவே கொண்டு செல்ல முடியும் என்றால், அதன் அறிவைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டாமா?

இதுப்போன்றுதான், ஒவ்வொரு உடலிலும், அந்த ஒரே அறிவு பலவாறாக பிரகாசிக்கின்றது.

ஆனால், நாமோ. ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களினால், சிக்கி, சீரழிந்த நிலையில், மற்றவைகளை ஒரு அற்பமாகப் பார்க்கின்றோம். அதன் அறிவை அறிய மறுக்கின்றோம்.

ஆகவே, அனைத்து உடல்களிலும், அந்த "**அறிவு**" ஒன்று மட்டும்தான் பிரகாசிக்கின்றது.

அதுவே, "**நான்**", "**எனது**" என்ற அஹங்காரம், மமகாரம் வெளிப்படும் பொழுது, அந்த அறிவை அறிய முடியாத "**மனம்**"

என்றும், மனதை விசாரித்து, விழிப்புற்ற "**புத்தி**" சக்தியாக மாறும் பொழுது, அதுவே "**இருப்பதெல்லாம் இறைவனே**" என்ற புரிதல் கொண்டும், ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களற்ற, தன்னை மறந்த நிலையில், "**அறிவு**" என்றும் கூறப்படுகின்றது.

ஆக, அந்த அறிவை அறியும் அறிவாக இருப்பது மனமே என்பதை அறிந்து, எளிதாக அந்த மனதை, சஞ்சலமற்ற நிலையில், அமைதியுடன், ஆனந்தமாக வைத்திருந்தால், அதுவே "**அறிவு**", அதுவே, "**ஆன்மா**", அதுவே, "**பிரம்மம்**".

**ஆம்! அந்த மனமே பிரம்மத்தின் பிரதி பிம்பம்!.**

ஆகவே, இந்த மனித உடலைக் கொண்டு, கிடைத்த பகுத்தறிவைக் கண்டு, விசாரித்து அடைந்த ஞானம் என்பது, "**அறிவு, அறிபவன், அறியப்படும் பொருள்**" (திரிபுடி) ஆகிய மூன்றும் ஒன்றே என்ற, அறிவின் "**இருப்பு**" எதுவோ, அதுவே, "**நான்**" என்றும் அறிய வேண்டும்.

இதை அறிய மட்டும்தான் நமக்கு '**அறிவு**' உள்ளது.

இதை அறிந்துக் கொண்டவனை மட்டும்தான், நாம் **அறிவாளி, ஞானி, அறிஞன்** என அழைக்கப்பட முடியும். அப்படிப்பட்ட, ஞானிக்குத்தான் இந்த பிரபஞ்ச அறிவும், தன்னுடைய அறிவும் **ஒன்றே** என்பதுவும் எளிதாகப் புரியும்.

இதையே, நாம் மற்றொரு வகையில் சிந்திக்கலாம்!...

அதாவது எந்த ஒரு மனிதனுக்கும் "**நான்**" என்கிற அஹங்கார உணர்வு நிச்சயம் இருக்கும்.

அந்த ‘**நான்**’ என்கின்ற உணர்வு ஒன்றுதான், நம்மை எப்போதும் இயக்குகின்ற ஒரு விதமான **உள் உந்துதல்** எனலாம்.

அந்த உந்துதல் காரணமாகத்தான் நாம், பல பொருட்களை வீட்டில் உள்ள மனைவியுடன் சண்டையிட்டு, வாங்கிப் போடுவது முதல், பக்கத்து வீட்டுக்காரனை விட, நாம் நன்றாக வாழ வேண்டும் என்கின்ற எண்ணம் வரை, எல்லாமே இந்த “**நான்**” என்ற தன்முனைப்பு இருப்பதினால்தான் எனலாம்.

அப்படிப்பட்ட, இந்த “**நான்**” என்பதை, தவறானது என்று கூறிவிட முடியாது.


காரணம், இந்த உலகத்தில், நாம் நம்மை நிலை நிறுத்திக் கொள்ளவும், செயல்படவும், அந்த “**நான்**” என்பது நமக்கு மிக, மிகத் தேவையாக உள்ளது.

எப்பொழுது, நாம் அந்த “**நான்**” என்ற தன்முனைப்பு (அஹங்காரம்) அற்ற நிலையில் இருக்கின்றோமோ, அந்த ஒரு சில வினாடிகள் மட்டும்தான், நாம் இந்த பிரபஞ்ச அறிவின் அரிய உண்மைகளை அறிய முடிகின்றது.

இவைகள் அனைத்திற்கும் காரணமானது, அந்த ‘**ஒரே அறிவு**’ என்பதை அறிந்துக் கொண்டு, இதுவரை, “**நான்**”, “**நான்**” என்று தன் முனைப்புடன் கூறிக் கொண்டிருந்த அஹங்காரத்தை விடுத்து, அது மட்டுமே இருக்கிறது.

அதுவே, “**நான்**” என்று தன் சொரூபத்தை (அறிவை) வெளிப்படுத்துகின்றது என்பதை என்று ஒருவர் அறிகின்றாரோ, அன்றே அவர் அமைதியை அடைந்து, அடைய வேண்டியது இனி ஒன்றும் இல்லை! என தெளிந்து, **இருப்பதெல்லாம் இறைவ(நா)னே!** என்று, மனமற்ற நிலையில் சும்மா இருப்பது நிகழும்.

இந்த ‘**தன்னை உணர்தல்**’ என்பதை எப்படி செய்ய வேண்டும்? என்று கேட்பவர்களிடம் எல்லாம், "**நான் யார் என்பதை உற்று கவனி**" என்ற ஒற்றை வரி உபதேசத்தை மட்டுமே, ஓயாமல் தன் வாழ்நாள் முழுவதும், கூறிக் கொண்டிருந்தவர்தான் பகவான் ஸ்ரீரமண மகரிஷி ஆவார்.



அவர் கூறியது போன்று, அந்த “**நான்**” அற்ற நிலையில், நமக்கு “**ஞானம்**” வருகின்றதோ, இல்லையோ! ஆனால், உலகின் மிகப்பெரிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் ஆன்மீக உண்மைகள் என எல்லாமே நிகழ்ந்தது, இந்த "**நான்**" அற்ற நிலையில் இருந்த போது மட்டும்தான், என்பதை எல்லோரும் அறிய முயலவேண்டும்.

# 4. அறிவும், அறியாமையும்

அனைத்தையும் அறிவாகப் பார்க்காமல், கடவுளாகப் பார்ப்பதினால்தான், பலருக்கும் பலவிதமான கருத்து வேறு பாடுகளும், பாகுபாடுகளும் உண்டாகின்றது.

உண்மையில், மகத்தான அந்த '**மகத்**' என்ற "**வெட்டவெளி**" ஒன்று மட்டுமே "**அறிவு**" ஆகாசமாக, அனைத்து ஜடம் மற்றும் உயிர் பொருள்களின் உள்ளே, வெளியே என எல்லாமாகப் பரவி, "**பரம்பொருள்**" ஆக உள்ளது.

அது ஒன்றே, அனைத்து ஆடு, மாடு, கோழி, புறா என எல்லா மிருகங்கள், பறவைகள், செடி, கொடிகள், மரங்கள் என அனைத்து தாவர ஜங்கமங்களுக்குள்ளும் அந்த அறிவுப்பொருள் ஒன்றே '**இருப்பு**' கொண்டுள்ளது.

ஆனால், ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்கள் காரணமாக, '**கல்லிலே கடவுளைக் கண்டவன்**' என்ற பெருமை கொண்ட மனிதன், அந்த மகத்தான பரம்பொருளை மற்ற உயிரினங்களான மிருகங்கள், பறவைகள், தாவரங்கள் போன்ற அறிவுப் பொருள்களில், அந்த அறிவை அறியாமல், அவைகளை அதிகம் துன்புறுத்தச் செய்வதும், கொலை செய்வதும், பலி கொடுப்பதும் என அறியாமையின் உச்சத்தில் இருக்கின்றான்.

தனக்கென பிரத்யேகமாக கொடுக்கப்பட்ட ஆறாவது அறிவைக் கொண்டு, நன்மை, தீமைகளைப் பகுத்தறியத் தெரியாமல், தன்னை "**பகுத்தறிவு**" கொண்டவன் என்றும் கூறிக்கொள்கின்றான்.

அதன் காரணமாக, பல மதங்களை உண்டாக்கிக் கொண்டு, பல கடவுள்களையும் படைத்துக் கொண்டு, அவைகளில் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கிக் கொண்டு, மதம், ஜாத்கி, இனம், மொழி மற்றும் கலாச்சாரம் என ஏராளமான எண்ணங்களின் ஆதிக்கத்தில் சிக்கிக் கொண்டு சீரழிகின்றான்.

ஒன்றேயான அந்த '**அறிவு**' மட்டுமே, எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்து இருக்கின்ற பொழுது, அதுவே, ஒரு அறிவு தாவரங்கள் முதல் ஆறு அறிவு மனிதன் வரை அறிவால் அனைத்தும் அனுபவம் ஆகிக் கொண்டிருப்பதை அறியாமல், அதற்கு வேறாக **கடவுள், இறைவன்** என ஒரு பெயரையும், உருவத்தையும் உண்டாக்கிக் கொண்டு, அதை அறிவுக்கு வேறாக அறியவும், அனுபவமாக்கவும் ஆசைப்படுகின்றான்.

அந்த அறிவை அனைத்துமாக அறிந்துக் கொண்ட அன்றைய அறிவாளிகளான பண்டைய ரிஷிகள் நன்மைக்கும், தீமைக்கும் நாம்தான் காரணம் என்பதை அறிந்து, இந்த உடலும், மனமும், அந்த "**அறிவு**" பிரதி பிம்பிக்கின்ற உபாதிகள் என்பதை உணர்ந்துக்கொண்டனர்.

அது அவர்கள் மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற மனதின் படி நிலைகளில் உயர்ந்து, இறுதியாக, உள்ளம் என்ற மனதின் உயர்பரிமாண நிலையில், சனாதான தர்மத்தின் வேத

மந்திரங்களை அக அறிவால் கண்டவர்களாதலால், “**மந்த்ர திருஷ்டாக்கள்**” என்று தங்களைக் கூறிக்கொண்டனரே தவிர, ‘**கண்டு பிடித்தவர்கள்**’ என்று கூறிக்கொள்ளவில்லை. அதற்குக் காரணம், “**நான்**” என்ற அஹங்காரம் அற்ற நிலையில், அந்த அறிவாகவே அவர்கள் இருந்தனர்.

உண்மையிலேயே, உலகின் மிகப் பெரிய கண்டுபிடிப்புகள் எல்லாமே, தன்னை மறந்த நிலையில் இருந்த பொழுதுதான் கண்டு பிடிக்கப்பட்டவைகள் என்பதினால், “**தன்னை மறப்பது**” ஒன்று மட்டுமே, அந்த ஆனந்த அறிவை அனுபவமாக்கும் அரிய வழி! ஆகும்.

இப்படிப்பட்ட, தன்னை மறந்த தலையாய நிலைதான் தனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது என்று உணர்ந்துக் கொண்ட உன்னதமான மனிதன் தேவையற்ற உதவாக்கரை எண்ணங்களை உதறிவிட்டு, உணர்ச்சிகளுக்கு அடிமையாகமல் இருக்கிறான்

ஆனால், இன்று ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் ஆதிக்கத்தில் சிக்கிக் கொண்ட நம்முடைய நடைமுறை என்ன?

உதாரணமாக, நம்மைப் போன்ற சாதாரணமான மனிதர்கள் கோவில்களுக்கு என ஏதாவது ஒரு பொருளை நன்கொடையாக கொடுத்தால்கூட, அதில் தங்கள் பெயரை பெரிய கொட்டை எழுத்தில் எழுதி, “**உபயம்**” என்று போட்டுக் கொள்கின்றனர்.

இதற்குக் காரணம் என்ன?

அவனிடத்திலே, இது எனது, என்னுடையது என்ற எண்ணம் மேலோங்கி இருப்பதினால், அவன் அந்த இறைவனுக்கே, உதவி புரியக்கூடிய, மிகப்பெரிய பணக்காரனாக தன்னை பாவித்துக் கொள்கிறான். மமதையிலே, மனம் போனபடி எல்லாம் ஆட்டம் ஆடுகின்றான்.

அதன்காரணமாக, அனேகவிதமான தகாத செயல்களான **மது, மாது, கஞ்சா, பெண்** என எதற்காவது அடிமையாகி, தன்னை மறந்து இருக்க ஆசைப்பட்டு, தன்னையே இழக்கின்றான்.

இன்னும் சிலரோ, தன்னை மறந்து, அந்த அறிவாக மலர்வதற்கு **அற்புதம்** ஏதாவது நிகழ வேண்டும் என்று எதிர்ப் பார்க்கின்றனர்.

ஆனால், உண்மையில், அற்புதமான செயல் என்றும், சாதாரணமான செயல் என்றும் இருமைகள் எல்லாம் கிடையாது.

நாம் பார்க்கும் எல்லாவற்றிலும் “**அற்புதம்**” மட்டுமே அடங்கி உள்ளது.

ஒரே ஒரு மணல் துகளில் அந்த ‘**இருப்பு**’ அடங்கியுள்ள, அற்புதத்தை அறியாமல், இந்த மொத்த பிரபஞ்சத்தில் அற்புதம் இருக்கின்றது என்று ஆய்வுகள் மேற்கொள்வது நம்முடைய அறியாமையை மட்டுமே வெளிப்படுத்துகின்றது.

பொதுவாக நமக்கு நன்றாக ஒன்றைப் புரிந்துக் கொள்ள முடிந்தால், அதனை ‘**சாதாரணம்**’ என்றும், நமக்கு புரியாததை மட்டுமே “**அற்புதம்**” என்றும் நினைக்கிறோம்.

இதுவே, சில, நூறு ஆண்டுகளுக்கு முன்பு, யாராவது வெளி தேசங்களில் இருந்து இந்தியாவிற்கு நம்முடன் தொடர்பு கொண்ட பேச முடியுமா? என்றால், அதை **அற்புதம்** என்றுதான் அன்று கூறி இருப்போம்.

ஆனால், இன்று தொலைத் தொடர்பு வசதிகள் வாயிலாக தொடர்பு கொள்வதைக் காணும் பொழுது, அது அற்புதம் அல்ல. சாதாரணமாக இருக்கின்றது.

இதுதான் மனதின் ஏற்றிவைக்கப்பட்ட எண்ணங்கள் எனப்படுகின்றது.

இன்னும் சிலரோ, என்னுடைய முன்னேற்றத்திற்கு முக்கியத்தடையே நாம் பிறந்து, வளர்ந்த சூழ்நிலைகள்தான் காரணம் என்று குற்றம் சாட்டுகின்றனர்.

ஆனால் உண்மையில், **"சூழ்நிலைகள் மனிதனை மாற்றுவது இல்லை, மாறாக அவனை அடையாளம் காட்டுகின்றன"** என்கின்றனர் நம்முடைய அறிஞர் பெருமக்கள்.

நமக்குள் ஆழமான புரிதலை ஏற்படுத்தும், மிகவும் அற்புதமான மந்திர வாக்கியம் இது.

ஆத்ம ஞானத்தை அடைவதற்காக, நம்முடன் ஆன்மீக பாடங்களை படிக்க வந்த, மாணவர்களில் நம்முடன் கூடவே இருந்து படித்து வந்த நமது நண்பர் ஒருவர், பாடங்களை கற்று முடித்துவிட்டு, அவரது சொந்த ஊர் திரும்பியதும், மீண்டும் பழையபடி, அதே **கோபம், ஆசை, களவு** என அப்படியே இருந்துக் கொண்டு இருக்கின்றார் என்பதை, அறிந்த நீங்கள் அவரிடம்

சென்று, நீ ஆன்மீக விசயங்களை அறிந்துக்கொண்டு, மீண்டும் அப்படியே பழையபடி வாழ்வது என்பது, நீ கற்ற கல்விக்கு இழுக்கு அல்லவா? ஏற்படுகின்றது என்று கேட்டவுடன், அதற்கு அவர், "**நான் என்ன செய்வது, நான் சேர்ந்த நண்பர்களும், இப்பொழுது இருக்கும் சூழ்நிலைகளும் அப்படி உள்ளது.**" என்று கூறுகின்றார் என்றால், அது **சுத்தப் பொய்!** என்று அறியலாம்.

அதாவது, சூழ்நிலைகள்தான் மனிதனை மாற்றுகின்றது என்று கூறுவது பொருந்தாது. அதற்கு புத்தரின் வாழ்வில் நடந்த ஒரு அற்புத சம்பவத்தைக் காணலாம்.

ஒரு முறை ஒரு கிராமத்தின் வழியாக புத்தர் சென்று கொண்டு இருந்தார். அவர் அந்த கிராமத்தைக் கடந்து செல்லும் போது, பசியின் மிகுதியால், ஒருவனிடம் சென்று ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா? என்று யாசகம் (பிச்சை) கேட்கின்றார்.

அப்போது, அவர்மீது கோபம் கொண்ட அந்த கிராமத்து ஆள் புத்தரைப் பார்த்து, உனக்குதான் "**கை கால்கள் எல்லாம் நன்றாகத்தானே இருக்கின்றது. பிறகு ஏன்? பிச்சை எடுத்து சாப்பிடுகின்றாய், வெட்கமாக இல்லையா?**" '**சீ... தூ**!' என்று அவர் முகத்தில் எச்சில் உமிழ்கிறார்.

புத்தர் அதற்கு அவர் மீது எந்த கோபமும் கொள்ளாமல், மிகவும் சாந்தமாக, "**வேறு ஏதும் தர வேண்டியது இருந்தால், அதையும் சீக்கிரம் தாருங்கள் அய்யா! நான் அடுத்த கிராமத்திற்கு செல்ல வேண்டும்**" என்கிறார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த புத்தரது சீடன், இதை சகிக்க முடியாமல், சிறிது நேரத்திலேயே, புத்தரிடம், "**எப்படி குருவே இவ்வளவு பொறுமையாக உங்களால் இருக்க முடிகின்றது?, அவன் உங்கள் முகத்தில் காரி உமிழ்ந்தான். ஆனால், உங்களுக்கு அவன் மீது கோபமே வரவில்லையா?**" என்று ஆச்சரியத்துடன் கேட்கிறான்.

அதற்கு, புத்தர் பின்வருமாறு பதிலளிக்கின்றார்!...

"இதில் பொறுமை என்ற பேச்சுக்கே இடம் இல்லை. அவர் செய்ததற்கு மறுவினை ஆற்றுவதற்கு என, எனக்குள் அங்கே யாருமே இல்லை! என்பது தான் உண்மை.

**வெறும் சூனியத்தில் (அதாவது, வெட்ட வெளியில்) எச்சில் துப்பினால், அது எப்படி கடந்து போய் கீழே விழுமோ, அப்படித்தான் அவன் துப்பியது என்னை கடந்து போய் கீழே விழுந்து விட்டது.**

இந்தச் சூழ்நிலைக்கு மனம் என்பதாக மறுமொழி ஆற்றும் ஒருவன், எனக்குள்ளிருந்து அழிந்து பல வருடங்கள் ஆகி விட்டது. ஆகவே, அந்த மனிதன் என்னைக் கோபப்படுத்த, மிகவும் தாமதமாக வந்து விட்டான்" என்றே கருதுகின்றேன் என்றார் புத்தர்.

அதாவது, "**நீர் இல்லாத வெற்றுக் கினற்றில், எத்தனை முறைகள் இறைத்தாலும் நீர் எடுக்க முடியாது. அவ்வாறே, உள்ளுக்குள் கோபம் என்ற ஒன்று முற்றிலும் அழிந்துப் போன பின்பு, ஒருவனை எந்த சூழ்நிலையிலும் கோபப்படுத்த முடியாது.**" என்கிறார்.

ஆகவே, "**சூழ்நிலைகளால் மனிதனை மாற்ற முடியாது**!. **ஆனால், அவனுக்குள் இருக்கும் 'நிஜ மனிதன்' நிச்சயமாக வெளிப்பட்டு, அவனது உண்மையான சொரூபத்தை அடையாளம் காட்டுவான்**"

இதே கருத்தை, பல்வேறு அறிஞர் பெருமக்கள் பல இடங்களில் வலியுறுத்தி இருக்கின்றார்கள்.

தண்ணீர் இல்லாத கிணற்றில் நீங்கள் எத்தனை முறை நீர் இறைத்தாலும் வெறும் காலி பாத்திரம் தான் திரும்பி வரும். நிச்சயமாக நீர் வராது என்பதை அறிய வேண்டும்.

அவ்வாறே, தன்னை இழந்தவனிடம், எந்த விதமான எதிர்ப்பார்ப்புகளும், எதிர் வினைகளும், நிகழவே நிகழாது.

எனவே, "**உங்களை கோபப்படுத்தும் அல்லது எரிச்சல் மூட்டும் மனிதர்களுக்கு அல்லது வெளி சூழ்நிலைகளுக்கு மறுமொழி ஆற்றாதீர்கள். காரணம், உங்கள் மறுமொழி இல்லாமல் அவைகள் சக்தி அற்றவைகளாகவே உள்ளன.**

**ஆனால், அவைகளுக்கு சக்தி கொடுப்பதே நீங்கள் தான்**" என்பதை அறிந்துக் கொண்டு, ஏற்றி வைக்கப்பட்ட எதனாலும் பாதிப்படையாத '**வெட்டவெளி**' போன்று இருந்தீர்கள் என்றால், நீங்களும் ஒரு அற்புதம்தான்.

ஒருவன் விமானத்தில் பறந்துக் கொண்டு, வெளியில் நடக்க ஆசைப்பட்டால், என்ன நடக்கும்?

கீழே விழுந்து சாக வேண்டியதுதான்.

அவ்வாறே, மனிதன் பகுத்தறிவுடன் பிறந்து, மிருகம் போன்று வாழ்ந்தால் என்ன நடக்கும்?


அறியாமையில் உழன்று, அனைவருக்கும் அடிமையாக இருந்து, அப்படியே வேதனையுடன் வாழ்ந்து, போகுமிடம் தெரியாமல் வேதனையுடன் சாக வேண்டியதுதான்.

அதுவே, மகத்தான மனதை விசாரித்து, விவேகத்தை அடைந்து, கொடுக்கப்பட்ட புத்தியைக் கொண்டு, அந்த அறிவை அறிந்துக் கொண்டால், அந்த அறிவாகவே, தான் இருக்கின்ற, தன் சுயத்தை உணர்ந்து, தன் உண்மை சொரூபத்தில் எப்பொழுதும் நிலைத்து, நிலையான சந்தோசத்துடன் சர்வமும் ஆளலாம்.

அதாவது, நம்மிடம் எதிரியைத் தாக்குவதற்கான ஒரு இயந்திரத் துப்பாக்கி கொடுக்கப்பட்டுள்ளது. நாம் அந்த இயந்திரத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு, ஒரு கைத்தடியைப் பயன் படுத்துவது போன்று, அதைக் கொண்டு எதிரியை அடித்தால் எப்படி இருக்கும்?

சிந்தித்துப் பாருங்கள்!

அந்த துப்பாக்கியின் உண்மை இயல்பு என்ன? ஒரே நேரத்தில் பல எதிரிகளையும் தாக்கி, அழிக்கக் கூடிய அற்புதமான ஆயுதத்தை, சரியாகப் பயன்படுத்தத் தெரியாமல், அற்ப கைத்தடிப் போன்று பயன்படுத்தி, எதிரியைத் தாக்கிக் கொண்டிருந்தால், எதிரே உள்ள எதிரிகளை எப்படி அழிப்பது?



அதுவே, அந்த இயந்திரத் துப்பாக்கியின் இயல்பு என்ன என்று, அறிந்திருந்தால், அப்படி அதைக் கைத்தடி போன்று பயன்படுத்துவோமா? இல்லையே, இன்னும் சிறப்பாக பயன் படுத்தி, எதிர்களை அழித்து விடுவோம்

அதுபோன்றுதான், நம்மிடம் உள்ள காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் போன்ற அனேக எதிர்களை "**அறிவு**" கொண்டு அழித்துக் கொள்ளாமல், மனதினால், அவைகளை ஆராய்ந்துக் கொண்டு இருப்பதினால் என்ன பயன்?

இல்லையல்லவா? அவன் அந்த துப்பாக்கியை சிறப்பாக பயன்படுத்துவான் அல்லவா?

ஆகவே, இந்த மனம் ஒரு மகத்தான கருவி என்று அறிவால் அறிந்து, அதை சரியாகப் பயன்படுத்த, அதன் இயல்புகளை குறித்த '**அறிவு**' அவசியம் இருக்க வேண்டும்.

மனதின் இயல்பை பற்றி கூறும் பொழுது, ஒரு விஷயம் ஆச்சர்யத்தை அளிக்கலாம். அதாவது, எப்பொழுதும் தோன்றிக் கொண்டிருக்கின்ற பல்வேறு எண்ணங்கள் இருக்கின்றதே, அவைகள் நல்லதோ, கெட்டதோ, அவைகள் எதுவும் நீங்கள் உண்டாக்கிக் கொண்டவைகள் அல்ல!.

ஓயாமல் எப்பொழுதும் எண்ணங்கள் தோன்றுவது மனதில் இயல்பு.... ஆனால் அதை எல்லாம் தன்னுடைய எண்ணங்களாக (சிந்தனைகளாக) நினைத்து குழப்பிக் கொள்வதுதான் மனிதன் செய்யும் மிகப் பெரிய தவறு...

அதாவது, நம் உடல் உறுப்புகளில் நம்முடைய கவனம் இல்லாமலேயே நமது இதயம் துடிக்கின்றது. நமது கவனம் இல்லாமலேயே ஜீரண மண்டலம் வேலை செய்கின்றது. அவ்வாறே, சுவாசம் உடலுக்குள் வந்து போவதும், நமது கவனம் இல்லாமலேயே எப்பொழுதும் நடைபெறுகின்றது. கூறப்போனால் நமது கவனம் இல்லாததால் தான்... எல்லா சிந்தனைகளும் எப்பொழுதும் நமக்குள் வந்து போகின்றன.

பகல் நேரம் பூராவும் உள்வாங்கிய வெப்பதை இரவில் வெளியிடும் பாறையைப் போன்று, வாழ்வில் அன்றாடம் நமது கவனதிற்கே வராமல், பிரபஞ்ச மனதில் இருந்து (மற்றவர்கள் எண்ணங்கள் உட்பட) உள்வாங்கும் பலத் தரப்பட்ட எண்ணங்கள் எல்லாவற்றையுமே, நமது மனம் பல்வேறு சிந்தனைகளாக வெளிப்படுத்துகிறது. அவைகளே, இரவில் கனவாகவும் வருகின்றது.

“மனம்... பகலில் காணும் கனவு = சிந்தனைகள்...
இரவில் சிந்திக்கும் சிந்தனைகள் = கனவு" என்று கூறுவார்கள்.

இதில் நல்ல சிந்தனை, கெட்ட சிந்தனை, குற்ற சிந்தனை என எல்லாமே அடக்கம்.

இதில், அந்த சிந்தனைகளை எதனுடனும் நீங்கள் அடையாளப்படுத்திப் பார்க்காத வரை, அல்லது அந்த சிந்தனைகளுக்கு நீங்கள் மறுவினை ஆற்றாத வரை, அந்த சிந்தனைகள் எதுவுமே, உங்களுக்குள் எந்த பாதிப்பையும், மாற்றத்தையும் ஏற்படுத்துவது கிடையாது.

ஆனால், அந்த சிந்தனைகளுக்கு, நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து விட்டாலோ, அது உங்களை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்கிறது.

இப்போது நன்கு கவனியுங்கள்...!

உதாரணமாக, உங்களுக்குள் ஒரு கீழ்த்தரமான சிந்தனை வருகிறது என்று வைத்து கொள்ளுங்களேன்.

உடனே, நீங்கள் அந்த சிந்தனையை எப்படிக் கையாள வேண்டும்?

முதற்காரியமாக, மிக கவனமாக அந்த சிந்தனையை உற்றுக்கவனிப்பது... அடுத்து, அந்த கீழ்த்தரமான சிந்தனை உங்கள் உள்ளே ஓடி கொண்டிருக்க, நீங்கள் அதை ஏதோ ஒரு படம் பார்ப்பது போன்று, அது என்ன எல்லாம் சிந்திக்கிறது என சாட்சியாக கவனத்துடன் கண்டு கொண்டே இருக்க வேண்டும்.

**'ச்சே எவ்வளவு மட்டமான சிந்தனை'** என்றோ, அல்லது **'ஐயோ இப்படி ஒரு எண்ணம் எனக்குள் எழுகின்றதே என்ன செய்வேன்'** என்றோ, அதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து விட்டீர்கள் என்றால், நீங்கள் காலி...!

அது, அப்படியே உங்களைப் பிடித்துக் கொள்ளும். விடவே விடாது. உங்களை கட்டாயம் அதற்கான செயலில் ஈடுபடுத்தும்.

குறிப்பாக, ஒரு விஷயத்தை வேண்டாம், வேண்டாம் என்று மனதிற்கு அழுத்தமாகக் கூற, கூற, அது இன்னும் சற்று ஆழமாக அதைப் பிடித்துக் கொள்ளும். விடவே விடாது. அதுவே மனதின் இயல்பு.

இதை அறிந்துக் கொண்ட சிலர் செய்கின்ற தவறு, கெட்ட சிந்தனைகளில் இருந்து விடுபடுகின்றேன், என்று கூறிக் கொண்டு நல்ல சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள முயல்கிறார்கள்.

இதுவும் மிகப்பெரியத் தவறு!

ஆம், இங்கு, நல்லது கெட்டது என்பது எதை வைத்து தீர்மானிக்கப்படுகின்றது. அதுவும், அவரவர்கள் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் அடிப்படையில் அல்லவா உள்ளது?

அதுவே, அந்த தோன்றும் எண்ணங்களுக்கு நீங்கள் எந்த ஒரு பதிலும் கூறாமல், அப்படியே அதை சாட்சியாக இருந்துக் கொண்டு, உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தால், அந்த சிந்தனை எப்படி தானாக வந்ததோ, அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக பின் வாங்கிச் சென்று கடைசியில் மறைந்து விடுவதைக் காணலாம்.

உங்கள் மனம் உண்மையிலேயே தேவதையாக (அறிவாக) மாறி, தரிசனம் தருவது, இந்த க்ஷண நேரத்தில்தான்.

ஒரு வேலை, அதே சிந்தனை மீண்டும் வந்தால்? மீண்டும் அதை அப்படியே உற்று கவனிப்பது ஒன்று மட்டுமே, நீங்கள் செய்ய வேண்டியது ஆகும்.

இவ்வாறு, தனக்குள் தோன்றும் சிந்தனையை சற்றே உற்று கவனிப்பதினால், உங்களுக்குள் தானாகவே நடக்கின்ற நல்ல விசயங்கள் என்னவெனில், அன்பு, கருணை, ஆனந்தம் போன்ற பல்வேறு நேர்மறை ஆற்றல்களை கொண்ட சிந்தனைகள் உதிக்கும். அத்துடன், கோபம், பொறாமை, ஆசை, ஆற்றாமை, போன்ற எதிர்மறை ஆற்றல்களை நம்முள் இருந்து, முற்றிலுமாக மறைந்து போகச் செய்யவும் முடியும்.

இது எப்படி சாத்தியமானது?

மிகவும் நுணுக்கமாக கவனித்தீர்கள் என்றால், மனம் போன போக்கில் போகாமல், அந்த மனதை அறிவால் அறிய முற்பட்டீர்கள் அவ்வளவுதான்! இது நடந்து விட்டது.

அதை விடுத்து, தானாக பழுக்கும் பலத்தை, ஒரு தடி கொண்டு பழுக்க வைக்க முயற்சித்தால் என்னவாகும்? அந்த பழம் கெட்டுத்தான் போகும். யாருக்கும் பயன் படாது என்று அறிந்துக் கொள்ளுங்கள்.

அற்புதமான அறிவு மனிதனிடம் மட்டும்தான் மகத்தான ஆற்றலாக பிரகாசிக்கின்றது. அதை அறிந்துக் கொள்ளாமல், ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களில் சிக்கிக் கொண்டு இருக்கின்வரை, என்றுமே நம் வாழ்வில் முன்றேற்றம் என்பது இருக்காது.

அதாவது, மனதில் தோன்றும் சிந்தனைகளை உற்று நோக்கும் போது, தானாகவே நேர்மறை ஆற்றல்கள் நமக்குள் உண்டாகின்றது என்ற உண்மையை உணருங்கள். அவ்வாறே, எதிர்மறை ஆற்றல்கள் நம்மை விட்டு விலகுகின்றது என்பதையும் எளிதாக அறிந்துக் கொள்ளுங்கள்.

உதாரணமாக, உங்கள் கடைக்கு வாடிக்கையாளர்கள் வரும் பொழுது, அவர்களை நீங்கள் நன்றாக கவனித்திர்கள் என்றால், உங்கள் தொழிலில் வருமானம் கூடுகின்றது.

அதுவே, கடைக்கு வருகின்ற வாடிக்கையாளர்களை நீங்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்றால், உங்கள் வருமானம் குறைகின்றது.

இப்படித்தான் உங்கள் மனமும் செயல்படுகின்றது.

நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய, அற்புதமான ஒரு சூட்சமம். எப்போதும் உங்கள் மனதை உற்றுக் கவனிப்பது ஒன்று மட்டுமே. அதாவது, நாள் முழுவதும் மனதை கவனித்தபடியே இருந்தால், தூக்கத்தில் கூட மனதை எளிதாக கவனிக்க முடியும்.

எண்ணங்களில் நாம் ஏன் இவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்? மனதை உற்று கவனிப்பதற்கான, அந்த கவனத்திற்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

அதாவது, தொடர்ந்து நாம் சிந்திக்கும் ஒவ்வொரு எண்ணங்களும் செயல்களாக மாறுகின்றது.

இவ்வாறு தொடர்ந்து செய்யும் செயல்கள்தான் பழக்கங்களாக மாறுகின்றது. அந்த தொடர் பழக்கங்களினால் நாம் சிக்கிக் கொள்ளும் போது, அவைகளே நம் குணாதிசயங்களாக மாறுகின்றன.

அத்தகைய குணாதிசயங்கள்தான் நம்மை சுற்றி உள்ள சூழ்நிலைகளை உண்டாக்குகிறது. அந்த சூழ்நிலைகள்தான் நம்மை யார் என்று நம் நிஜத்தை நமக்கு அடையாளம் காட்டிக் கொடுக்கின்றது.

ஆகவே, என நிஜம் என்ன? நான் எப்படி இருக்கிறேன்? என்னுடைய சுபாவம் எப்படி உள்ளது? இதற்கான காரணம் என்ன? என்றவாறு நம் மனதை நாமே சற்று உற்று கவனிக்கும் பொழுதுதான், நம் மனதின் அத்தனை சேஷ்டைகளையும் நாம் நன்கு அறிந்துக் கொள்ள முடியும்.

மேலும், உங்கள் மனமும், இந்த பிரபஞ்ச மனமும் வேறு, வேறு அல்ல!. அளவான உங்கள் ஒருவரின் எண்ணங்கள் மட்டும் அடங்கியுள்ளது உங்கள் தனிப்பட்ட மனம் என்றால், அனைவரின் மொத்த எண்ணங்களும் அடங்கியுள்ளது பிரபஞ்ச மனம் எனலாம்.

அப்படிப்பட்ட, இந்த பிரபஞ்சம் எங்கும் மனிதர்களின் பல்வேறு எண்ணங்கள் பரவி இருக்கிறது. அதில் நல்ல... தரமான... வலிமையான... அன்பான... கெட்ட... பொறாமையான... என ஏறாளமான எண்ணங்கள் உண்டு.

உங்கள் மனம் எதைப் பற்றி, தொடர்ந்து சிந்திக்கிறதோ... அது சம்பந்தமான தகவலை, இந்த பிரபஞ்சத்தில் இருந்து அது ஈர்த்துக் கொள்கிறது.

அது உங்களுக்கே தெரியாத, உங்கள் தனித்திறனுக்கு அப்பாற்பட்ட தகவல்களாகக் கூட இருக்கலாம். அவைகளை உங்கள் மனதினால் கிரகிக்க முடியும்.

எனவே, உங்கள் மனதை உற்று நோக்கி, அதன் தகுதியை அறிந்து, அதற்கான வழிமுறைகளை வாழ்க்கையில் கடைப் பிடிக்கத் தொடங்கினால், உங்கள் வாழ்வு அறிவாக மலரும்.

மனதைப் பற்றிய ஒரு கருத்துள்ள கதையைக் காணலாம்...

ஒரு சீடன் தன் குருவை அணுகி, குருவே நான் இரண்டு மாடுகளை வளர்க்கிறேன். அதில் ஒன்று நல்லது. மற்றொன்று கெட்டது.

ஒரு வேளை என்றைக்காவது, இந்த இரண்டிற்கும் சண்டை வந்து விட்டால் எது ஜெயிக்கும்? என்று கேட்டான்.

அதன் பொருள், தனக்குள் நல்ல மனமும் உண்டு, கெட்ட குணமும் உண்டு. இந்த இரண்டிற்கும் சண்டை வந்தால், எது வெல்லும் என்பதுதான் அவனது கேள்வி.

பொதுவாக, நல்ல மனம் என்றும், கெட்ட மனம் என்றும் இரண்டு மனங்கள் இல்லவே இல்லை. இரண்டும் கலந்தே இந்த "**மனம்**" இருக்கின்றது.

அது தான் மனதின் இயல்பும் கூட.

ஒருவனுக்கு நல்ல மனம், நல்ல சிந்தனைகள் மட்டுமே இருக்கும்படி, அவனது மனம் படைக்கப்பட்டு இருந்தால், அதன் வாயிலாக, அவன் நல்லவனாக இருப்பதில் என்ன சிறப்பு இருக்க முடியும்?

அதுவே, நல்லதும், கெட்டதும் அவன் மனதில் கலந்து இருந்தும், அவன் நல்லவனாக மட்டுமே இருப்பது இன்னும் சிறப்பு.

நமக்குள் நல்லது, கெட்டது இரண்டும் இருகின்றதே, அப்படியானால், இந்த இரண்டில் எது வெற்றி பெறும் அதை தீர்மானிப்பது எது? என்ற சந்தேகத்திற்கான பதிலைக் குரு கொடுக்கின்றார்.

அந்த சீடனுக்கு குரு சொன்ன பதில் என்ன தெரியுமா?

எந்த மாட்டிற்கு, நீ அதிக தீவனம் போட்டு, அதிக ஊட்டச் சத்து கொடுத்து, வளர்த்து வருகின்றாயோ, அந்த மாடு மட்டுமே ஜெயிக்கும் என்றார்.

நமக்குள் தீய எண்ணங்கள் இருப்பது இயல்பு. ஆனால் நாம் அதற்கு ஊட்டம் கொடுக்காமல், நல்ல எண்ணத்திற்கு மட்டும் ஊட்டம் கொடுப்பது என்பது நமது கையில் கொடுக்கப்பட்டுள்ள அருமையான வாய்ப்பு. ஆகவே, **நம் நலம் நம் கையில்** மட்டுமே உள்ளது.

மனதை ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் எண்ணங்களை உண்டாக்கி, அதை அலைய விட்ட பின், அதை அடக்குவது கடினம்.

ஆனால் அந்த எண்ணம் வர ஆரம்பிக்கும் போதே அதை உற்று கவனித்து, அதை வர விடாமல் செய்வது எளிது!

தீய எண்ணங்களில் இருந்து தப்ப ஒரு சிறந்த வழி!. அது வரும்போதே கவனித்து, அதை வர விடாமல் தடுப்பதுதான்.

எந்த ஒரு கருவிக்கும் பராமரிப்பு கெடு என்று ஒன்று இருக்கும். அந்த கருவிகளைக் கையாளும் ஒரு நிறுவனத்தில் தினந்தோறும் பார்க்க வேண்டிய விதிமுறைவைகள் உண்டு...

வாரம் ஒருமுறை பராமரிக்க வேண்டியவைகள்... ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, பராமரிக்க வேண்டியவைகள்... அவ்வாறே, வருடம் ஒருமுறை பராமரிக்க வேண்டியவைகள் என்று பல்வேறு கருவிகள் இருக்கும்.

இதுப்போன்றே நம்மிடம் உள்ள பல்வேறு கருவிகளில், (வயிறு, கண்கள், காதுகள்...) இந்த கண்ணிற்குத் தெரியாத மனதை மட்டும், தினந்தோறும் உற்றுப் பார்த்து பராமரிக்கப்பட வேண்டிய ஒன்று.

அப்படிச் சரியாகச் செய்து வந்தால், இந்த மனம் வரங்களை அள்ளி கொடுக்கும் தேவதை ஆகின்றது. அதுவே, கவனிக்காமல் விட்டுவிட்டால், அழிவுக்கு உட்படுத்தும் பிசாசு ஆகின்றது.

இதில் எப்படி ஆகி, எதுபோன்று வாழலாம் என்பதை தீர்மானிக்கும் அறிவும் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்த அறிவு பிரதிபிம்பிக்கின்ற உபாதியான, இந்த உடல்கள் எல்லாமே, உணவினால் வளர்ந்து, உணவுகளையே

சார்ந்து, மற்றவைகளுக்கு உணவாகவே மாறுகின்றன என்கின்ற மகத்தான உண்மையை மனிதனை தவிர, மற்றவைகள் நன்றாகவே அறிந்து வைத்துள்ளன.

அதனால், அவைகள் பசிக்காக மட்டுமே உணவை நாடுகின்றன. பசி அடங்கியவுடன், அடுத்த வேளை உணவுக்கான திட்டமிடல், அவைகளுக்குக் கிடையாது.

ஆனால், ஆறு அறிவு படைத்த மனிதன் மட்டுமே, தனக்கு கொடுக்கப்பட்ட சிறப்பான பகுத்தறிவைக் கொண்டு, பயனுள்ள பல உணவுகளைப் படைத்துக் கொள்ள முடியும் என்பதினால், உணவு உற்பத்தியில் மற்றவைகளைப் போன்று, பசிக்காக மட்டும் உணவு தேடாமல், ருஷிக்காகவும் உணவை உற்பத்தி செய்து கொள்கின்றான்.

சரி! அவ்வாறு, ருஷிக்காக தயாரித்து உண்ட உணவினால், இவன் முழுமையான திருப்தியை அடைந்தானா? என்றால், இல்லை! அடுத்த வேளை உணவுக்கு, அடுத்து என்ன செய்யலாம்? என திட்டமிடவும் தொடங்குகிறான்.

இதனால், இவன் எப்பொழுதுமே எதிர்காலத்திலேயே இருக்கின்றான். ஒருபொழுதும் நிகழ்காலத்தில் இருப்பதில்லை.

இதன் காரணமாக, மனிதன் மட்டுமே உணவு சக்கரத்தின் உண்மை நிலை அறியாமல், அவைகளை கண்டபடி உண்டு, கடமைகளை மறந்து, குணபேதங்களில் உழன்று, உண்மையை உணராமல், மனம் போன போக்கிலேயே போகின்றான்.

அதனால், எல்லா உடல்களுக்கும் ஆதாரமான அந்த மெய்ப்பொருள் ஒன்றே, உள்ளும், புறமும் அறிவாய் நின்று, அனைத்து ஒரு அறிவு தாவரங்களான புல், பூண்டு, செடி, கொடிகள் போன்றவைகள் முதல் ஆறு அறிவு படைத்த மனிதன் வரை உடல்களி இயக்கத்துக்கு காரணமாக அமைகின்றது.

அந்த உடல் இயக்கத்துக்கு காரணமாக இருக்கின்ற அந்த ஒரே அறிவு, ஒரு தாவரங்களை உணவாக உட்கொள்ளும் மிருகங்கள், பறவைகள் போன்றவைகள் என எல்லாவற்றையுமே இவன் உணவாக உட்கொண்டு, இவனது உடலை வளர்த்து, இறுதியில், இவனது உடலை, இந்த மண்ணில் புதைத்து, மற்ற தாவரங்களுக்கு உணவாக உட்கொள்ள கொடுக்கின்றான்.

இதிலே, மண்ணில் வளர்கின்ற அனைத்து தாவரங்களும் புதைக்கப்பட்ட மற்ற உயிரினங்களின் மக்கிய உடல்களை உரமாக உட்கொண்டு, தங்களின் தாவர உடல்களை வளர்க்கின்றன.

அந்த வகையிலே, அனைத்து தாவரங்களும், மண்ணில் மக்கிய மாமிச பிண்டங்களையே உணவாக உட்கொள்கின்றன. ஓரறிவு தாவரம் முதல், ஆறறிவு மனிதன் வரை அனைத்துமே ஒன்றை, ஒன்று உணவாக உட்கொண்டு தங்கள் உடல்களை வளர்க்கின்றன.

அதனால், உணவுகளிலே **சைவம், அசைவம்** என்ற பேதமைகள் எல்லாம் மனித மனங்களில் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள் எனலாம்.

எனவே, அறியாமையினால் ஏற்றி வைத்த எண்ணங்களில் சிக்கிக்கொண்டு சீரழிகின்ற இந்த மனிதன், தன்னிடம் உள்ள மகத்தான அறிவை அறிந்துக் கொள்ளாமல், அறியாமையினால், உண்ணும் உணவுகளைக் கூட இரண்டு பிரிவுகளாக பிரித்து வைத்துக் கொண்டு**,** ‘**இது சைவம்**’**,** ‘**இது அசைவம்**’ என்று இருமைகளில் சிக்கிக் கொண்டு, இருமைகளற்ற இறைவ(தன்)னை அறிய ஆசைப்படுகின்றான்.



இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட அனைத்துமே ஒரு சுழற்சியில் சீராக இயங்குகின்றது. அவை அவைகளின் வட்டப் பாதைகளை மாற்றாமல், ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமல், ஒரு ஒழுங்குடன் ஒன்றை மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றது.

அதிலே, பூமியில் பிறந்துள்ள உயிரினங்களிலே மனிதன் மட்டுமே ஆறாவது அறிவான ‘**பகுத்தறிவு**’ கொண்டதினால், அதன் வாயிலாக, நன்மை, தீமைகளை அறியாமல், அவனது மனதின் பிடியில் சிக்கிக் கொண்டு, மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களை ஏற்றிக் கொண்டு, சிந்தனைகளின் வாயிலாக சின்னா, பின்னமாகிக் கொண்டிருக்கின்றான்.

ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களான சைவம், அசைவம் என்ற இருமைகளில் இருந்து விலகி, கொடுக்கப்பட்ட பகுத்தறிவால், தன் மனதை தானே உற்று நோக்கி, அதன் அம்சங்களை புத்தியினால் விசாரித்து, விபரம் அறிய முயன்றால், ஒரு உண்மை அவனுக்குள் இருந்து வெளிப்படுவதை அவன் அறியலாம்.

அதாவது, படைக்கப்பட்ட உணவு சக்கரத்தில், எல்லா உயிரினங்களும் ஒன்றை, ஒன்று உணவாக உட்கொண்டு, உடல் வளர்க்கின்றன, அந்த உடலைக் கொண்டு உயிர் வாழ்கின்றன.

அந்த வகையிலே, ஸ்தூல உடல் வருவதற்கு ஆதாரமான சூக்ஷும "**மனம்**" எப்படி காரணத் தேகத்தை மையமாகக் கொண்டு இருந்ததோ, அந்த காரணத்தேகத்தில் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களுக்கு ஏற்றவாறு, இந்த உடல் பல்வேறு ஏற்றத் தாழ்வுகளுடன் காணப்படுகின்றது.

இதிலே, மற்ற உயிரினங்கள் அவை அவைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட உணவை மட்டுமே உணவாக உட்கொண்டு, மற்றவைகளின் உணவு விசயத்தில் விபரீதங்களை ஏற்படுத்தாமல், விவேகத்துடன் இருக்கின்றன.

ஆனால், ஆதி மனிதனுக்கு எதிரான இன்றைய மனிதன் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களினால், மற்றவைகளின் உணவு விசயத்தில் உள்ளே நுழைந்து, அவைகளின் உணவு சக்கரத்தை உடைத்து, அவைகளின் அற்ப உணவுகளை இவன் அபகரித்துக் கொண்டு, விவேகமற்றவனாகவே இருக்கின்றான்.

உண்ணும் உணவுகளில் எதை வேண்டுமானாலும் உண்ணலாம் என்று, கண்டதைக் கண்டபடி உண்டுக்கொண்டு இருந்தால், அவன் என்றுமே அந்த மனதின் பிடியில் இருந்து விடுபட முடியாது.

ஆம்! உண்ணும் உணவைக் கொண்டே இந்த மனம் இயங்குகின்றது.

அந்த வகையிலே, ஓரறிவு கொண்ட தாவர உணவுகளை உணவாக உட்கொள்ளும் மனிதனின் "**மனம்**" ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் தாக்கத்தில் இருந்து விடுபட்டு, புத்தி சக்தியாக பரிணமிக்கின்றது.

அதற்குக் காரணம், அந்த தாவரங்கள் ஒரே இடத்தில் நிலையாக நிற்பதினால், அவைகளை உணவாக உட்கொள்ளும் பொழுது, மனித மனமும் அங்கும், இங்கும் அலைப்பாயாமல் நிலையாக நிற்கின்றது.

அதுவே, ஐந்தறிவு கொண்ட மிருகங்கள், பறவைகள் போன்றவைகளை உணவாக மனிதன் உட்கொள்ளும் பொழுது, அவைகள் உணவுக்காக, அங்கும், இங்கும் அலைந்து உணவைப் பெறுவதை போன்று, அவைகளின் எண்ணங்களும், குணங்களும், மனித மனதில் மேலும், ஏற்றி வைக்கப்பட்டு, இன்னும் ஏராளமான எண்ணங்களுக்கு ஆளாகி, அந்த எண்ணங்களின் காரணமாக, ரஜோகுணத்தில் எதையோ தேடிக் கொண்டு, இங்கும், அங்கும் அலைந்து ஓடிக் கொண்டிருக்கின்றான்.

அற்ப உணவுகளுக்கு ஆசைப்பட்டு, அரிய அறிவை அறிய முடியாமல், அலைப்பாய்கின்ற இந்த மனித மனம் **சைவம், அசைவம்** என்று இருமைகளில் சிக்கிச் சீரழிவதைக் காணும் பொழுது, இவனைப் பகுத்தறிவு கொண்ட மனிதன் என்று எப்படிக் கூறுவது?

அதனால்தான் இவனை மனித உடல் கொண்ட மிருகம் என்று கூறப்படுகின்றது.

ஆகவே, மனிதன் மகாத்மாவாக மாறாவிட்டாலும், ஒரு சராசரி மனிதனாகவாவது வாழ வேண்டும் என்றால், நிச்சயம் அவன் ஒரு அறிவு தாவரங்களை மட்டுமே உணவாக உட்கொண்டு வாழ்ந்து வந்தால், அந்த உணவே அவனுக்கு மருந்தாகி, மற்ற இராசயண மருந்துகளை அவன் நாட வேண்டிய அவசியம் உண்டாகாது.

அத்துடன் சைவம், அசைவம் என்ற இருமைகளில் இருந்தும் விடுபட்டு, "**போதும் என்ற மனமே**! **பொன் செய்யும் மருந்து**!" என்ற அறிவாகவும், அவன் மனமற்ற நிலையில் மலரவும் முடியும்.

# 5. தனி மனமே பிரபஞ்சமனம்

மனித சரீரத்தைக் கொண்டு, மனதில், ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள் ஏதுமற்ற நிலையில், மகத்தான அந்த ஏக அறிவை எளிதாக அனுபவத்தில் அறிய முடியும் என்பதினால், படைக்கப் பட்ட உடல்களிலேயே பகுத்தறிவு செயல்படக்கூடிய பயனுள்ள ஒரே உடலாக இந்த மனித உடலே உள்ளது.

பரம(தன்)னை அறியாத பாமரனாக, இந்த மனித உடலில் வாழ்வதை விட, பகுத்தறிவற்ற ஐந்தறிவு கொண்ட மிருகங்களாக வாழ்வதே மேலானது எனலாம்.

படைக்கப்பட்ட பல்வேறு உடல்களிலேயே, கிடைத்தற்கு அரிய உடலான, இந்த மனித சரீரத்தைக் கொண்டு, மனிதன் மட்டுமே, தன்னை யார்? என்று, மனதினை விசாரித்து, விவேகத்தை அடைந்து, விழிப்புற்ற புத்தியினைக் கொண்டு, அந்த அறிவாகவே இருப்பதை அறிய முடியும்.

அரியவேண்டிய அறிவை அறியாமல், அறியாமையினால், அனேக எண்ணங்களை படைப்பதும், அவைகளை அனுபவத்தில் கொண்டுவந்து, காப்பதும், கடைசியில் அவைகளை அழிப்பதும் என இந்த மனமே, படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களைப் புரியக்கூடிய ஈஸ்வரனாகவே இருக்கின்றது. அதனால்தான் இதை '**மாயை**' என்று சாஸ்திரமும் அழைக்கின்றது.

தனி மனித மனதை '**வியஸ்டி**' மனம் என்றும், இந்த மொத்த பிரபஞ்ச மனதை '**சமஸ்டி**' மனம் என்றும் கூறப்படுகின்றது.

அந்த வகையிலே, சமஸ்டி எண்ணங்களான, இந்த பிரபஞ்ச மனம், தன்னை வெளிப்படுத்திக் கொள்வது எல்லாமே, தனித்த எண்ணங்களான இந்த வியஸ்டி மனதின் வாயிலாகத்தான் என்பதையும் எளிதாக அறிய முடிகின்றது.

அது எப்படி எனில், நம்முடைய தனித்த மனம் ஒரு லட்டு சாப்பிட ஆசைப்படுகின்றது என்று வைத்துக் கொள்ளுங்களேன். இந்த எண்ணம் கண்ணிற்குத் தெரியாமல், நம்மிடம் முதன் முதலாக எண்ணமாக மட்டுமே உதிக்கின்றது.

இந்த எண்ணம் உதித்தவுடனேயே, நாமும் லட்டு செய்வதற்கான ஒரு செயலில் இறங்கி, கடலைமாவு, சர்க்கரை, எண்ணெய் எனக் கொண்டு, இந்த லட்டை செய்து முடிக்கின்றோம்.

இதுவரை, கண்ணிற்குத் தெரியாமல் வெறும் சூக்ஷும எண்ணமாக மட்டுமே இதுவரை இருந்த லட்டு, செயலால் கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூல லட்டாக வெளிப்பட்டு, நம்மால் அனுபவிக்கப்பட்டு (உண்ணப்பட்டு) மீண்டும், நம் கண்ணிற்குத் தெரியாத லட்டாக மாறியதிலிருந்து எல்லாமே எண்ணங்கள் என்று அறிய முடிகின்றது அல்லவா?

கண்ணிற்குத் தெரியாத ஒரு எண்ணம், கண்ணிற்கு முன்பு காட்சியாக மாறி, மீண்டும், அது, கண்ணிற்குத் தெரியாமல் காணமல் போய் விட்டது.

இதைத்தான், **காட்சி, காண்பான், காணப்படும் பொருள்** என மூன்றும் ஒன்றாகி விடுகின்றது.

அதாவது, அனுபவம், அனுபவிப்பவன், அனுபவிக்கப்படும் பொருள் என்றும் கூறலாம்.

இதையே '**திரிபுடி**' எனப்படுகின்றது.

யோசித்துப் பாருங்கள்!

ஒரு எண்ணம் கண்ணிற்குத் தெரியாத சூக்ஷுமமான எண்ணமாக உதயமாகி, அது அனுபவத்திற்கு கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூலத்தில் வந்து, மீண்டும், அது கண்ணிற்குத் தெரியாத சூக்ஷுமமாகவே மாறி விட்டது.

உண்மையில், நடந்தது என்ன?

ஒரு எண்ணம் உதயமாகி, அனுபவத்திற்கு வந்து, மீண்டும் மறைந்து போனது. அதுப்போன்றே, இந்த மொத்த பிரபஞ்சமும் நம்முடைய மனதினால்தான் படைக்கப்பட்டுள்ளது. இந்த பிரபஞ்ச தோற்றம் அனுபவத்திற்கு தற்பொழுது உள்ளது. ஒரு நாள் இந்த உடல் (மனம்) அழியும் பொழுது, இந்த பிரபஞ்சம் மறைந்து விடும்.

எனவே, இவ்வாறு வந்து போகின்ற எதுவும் உண்மையல்ல. அவைகள் எல்லாமே ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள் என்பதினால்தான் அதை '**மாயை**' என்று சாஸ்திரம் அழைக்கின்றது.




அதனால்தான், இந்த ஒட்டு மொத்த பிரபஞ்சத்தை "**ஈஸ்வரன்**" என சாஸ்திரம் கூறுகின்றது. அந்த ஈஸ்வரனைத்தான் சக்தி, மாயா என்றெல்லாம் நாம் அழைக்கின்றோம்.

இதையே, நாம் முத்தொழில் புரிகின்ற (**பிரம்மா, விஷ்ணு, ருத்ரன்**) மூன்று மூர்த்திகளாகவும் கற்பித்துக் கொள்கின்றோம்.

தினசரி பிரளயமான ஆழ்ந்த உறக்கத்தில் நாம் எப்படி, நம்மை யார்? என்று அறிய முடியாமல், காரண தேகமான சஞ்சிதத்தில் ஒடுங்கி விடுகின்றோமோ?, அதுப்போன்று, மகா பிரளயத்தில், இந்த ஒட்டுமொத்த பிரபஞ்சமுமான **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழில் புரிகின்ற ஈஸ்வரன் எனப்படுகின்ற '**பிரபஞ்சமனம்**' முதற்கொண்டு, அனைத்தும் அந்த ஒன்றேயான பரப்பிரம்மத்திடம் ஒடுங்கி விடுகின்றது.

இங்கு **சஞ்சிதம்** என்பது, பல்வேறு பிறவிகளாக ஏற்றி வைத்துக் கொண்ட நல்லது, கெட்டது போன்ற ஏராளமான எண்ணங்களின் ஒட்டு மொத்த தொகுப்பு.

அவ்வாறே, **பிராரப்தம்** என்பது, நம்மால் ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களிலிருந்து, சில எண்ணங்களை (ஆசைகளை) மட்டும், இந்த உடல் வாயிலாக அனுபவத்திற்கு கொண்டு வந்து நடைமுறைப் படுத்துவது ஆகும்.

அத்துடன், **ஆகாமியம்** என்பது, இந்த உடலின் வாயிலாக, அடையக் கொண்டு வந்த, ஆசைகளை (எண்ணங்களை) அனுபவித்துக் கொண்டுள்ள போதே, மேலும் சில, புதிய ஆசைகளை (எண்ணங்களை) ஏற்றி வைத்துக் கொண்டு, அவைகளை எல்லாம் சஞ்சிதத்தில் கொண்டு சேர்ப்பது ஆகும்.

ஆக, ஆசைகள் என்ற ஏற்றி வைக்கப்பட்ட நல்லது, கெட்டது போன்ற இருமை எண்ணங்கள் இல்லாத இடத்தில் மட்டுமே, "**இறை அனுபவம்**" உண்டாகும்.

இருமைகள் அற்ற இடத்தில் மட்டுமே, ஒன்றேயான இறைவன் இருக்க முடியும். அந்த இறைவனுக்கு வேறாக மற்றொன்று இருக்குமானால், அந்த இறைவனை பூரணம் (முழுமையானவன்) என்று கூறவும் முடியாது.

எனவேதான், சாஸ்திரம் இந்த மூன்று கர்மாக்கள் (சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம்) மற்றும், மூன்று கடவுள்கள் பிரம்மா, விஷ்ணு, சிவம் (ருத்ரன்) போன்றவைகளைக் கடந்தால்தான், அந்த அறிவை அனுபவமாக அறிய முடியும் என்கின்றது.

நிர்குணமான அந்த ஒன்றேயான பரப்பிரம்மத்தை (அறிவை), குணங்களுக்குள் கொண்டு வந்து, சகுண பிரம்மமாக (ஏற்றிவைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களாக) மாற்றி வைத்துக்கொண்டு, அவைகளைப் பல கடவுள்களாகக்

கொண்டாடுகின்ற வரையிலும், அந்த அறிவை அனுபவமாக அறிய முடியாது.

ஆகவே, பல்வேறு எண்ணங்களின் தொகுப்பாகிய இந்த '**மனம்**' ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள் ஏதுமற்ற நிலையில், விசாரத்தின் வாயிலாக, விழிப்புற்ற புத்தியினைக் கொண்டு, அந்த அறிவை அறிந்துக் கொண்டால், அன்றே, ஏற்றிவைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் தொகுப்பாகிய, **சஞ்சித கர்மா** என்ற, பல்வேறு பிறவிகளாக இந்த உடல் கிடைப்பதற்குக் காரணமான, காரணத் தேகமும் அழிந்து விடுகின்றது.

இந்த காரணத் தேகமான சஞ்சித கர்மா அழிந்து விட்டால், மற்ற பிராரப்தம், ஆகாமியம் போன்ற கர்மாக்கள் தோன்றுவதற்கு உடல் உண்டாகாமல், மனமற்ற நிலையில், அந்த அறிவாகவே நம் சொரூபத்தில் நாம் இருப்போம்.

ஆகவே, வந்து போவது எல்லாமே உண்மையில்லை. அது மனதினால் ஏற்றி வைக்கப்பட்ட தோற்ற மாயை! என்பதை எளிதாக அறிந்துக் கொண்டு, மனதை விசாரித்து, அந்த மனதிலிருந்து முழுமையாக விடுதலைப் பெறுவது ஒன்றே "**வீடுபேறு**" அல்லது "**மோக்ஷம்**" என்றும் அழைக்கப்படுகின்றது.

எனவே, எப்பொழுதும் எது இருக்கின்றதோ?, அதுவே, **சத்தியம்**!, அதுவே, **நித்தியம்**. அதுவே, **அறிவு**! அதுவே, **பிரம்மம்**.

ஆக, **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழில் புரியக் கூடிய ஈஸ்வரன் என்று ஒன்று தனியாகக் கிடையாது. அந்த '**ஈஸ்வரனாகவே நான் இருக்கின்றேன்**' என்பது மட்டுமே உண்மை.

இவ்வாறு, தனித்த ஒரு எண்ணம் உதயமாகி, அது அனுபவத்திற்கு வந்து, அழிந்து போவது போன்று, அனைத்து எண்ணங்களின் மொத்தத் தொகுப்பாக உள்ள இந்த மொத்த பிரபஞ்சமே பல்வேறு எண்ணங்களின் ஒட்டு மொத்த தொகுப்பு (சமஸ்டி) என்பதினால், இந்த ஒட்டுமொத்த பிரபஞ்சமே ஈஸ்வரன் எனும் பொழுது, அந்த ஈஸ்வரனின் தனித்தனி எண்ணங்களே, இந்த பிரபஞ்சத்தில், காணப்படுகின்ற தனித்தனியான (வியஸ்டி) உடல்கள் (மனங்கள்) எனலாம்.

இந்த தனித்த வியஸ்டி உடல்களின் (மனதின்) வாயிலாக வெளிப்படுகின்ற எண்ணங்கள் எல்லாமே, ஒட்டுமொத்த (சமஸ்டி) ஈஸ்வர எண்ணங்கள் என்பதினால், இவ்வாறு ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களில் இருந்து, நம்மால் செய்யப்படுகின்ற செயல்கள் எல்லாமே, அந்த ஈஸ்வர செயல்கள் என்பதை அறிந்துக் கொண்ட அறிஞர் பெருமக்கள், "**என் செயலாவாது ஒன்றுமில்லை, எல்லாம் நின் செயலே**" என்று அனைத்தையுமே ஈஸ்வர காரியமாகக் கண்டனர். செயலில் செயலற்ற நிலையை அடைந்தனர்.

ஒரு நாளும் அந்த ஈஸ்வனுக்கு வேறாக "**நான்**" என்ற மனம், புத்தி, அஹங்காரம் இன்றி அந்த ஏக அறிவாகவே (இறைவனாகவே) இருந்தனர்.

இவர்களிடம் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களினால் உண்டான இருமைகள் இல்லாததினால், இவர்கள் அந்த அறிவாகவே பிரகாசித்தனர்.

அந்த ஏக இறைவனே (அறிவே), அனேகனாக இந்த பிரபஞ்சத்தில் பல உடல்களின் வாயிலாக பிரதி பிம்பிக்கின்றதே தவிர, உண்மையில், இங்கு **ஈஸ்வரன்** என்றும், **ஜீவன்** என்றும் இரண்டாகக் கூறப்படுவது எல்லாமே, ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களினால்தான் என்பதை, என்று எளிதாக அறிய முடிகின்றதோ, அன்றே, இருமைகள் கடந்த, அந்த ஏக அறிவாகவே (பிரம்மமாகவே) "**நான்**" இருப்பு கொண்டுள்ளேன் என்றும் அறிய முடியும்.

அனைத்து உடல்களிலும் அந்த அறிவை அனுபவமாகக் கண்டு ஆனந்தப்படவும் முடியும். ஆக, அந்த ஆனந்தம் இருப்பு கொண்டுள்ள, அந்த அறிவை "**சத்சிதானந்தம்**" எனப்படுகின்றது.

(**சத்** - இருப்பு, **சித்** - அறிவு)


அந்த ஒன்று மட்டுமே "**இருப்பு**", அதுவே, "**அறிவு**".

அதற்கு வேறாகக் காணப்படுவது அனைத்துமே "**மித்யா**" எனப்படுகின்றது.

ஆக, சாஸ்திரம் கூறவருகின்ற மகாவாக்கியத்தின் மகத்தான பொருளான "**பிரம்மம் சத்தியம், ஜகத் மித்யா**" என்பது இப்பொழுது, எளிதாகப் புரிகின்றது அல்லவா?

**ஓம் தத் சத்!**

# அறிவை அறியும் அறிவு!



இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கோள்கள் மற்றும் இந்த பூமியில் உள்ள அனைத்து உடல்களும், அதனதன் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப, அந்த ஒரே அறிவை பலவாறாகப் பிரதி பிம்பிக்கின்றது.

அத்துடன், அதை அறியக்கூடிய அறிவாகவும் அது மட்டுமே இருக்கின்றது.